


1960 விஹாரி ௵







கற்றதனலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

செந்தமிழ் நாடென்னும் போதினிலே-இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே

## வலி-வடக்கு தமிழாசிரியர் சங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

❁ எந்த இடத்திலும்
❁ எப்பொழுதும்
❁ எந்நேரத்திலும்



செல்லம்ஸ்

கவர்ச்சியான படங்கள் பிடிக்க ஏற்ற ஸ்டுடியோ

போன்: 436

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வைத்தியசாலை

**கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.**

மக்கள் நன்மையையும், வசதியையும். சுகாதார வாழ்க்கையையும் நோக்கமாகக் கொண்ட சிறந்த வைத்தியசாலை இதுவே

**ஸ்தாபிதம் : : 28-11-58**

*திறக்கப்படும் நேரம்: காலை 7-30 தொடக்கம்*
*மாலை 9 மணி வரை*

*அவசர* கேஸ்கள் இரவு பகல் எந்த நேரத்திலும் கவனிக்கப்படும்.

*உயர்தர ஆங்கில சிகிச்சை பெற உதவுமிடம்*

OUR MOTTO IS SERVICE

# PEOPLE'S DISPENSARY

(MANAGING PROPRIETOR : MR. K. S. KANDIAH)

## CHUNNAKAM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For Pleasing results
"PRINCE" : : CHUNNAKAM



சிறந்த போட்டோக் கலைக்கு
"பிறின்ஸ்" படப் பிடிப்பாளர்
சுன்னுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெற்ப ஸ்திரீகள்

கெற்ப ஸ்திரீகளைக் கஷ்டப்படுத்தும் நோய்களில் சோகை அல்லது காமாளையும் ஒன்று. கண், வாய், நாக்கு, உதடு இவைகள் வெளுத்திருக்கும். நடக்க சக்தியிராது; வேகமாய் நடந்தால் சுவாசம் முட்டும்; ஈரல்குலை (இரத்தாசயம்) திக் திக்கென்று அடிக்கும்; படபடப்பை உண்டாக்கும்; தேகம் சற்று ஊதலாகவும், வெளுத்தும், மினுமினுப்பாயுமிருக்கும், இவ்வளவு குணங்களும்

## "ராதா"
## பிளட்டானிக்

எனும் இவ் ஔஷதத்திலை் குணமாகும். சிறந்த மூலிகைகளினுலும் லோகங்களின் சத்துக்களினுலும் தயார் செய்யப்பெற்ற ஓர் சிறந்த சஞ்சீவி.

கெற்ப ஸ்திரீகளுக்கு கெற்ப காலத்திலும் பிரவசத்துக்குப் பின்னும் உண்டாகும் சோகை, மூலம், கால்வீக்கம், மயிர் உதிர்தல், இவை நீங்கும். திடமான குழந்தை பிறக்கும். பால் கொடுக்கும் தாய்மாருக்கும் சிறந்த ஔஷதம்.

8 அவுன்ஸ் புட்டி ரூபா 3-00. பார்சல் செலவு வேறு.

## கூந்தலைக் கறுத்து
## நீண்டு அடர்த்தியாக வளரச் செய்வது
## "ராதா"
## கிங்கோக்கனட் ஆயில்

கூந்தல் அழகிற்கும் வசீகர தோற்றத்திற்கும் இதுவே சிறந்தது.

இலங்கை ஏஜண்ட்ஸ்:

## எஸ். சுப்பிரமணியம் அன் கோ


**53, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரகாஸ் ஸ்ரோர்ஸ்

**33. கஸ்தூரியார் ரேட் : யாழ்ப்பாணம்.**

பலவருடங்களாக அநேகர்களின் ஆசிகளைப்பெற்று பிரபல்யமாக விளங்கும் எமது ஸ்தாபனத்தில் காலத்திற்கேற்ற கவர்ச்சிகரம் நிறைந்து



**செருப்புக்கள்**




**சப்பாத்துக்கள்**

இன்னும் பலதரப்பட்ட வகையிலும், தேவையான அளவு களிலும் விரும்பிய நிறங்களிலும் ஆண்கள், பெண்கள், பள்ளிக்கூடப் பிள்ளைகள், குழந்தைகளுக்கும் எந்தநேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கீழ்க்காணும் இறக்குமதியாகும் சப்பாத்து வகைகளும் பெறலாம்.

1. ஜோன்வைற்
2. பாட்டா
3. கோப்சூஸ்
4. போம் ரெட்ஸ்
5. சின்வா
6. சப்ளி




இன்னும் தேவையான **தொப்பி** வகைகளையும் பெற்றுக்கொள்ள

ஒருமுறை எமது ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவ **சி. உ. சோமசேகரம்** அவர்கள்
கல்வி அதிகாரி
வடமாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## வடமாகாணக் கல்வி அதிகாரி அவர்கள்.

**ஆசிரிய சகோதரர்களே!**

உங்கள் சங்கம் இருபத்தைந்தாவது பிராயத்தை அடைந்துவிட்டது. நீங்கள் எல்லோரும் அவளிடம் அன்பு கொண்டிருக்கிறீர்கள். ஒரு பெண்ணின் வாழ்க்கையில் இருபத்தைந்தாவது வயது மிக முக்கியமான கட்டம் அவள் தன்னுடைய கல்வி பயிலும் புதிய முறைகளைப் பரீட்சித்துப் பார்க்கும் பிரமசாரியப் பருவத்தைக் கடந்து புதிய சந்ததிகளை உண்டாக்கும் கிரகஸ்தப் பருவத்துக்கு வந்துவிட்டாள். இவ்வளவு காலும் அவள் அன்னிய வழிகளையும் கொள்கைகளையும் ஏற்று வெள்ளைச்சட்டை அணிந்து சுகமான வாழ்க்கை நடத்தும் அரசாங்க ஊழியர்களையே உண்டுபண்ணியிருக்கிருள். இப்படிப் பட்ட ஒரு குழந்தை இனி வருங்காலத்தில் செழித்தோங்க முடியாது என்பது எல்லோருக்கும் தெளிவு. "ஸ்பாற்றர்' களது வாழ்க்கைமுறையைப் போல, எளிமையான வாழ்க்கையும் வாழ்க்கையின் முக்கிய தேவைகளான உணவு, உடை வீடு ஆகியவற்றைப் போராடி எடுக்கும் கடுமையான உழைப்பும்தான் வருங்காலத்திற்கு உகந்தது. இவற்றைப் பெற்றபின்தான் வருங்காலச் சமூகம் தன்னுடைய போகத்திற்கேற்ற வசதிகளையும் சுகவாழ்க்கையையும் எதிர்பார்க்கலாம்.

ஒரு ஆசிரியன் தனது மாணவர்களை முதலில் தன்னுடைய முன்மாதிரியினுல்தான் பயிற்றுகிருன். ஆனபடியால் நீங்கள் உங்கள் வாழ்க்கையை புதிய முறைக்கேற்ப அமைக்கவேண்டும். பின்னர் நீங்கள் விரும்பிய விளைவுகளைக் கொடுக்கும் கல்வி முறைகளை ஆராயவேண்டும். பாடத்திட்டத்தைவிட அதை நீங்கள் எடுத்தாளும் முறைதான் முக்கியமானது. நாட்டிற்கு எது தேவை என்று அரசாங்கம் எடுத்துக்கூறத் தேவையில்லை. அதற்கென பிரமாணங்களும் வகுக்கத் தேவையில்லை. நீங்களாகவேதான் அவற்றை ஆராய்ந்து அறிந்து கையாளவேண்டும்.

அடுத்த பத்தாண்டுகளுக்குள் உங்கள் சங்கம் எங்கள் சமுகத்தின் புதிய அமைப்புக்கேற்ற சிசுவை உண்டாக்க ஆண்டவன் வழிகாட்டுவார் என நம்புகிறேன்.

(ஒ-ம்) **சி. உ. சோமசேகரம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம் மகிழ்ச்சியில் மலர்ந்தது

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர்
ஆசிரியமணி கே. எல். இராஜேந்திரம்.

# ஆசிரிய விருத்தம்

---

இயற்கையை வென்றே யேற்றமுற் றிலங்கும்
இனியயாழ்ப் பாணநன் னாட்டில்
மயற்கைபோய் நீங்க மனவளம் பெருக்கும்
மாண்புசேர் கலைப்புல வோரும்
புயற்கைசேர் வண்மைப் புரவலர் பலரும்
போற்றிய மரபை யாசிரியர்
இயக்கமா மசையா விசைகொள் தாபனங்கள்
இருகண்போற் காத்துநிற் பனவே. 1

கல்வியு மறிவும் கனிமனப் பண்பும்
கருத்தினி லுணர்ச்சியு மமைவும்
சொல்வளம் சமூக வொப்புர வுண்மை
துலங்கிடு பரம்பரைத் தொடர்பும்
செல்வமா யமைந்த வுடல்வள நலனும்
தேசிய அடிப்படை நோக்கும்
பல்வகைப் பரந்த கொள்கையும் படைத்தோர்
பலரங்கம் வகிப்பரிங் கவற்றில். 2

வல்லமை சேர்ந்தோர் குலமென வாழ்ந்து
மதிப்பினை யுயர்த்திமா ணவர்க்கு
நல்லன தேர்ந்து புகட்டியே நாட்டின்
நவசிற்பி யாரென வயங்கிப்
புல்லறி விருள்போய்ப் புத்தொளி மிளிரப்
புவியினிற் தம்மையே போன்று
கல்வியிற் பண்பிலுருப்பெறச் செய்வோர்
கலைத்தொண்டால் வளர்வதா பனங்கள். 3

சூழ்ந்தநன் னோக்கும் சூழ்நிலைக் கேற்ற
தொடர்புள கல்வியை யமைத்தற்
காழ்ந்தசிந் தனையும் தாய்ச்சபை யுடன்சேர்ந்
தரும்பிரச் சினைகளைத் தீர்த்தே.
தாழ்ந்தபிற் போக்குச் சக்திகளோட்டித்
தகுவலி காமநல் வடக்கில்
வாழ்ந்திடு தமிழா சிரியர்நற் சங்கம்
வளர்ந்தையைந் தாண்டுபுக் கதுவே. 4

செந்தமிழ்த் தெய்வச் செழும்பொழி லதனிற்
தேர்ந்தினி தாய்ந்தசொல் மலரைச்
சிந்தனை யென்னு மினியநன் னாரிற்
செவ்விதாத் தொடுத்தமைத் தணிசேர்
சந்தமார் கலைப்பண் பெனுமணங் கமழச்
சாத்தியே தாரணி யுவப்ப
வந்தசீர் வெள்ளிவிழா வணி கண்டு
மகிழ்ச்சியில் மலர்ந்த தெம்மனமே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர்

**ஆசிரியமணி K. L. இராஜேந்திரம் அவர்கள்**

ஆசிரிய சமூகமெனும் பசுஞ்சோலைப் பூங்காவில் இதுபோற் பல வெள்ளி, பொன், வைர விழா மலர்கள் நிறைந்து மலர்ந்து நறுமணங்கமழ வேண்டுமென விரும்புகின்றேன்.

❁

நாடகக்கலையைப் புத்துயிரூட்டி முன்னேற்ற மடையச் செய்வதையே தமது வாழ்க்கை இலட்சியமாகவுடைய முத்தமிழ் விற்பன்னர் உயர் திரு. ஔவை டி. கே. ஷண்முகம் அவர்கள் :—

ஔவை அகம்
139/B. லாய்ட்ஸ் ரோட்,
சென்னை 6.

இலங்கை வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் வெள்ளி விழா நடைபெறவிருப்பதறிந்து மகிழ்கிறேன். இவ் விழாவினையொட்டி மலர் ஒன்று வெளியிடுவது மிக நல்ல முயற்சி.

சங்கத்தின் நன்முயற்சிகள் வெற்றிபெறவும் இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள் அனைத்தும் நீங்கி நல்வாழ்வு பெறவும் இறைவனை வேண்டுகிறேன்.

அன்பு
**டி. கே. ஷண்முகம்**
30-12-59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சங்க வரலாறு | |
| 2. | குயிலே தமிழ்காக்கக் கூவாய் | 9 |
| 3. | உண்மைக் கல்வி | 14 |
| 4. | பிள்ளை வளர்ப்பு | 19 |
| 5. | ஈழோர் எழிலே நாட்டின் நல்வளம் | 21 |
| 6. | கலைவழி | 22 |
| 7. | பழந்தமிழரின் இணைப்பு மணம் | 26 |
| 8. | சோமசுந்தரப் புலவரின் வரலாறு | 35 |
| 9. | வசந்தன் ஆடல் | 48 |
| 10. | சி. கணேசையர் அவர்கள் | 51 |
| 11. | குமாரசாமிப் புலவர் | 54 |
| 12. | பெண்மைக்கிணையுண்டோ | 60 |
| 13. | இளங்கோவின் கடவுட் கொள்கை | 65 |
| 14. | பாஷையின் இயல்பு | 69 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்க வெண் பொன் மலர் 1960

# சங்க வரலாறு

இறைவன் திருவருளால் வெண் பொன் விழாவைக் கொண்டாடத் தக்க நிலையையடைந்துள்ள நமது சங்கம் தோன்றிய நாட்டொட்டு இன்றுவரை தமிழ் மொழிக்கும் தமிழ்க் கலைக்கும் செய்த தொண்டுகளைப் பொதுவாகவும் ஆசிரிய சமுதாயத்திற்குச் செய்த சேவைகளைச் சிறப்பாகவும், எண்ணிப் பார்ப்பது தகவுடைத்தாகும். பாடசாலைகளும் ஆசிரியர்களும் படிப்படியாகக் கூடிக் கொண்டு வந்திருப்பது போல ஆசிரியரின் உரிமைகளும் பாதுகாப்புகளும் தேசியக் கல்விமுறைகளும் வளர்ச்சியுறவில்லையென்பது யாவருமறிந்ததே. கல்வி சம்பந்தமான சட்ட திட்டங்கள் காலஞ் செல்லச் செல்ல ஆசிரியர்மாரையும் தமிழ்க் கல்வியையும் கஷ்டத்திற்குள்ளாக்கியமையால் ஆசிரியர்மார் தனித்தனி தங்குறைகளையெடுத்துக் கூறிக் கிளர்ச்சி செய்யத் தலைப்பட்டனர். தனிப்பட்ட முறையில் ஆசிரியர் செய்த கிளர்ச்சிகள் அரசாங்கத்திலோ பிறவிடங்களிலோ பெரும் பயனளிக்காதிருந்தமையைக் கண்டுணர்ந்தனர். இதனால் ஆசியரனைவரையும் ஒன்றுபட்டுத் தமது கோரிக்கைகளைக் கேட்கத் தலைப்பட்டனர். இதன்பயனாக 1911 ஆம் ஆண்டுதொடக்கம் ஆசிரியர்களையும் ஆசிரிய அனுதாபிகளையும் கொண்ட சபையினை நிறுவி அச்சபை மூலம் தமது வேண்டுகோள்களை வெளிப்படுத்தினர். இதிலிருந்து பெரும்பயன் பெறலாமெனக் கண்டுணர்ந்த தகைமை வாய்ந்த பல ஆசிரியர்கள் 1921 ஆம் ஆண்டில் முந்திய சபையைப் புனருத்தாரணஞ் செய்து வட இலங்கைச் சுதேச பாஷாபிமான சபையை நிறுவினார்கள். இச்சபையினின்றும் வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் தோன்றலாயிற்று. வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் தோன்றிய சில காலத்தின்பின் அதன் கிளைச் சங்கங்கள் பல தோன்றலாயின. அக் கிளைச்சங்கங்களுள் ஒன்றாகிய வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்கம 1930 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை தெல்லிப்பழையிலுள்ள துவிபாஷா பாடசாலையில் ஆரம்பமாயிற்று. இச் சங்கத்தை நிறுவுவதற்கு அரும்பாடுபட்டுழைத்தவரும் சங்கத்தின் ஆரம்ப கூட்டத்திற்குத் தலைமை வகித்தவருமாகிய பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயரவர்களின் சேவை பாராட்டப்படத் தக்கதொன்று. ஆங்காங்கு தனித்திருந்த ஆசிரியர்களை ஒருமுகப்படுத்தி ஏகோபித்த முறையில் ஆசிரியர்களின் உரிமைக் குரலை உலகிற்குணர்த்திய பெருமை ஐயரவர்களையே சார்ந்ததாகும். அவர்கள் இச் சங்கத் தோடமையாது மற்றும் பல கிளைச் சங்கங்களையுமாக்கி ஆசிரியர் சங்கங்களுக்கு வழிகாட்டியாக இருந்து அரும்பணி புரிந்துள்ளார்கள். தமிழாசிரியர் சமுதாயத்தின் சரித்திரத்தில் ஐயரவர்களின் சேவை பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டுமென்பதை எவரும் மறுக்காது ஒப்புக்கொள்வர்.

இச்சங்கம் நிறுவிய காலத்தில் திருவாளர்கள் J. C. அமரசிங்கம் அவர்கள் K. நவரத்தினம் அவர்கள் பண்டிதர் V. A. யோன்பிள்ளை அவர்கள் P. பரமானந்தம் அவர்கள் க. வேலுப்பிள்ளையவர்கள் சு. சிவசுப்பிரமணிய ஐயரவர்கள் 'பிறதர்' இக்னேஷியஸ் அவர்கள் ஆதியோருடைய சேவைகள் சங்க வளர்ச்சிக்குப் பெரும் பயனளித்தன. அக்காலத்தில் ஆசிரியர்களின் கல்வி விருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கியும் அன்னாரின் பாதுகாப்பு நோக்கியும் சங்கம் பெருந் தொண்டாற்றி வந்திருக்கின்றது. அக்காலந் தொட்டு இன்றுவரை சங்கம் கலைவளர்ச்சி உடல் வளர்ச்சி ஆசிரியர்களின் உரிமைகள் தொழிற் பாதுகாப்புகள் சம்பளத் திட்டங்கள் ஆதிய விஷயங்களில் பெரும் பங்கு கொண்டுழைத்து வருகின்றது.

ஆண்டுதோறும் இப்பகுதிப் பாடசாலைகளிலுள்ள மாணவரின் பேச்சுத் திறன் இசை, நடனம், நாடகத் திறன்களை வளர்ப்பதற்காக கலை விழாக்களை நடாத்திக்கொண்டு வருகின்றது. இவ்விழாக்களில் அனேக பாடசாலைகள் பங்குபற்றிக் கலைத்திறனை வளர்த்து வருகின்றன. இவ்விழாக்களின் சிறப்பினை நோக்கி, அபிமானிகளாகிய உயர்திரு சு. நடேசபிள்ளை, திரு. நம. சிவப்பிரகாசம், திரு. கு. அம்பலவாணபிள்ளை, ஈழகேசரியதிபர் திரு. நா. பொன்னையா என்போர் மாற்றுப் பரிசிற் பொருள்களாக விலையுயர்ந்த ஒவ்வோர் வெற்றிக் கேடயங்களைச் சங்கத்திற்கு உபகரித்து உதவியுள்ளார்கள்.

சங்கம் நிறுவிய காலந்தொடக்கம் ஆசிரியர்களின் சம்பளத்திட்டம் சார்பான கருமங்களில் அரும்பாடுபட்டுழைத்து வந்திருக்கின்றது. தராதரப்பத்திரமற்ற மற்ற ஆசிரியர்கள் ஆசிரியதராதரப் பத்திரஆசிரியர்கள் முதலிய ஆசிரியர்கள் விஷயமாகத் தாய்ச்சங்கங்களுடனும் அரசாங்கத்துடனும் காலத்துக்குக் காலம் தொடர்புவைத்து சோர்வின்றி உழைத்துக்கொண்டே வருகின்றது. புதிய சம்பளத்திட்டங்கள் உருவாகும் காலங்களில் இச்சங்கமும் அதனைப் பற்றிய அபிப்பிராயங்களைத் தெரிவித்துக் கொண்டுவந்துள்ளது.

இப் பகுதிப் பாடசாலையின் ஆசிரியர் சிலரின் நீதியற்ற வேலை நீக்கங்களில் மிக வன்மையாகக் கண்டித்து தாய்ச்சங்கங்களின் உதவியோடு பெரும் போராடி வெற்றியீட்டியுள்ளது. சிலசம்பவங்கள் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களால் சுமுகமான முடிவைப்பெறுமற்போயின ஆயினும் அவற்றிற்காகச் சங்கம் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டேயிருக்கின்றதென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பும் இலட்சியவாழ்வும் சிறப்படையுமானால் இத்தகைய கஷ்டங்கள் பாடசாலைகளில் நிகழ்ந்திருக்க மாட்டா என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம். கமத்தொழில் விருத்தி கைப்பணி சித்திரம் ஆகியவிஷேட பகுதிகளுக்குச் சிறந்த காட்சிகளையமைத்து நடாத்திவந்துள்ளது. ஆண்டுகள்தோறும் உடற்பயிற்சிப்போட்டிகள் நடாத்தி சிறந்த பரிசில்களை மாணவர்களுக்கு வளங்கிவருகின்றது.

---

# ஆசிரியர் குறிப்பு

சில ஆண்டுகளாக வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் வெண்பொன் விழாவைக் கொண்டாடவேண்டுமென்று நமது சங்கம் முயற்சித்துக்கொண்டு வந்தது. காலநிலை அரசியல் நிலைகளில் ஏற்பட்ட பெரிய புரட்சிகளினால் குறித்தகாலத்தில் இவ்விழாவைக் கொண்டாட முடியாமற்போய்விட்டது. காலம் மிக நீடித்தபடியாலும் ஆசிரியர்பலரின் தூண்டுதல்களினாலும் மிகக்குறுகிய காலத்துள் இவ்விழாவையும் இம்மலரையும் நிறைவேற்ற வேண்டியேற்பட்டது படிக்கிரமமாகச் செய்துமுடிக்கமுடியாத நிலைமைகளினால் இம்மலரில் அநேக அம்சங்கள் கைவிடப்பட்டு விட்டன. சங்கத்திற்குப் பெரும் தொண்டாற்றிய பெரியோர் பலரின் பாராட்டுதல்கள் நிழலுருவப்படங்கள் ஆதியன இடம் பெறுமற்போயின. அவை இடம் பெறுமற்போனமை குறித்து எமது ஆழ்ந்ததுக்கத்தை தெரிவிக்கின்றோம்.

மேலும் இப்பணியைச் சிறப்புறச்செய்வதற்கு பேருதவிபுரிந்த விழாச்சபையினருக்கும் சங்க நிர்வாகசபையினருக்கும் மலரில் வெளியிடுவதற்கு கட்டுரைகள் வாழ்த்துரைகள் உதவிய பெரியார்களுக்கும் இம்மலரைச் சிறப்புற அமைத்துத்தந்த கலாதேவி அச்சகத்தாருக்கும் எம் உளம் நிறைந்த நன்றி என்றும் உரித்தாகுக.

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வ. வ. த. ஆ. சங்கத்தை ஆரம்பித்து வைத்த
வரும், வட பெரும்பாக வித்தியா தரிசியாக
இருந்தவருமாகிய காலஞ் சென்ற
பிரம்மஸ்ரீ **தி. சதாசிவ ஐயர்**
அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளி பொன் விழாவிற்கு நன்கொடையளித்தோர்.




திரு. S. கனகசபை
அவர்கள்




திரு. கோ. அப்பாக்குட்டி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு. ஆ. தம்பிப்பிள்ளை
தலைவர்
வலி-வடக்குத் தமிழாசிரியர் சங்கம்




திரு. மு. செல்லையா
தலைவர்
வ. வ. த. ஆ, ச. வெண்-பொன் விழாச்சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. வ. கந்தையா
செயலாளர்
வலி–வடக்குத் தமிழாசிரியர் சங்கம்




திரு. ச. சச்சிதானந்தம்
செயலாளர்
வ. வ. த. ஆ. ச. வெண்–பொன் விழாச்சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த காலத்தில் சங்கத்தில் தொண்டாற்றிய பெரியார்கள்



திரு. இ. சின்னத்துரை
பொருளாளர்
வலி-வடக்குத் தமிழாசிரியர் சங்கம்.



திரு. P. பொன்னம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பிரம்மஸ்ரீ சோ. சோமாஸ்கந்த ஐயர்**
வெண்பொன் மலர் பொறுப்பாளர்



**பண்டிதர் ச. பொன்னுத்துரை**
கடந்த காலத்தில் சங்கத்தில் தொண்டாற்றியவர், இப்பொழுது வட இலங்கைத் தமிழாசிரியர் சங்க காரியதரிசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயிலே தமிழ் காக்கக் கூவாய்!

— பண்டிதர் சோ. இளமுருகனார் —
( தமிழ் விரிவுரையாளர் மகளிர் கல்லூரி உடுவில், சுன்னாகம் )

### எல்லாளனைக் கூவுக என்றது

இந்துப் புணரி திரைக்கையா
லெற்றும் முத்தச் சுடர்மணிக
ளெடுத்துக் காந்தள் விரல்சேப்ப
வின்பக் குதலைக் கிளிமொழியார்
பந்து புனைந்து விளையாடும்
பாங்கார் நெய்தல் பயிலிலங்கைப்
பழைமைப் பதியு மரசாண்டு
பாரோர்க் கமுதக் கலைதந்த
சந்தத் தமிழ்த்தாய் வாழ்தற்குத்
தகுதி யிலையோ விங்கென்று
தனயர் நெஞ்சந் தாழ்வுற்றுத்
தழலிற் புகுந்த தெழுகொத்தார்
அந்தோ வாய்மை யெல்லாளா!
அரசே யெந்தங் குலமுதலே!
அவளைக் காக்க வருகவென
அன்பிற் கூவாய் பூங்குயிலே! 1

### மூவேந்தரைக் கூவுக என்றது

நஞ்சைப் பருகி யமுதளித்த
நம்பன் நயக்குந் தமிழ்த்தாய்க்கு
நலமார் செம்பொன் முடிகவித்து
நளிநீ ருலகிற் புகழ்பரப்பிச்
செஞ்சொற் சங்கப் பலகைமிசைச்
செவ்வே யிருத்தி யரசளித்த
சேரா! சோழா! பாண்டியனே!
சிறுமைச் செய்தி கேட்டிரோ
மஞ்சு தவழ மயிலாடும்
மதனச் சோலை யிலங்கையிலே
மன்னும் பண்டைத் தமிழ்க்குடிக்கு
வாயே யிழக்க வைத்தாராற்
றஞ்ச மவர்க்குத் தமிழேகாண்
தமிழை யன்றி யுயிர்காணர்
தாயே யனையீர் வருகவெனச்
சாலக் கூவாய் பூங்குயிலே! 2

## அகத்தியனாரைக் கூவுக என்றது

இந்த வுலக மொழியெல்லா
மியற்கை யோசை தீர்ந்தனவா
யிணங்கா வொலியா லியன்றனகாண்;
இருப்ப சிலவே பலவிறந்த;
முந்தும் பழைமைக் கெல்லையதாய்
மூவாச் சாவாப் புதுமையதாய்
முட்டா வியற்கை யோசையதாய்
முயற்சி சிறிதி ஞெலிப்பதுவாய்ச்
சிந்தைக் கினித்துச் செவிக்கினித்துச்
செப்பும் நாவுக் கமுதளித்துத்
தெய்வம் மணக்குந் தமிழன்னை
இலங்கைத் தீவிற் சிதையாமே
விந்த மடக்கிப் பொதியிருந்து
விரும்பி வளர்த்த தமிழ்முனிவா!
விதியோ காக்க வருகவென
விதந்து கூவாய் பூங்குயிலே ! 3

## கலைஞரைக் கூவுக என்றது

பண்ணு ரிரகு வமிசமெனும்
பனுவல் தந்த கேசரியே!
பாட லளித்துப் பொற்றேங்காய்ப்
பரிசில் கொண்ட பாவலனே!!
தண்ணூர் தமிழை வளர்த்தகலைத்
தாமோ தரனே சிவசம்புத்
தகைசால் புலவா!! மானிமுத்துத்
தம்பிப் பெயர்கொள் பேரறிஞர்!
எண்ணு மெழுத்துந் துறைமுடித்தே
இயலும் மரபும் பேணியிசை
என்ற குமார சாமியெனு
மின்பத் தமிழ்செய் பாவலனே!!
கண்ணின் மணியைப் போனிவிர்
கருத்திற் கொண்ட தமிழ்த்தாயின்
கவலை போக்க வருகவெனக்
கனிந்து கூவாய் பூங்குயிலே ! 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாவலரைக் கூவுக என்றது

வேற்றுச் சமய விருண்மண்டி
மேலாஞ் சைவங் குன்றியநாள்
வேத மெழுந்து வாய்விண்டே
மெய்ம்மை நிறுத்தி நின்றதெனப்
போற்று மறிவுக் கதிரொளியாற்
போகாப் புன்மை போக்கியருட்
போது மலர்த்தித் தெய்வமணம்
புறத்து மகத்துங் கமழ்வித்தே
ஆற்றா தலந்த தமிழன்னைக்
கருமை யுரைநூற் கலன்பூட்டி
அரசு கட்டின் மிசைவைத்த
ஆறு முகநா வலரையா!
தேற்றங் காணா திலங்கையிலே
தேம்பு மன்னாள் திறத்திரங்கிச்
செல்வா! காக்க வருகவெனச்
செவ்வே கூவாய் பூங்குயிலே! 5

### தங்கப் புலவனைக் கூவுக என்றது

கன்னித் தமிழே கண்கண்ட
கல்வித் தெய்வ மெங்குலத்தார்
கருத்தி லூறித் தழைக்கின்றாள்
கலைமா நிதியந் தருகின்றாள்
அன்னை யப்ப னருந்துணைவர்
அனைத்து மாகிப் புறந்தருவாள்
அவளைப் பேசா நாளெல்லாம்
அவமே கழிந்த நாளென்று
மன்னு மமுதம் புறங்காண
மதுரப் புணரி கடைந்துசுவை
வற்றா தூறும் பாவமுதம்
வழங்கி வளர்த்த கற்பகமே!
பன்னுஞ் சோம சுந்தரனே!
பனுவற் பிராட்டிக் கரசளிக்கப்
பரிந்து வருக வருகவெனப்
பண்ணிற் கூவாய் பூங்குயிலே! 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆரியதிராவிடசங்கம் அமைத்தோனைக் கூவுக என்றது

**கா**லங் கடந்த தொன்மையுடன்
கடவுட் டன்மைப் பெருமையினுற்
கற்ருேர்க் கறமும் பொருளின்புங்
கவினுர் விடுந் தான்றருள்வாள்
மூல மொழியாய் மூன்னின்ருள்
மூவர் போற்றச் செம்மாந்து
முந்நீ ருலகு முழுதாண்ட
முன்ருட் போல விந்நாளும்
சாலச் சிறந்து தலையெடுக்கச்
சங்கம் வளர்த்த சதாசிவனே!
தனிச்சிங் களமாம் மலைப்பாம்பு
தாயை விழுங்கப் புகுந்ததுகாண்!
ஓலம் வெண்ணெய்க் கண்ணனெனு
மொப்பில் புலவன் மெய்காப்ப
ஒல்லை வருக வையாவென்
றுவந்து கூவாய் பூங்குயிலே! 7

### மகாலிங்க சிவத்தைக் கூவுக என்றது

**கூ**ற்ருே ரேத்துங் கலிக்குப்பின்
கம்ப நாடன் கவியமுதங்
கல்லார் சாலப் பொல்லாரே
கண்கள் கொண்டுங் காணுரே
வெற்றித் திருவும் மலர்த்திருவும்
விரும்பு மிராமன் றிருக்காதை
மேலாம் வாழ்க்கைக் கலையென்று
வெல்லம் நாண வவையரங்கிற்
குற்றம் பயிலா நகைச்சுவையிற்
குழைத்துக் குழைத்துத் தமிழ்வளர்த்த
கோதில் புலமை மகாலிங்க
குருவே தனிச்சிங் களமென்னும்
அற்றம் புகுந்த தறியீரோ
ஆசைத் தமிழ்த்தா யழுகின்ருள்
ஐயோ காக்க வருகவென
அமிழ்திற் கூவாய் பூங்குயிலே! 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பிரகாச அடிகளைக் கூவுக என்றது

அலைநீ ராடை நெடும்புவியி
லமைந்த பண்டை மொழிக்கெல்லாம்
ஆதி தமிழென் றரண்படுத்தி
அகர விகர வுகரமொடு
நிலையா மெகர முதலாக
நேரும் பிறவுஞ் சொற்பட்டு
நீர்மை திரியாப் பலபெயராய்
வினையாய்ப் பிறவாய் நிறைந்ததிறம்
விலையின் மொழிநூற் களஞ்சியமாய்
மிளிரக் கன்னித் தமிழின்சீர்
விளக்கஞ் செய்த சொற்கலைஞா!
விரும்பு மொழிக ளாறிரண்டின்
கலைதேர் ஞானப் பிரகாச
அடிகாள் கன்னிப் பெருமாட்டி
கலக்கம் போக்க வருகவெனக்
கனிந்து கூவாய் பூங்குயிலே! 9

பூங்குயிலைப் புகழ்ந்தது

உள்ள முருக்கும் வாசகத்திற்
குயிலே யுனக்குத் தவிசிட்டார்;
உலகப் புலவோ ருன்வாயா
லுயர்ந்த பாடல் மொழிகின்றார்;
தெள்ளித் தெளித்து வடித்ததமிழ்த்
தேனைப் பனுவல் தொறுமுண்பாய்;
தென்றற் செல்வன் மெத்தென்று
திளைக்கும் விடியல் திருத்தமுற
விள்ளற் சினைப்பூங் கொம்பிருந்து
விளரி பயில்வாய்; விண்ணவரும்
விரும்பும் தமிழோ டுனக்குறவு
விதந்து பேச வினிவேண்டா
புள்ளும் மரமும் விலங்குமிதோ
புதுமை காண விலங்கையிலே
புலவர் குழாத்தை வருகவெனப்
புகன்று கூவாய் பூங்குயிலே! 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைக் கல்வி

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
முன்னைநாள் தமிழ்ப் பேராசிரியர்,
திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை

பழையகாலத்திலே ஆசிரியரைத் தேடி அவரிடம் சென்று, அவருக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து, மாணவர்கள் படித்து வந்தார்கள். மாணவர்களைத் தேடி ஆசிரியர் சென்று படிப்பிக்கும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. மகாபாரத காலம்வரை ஆசிரியரைத் தேடியடையும் வழக்கமேயிருந்து வந்தது. மகாபாரத காலத்திலும் இந்த வழக்கம் அற்றுப் போகவில்லை, இருந்து வந்தது. கண்ணனும் குசேலரும் சாந்தீப முனிவரை அடைந்து படித்து வந்தார்கள் என்பது பாரதத்தில் உள்ளது. ஆனால் அதேகாலத்தில் பிழையான வழக்கமும் ஆரம்பமாய் விட்டது. துரியோதனாதியர்கள் இருக்கும் இடத்துக்கு வந்து படிப்பிக்கும்படி கேட்டபோது துரோணர் உடன்பட்டு விட்டார். அன்றி யாருக்குப் படிப்பிப்பது என்ற பிரச்சினையும் சற்றே தளர்ந்துவிட்டதுபோலவுந் தோன்றுகின்றது. ஏகலைவன் என்ற வேடனுக்குப் பாடஞ்சொல்ல மறுத்த துரோணர் துரியோதனனுக்குப் பாடஞ்சொல்லவும் நேர்ந்துவிட்டது. துரோணர் சாதாரணமானவர் அல்லர். அவ்வாறிருந்தும் அவருடைய உடன்பாடு கலிபிறப்பதற்கு அறிகுறி போலும். அது நிற்க.

மகாபாரத காலத்துக்கு முன்னே இப்படியானமுறை அஃதாவது மாணவரிடம் ஆசிரியர் செல்லும் முறை இல்லை என்றே சொல்லலாம். இராமாயணகாலத்தை எடுத்துக் கொண்டு, இராமனது இளமைப் படிப்பை உற்று நோக்கினல், அக் காலத்தில் முறையான கல்வி இருந்தது புலன் ஆகும்.

இராமன் சக்கரவர்த்தியின் தவப் புதல்வன். வெகு காலம் புத்திரபாக்கியமின்றித் தவங்கிடந்த தசரதனுக்கு அருமைப் புதல்வன் இராமன். சக்கரவர்த்தியின் உயிர் இராமன். சக்கரவர்த்திக்கு மாத்திரமா உலக உயிர்களுக்கே உயிராயிருப்பவன் இராமன். அப்படிப்பட்ட இராமன் பச்சைக் குழந்தையாயிருந்த காலத்திலே கூடக் காடுகளிற் சென்று அங்கேயுள்ள தவ ஆசிரமங்களில் தங்கிப் படித்து வந்தான் என்பதை இராமாயணத்தால் அறிகிறோம். அதிகாலையில் இராசமாளிகையிலிருந்து இராமன் புறப்படுவான். முதலில் அவன் நகரத்தைக் கடக்க வேண்டும். நகரத்துக்கு அப்பால் நாடு. நாட்டுக்கு அப்பால் காடு. அந்தக் காட்டுக்குள்ளே தான் அவனுடைய பள்ளிக்கூடம் அதற்கு அவன் செல்லுவான். பரதன் முதலிய தம்பிமாரும் உடன் செல்லுவார்கள்,

“ வீரனும் இளைஞரும் வெறி
பொழில் களின்வாய்
ஈரமொ டுறைதரும் முனிவர
ரிடைபோய்ச்
சோர்பொழுது அணிநகர்
துறுகுவர் ...............”
...............................................

வீரன்-இராமன் இளைஞர்-தம்பிமார் முதலில் அவர்கள் சென்று படிக்கும் பள்ளிக்கூடத்தை நோக்குவோம். அது;

‘வெறி பொழில்களின் வாய்’.

‘வாய்’ என்ற வார்த்தைக்கு இடம் என்று பொருள். ‘வெறி’-வாசனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுக்குள்ளே வாசனைபொருந்திய மலர்களைத் தருகின்ற கொடிகள் செடிகள் மரங்கள் அடர்ந்து செழித்திருக்கும் பொழிலே அவர்கள் படிக்கும் பள்ளிக்கூடம். அங்கே கட்டடம், கதவு, மேசை, கதிரை, கரும்பலகை என்ற வார்த்தைகளுக்கு இடமேயில்லை. மலைச்சாரலிலே, அருவி வீழ்ச்சியின் பக்கலிலே, மானும், மயிலும் விளையாடுகின்ற இயற்கையழகு நிறைந்து ததும்புகின்ற * பூம்பொழிலே அவர்கள் படிக்கும் பள்ளிக்கூடம். பொழில் - சோலை. இப்படிப்பட்ட இயற்கைப் பள்ளிக்கு ஆசிரியர்கள் 'ஈரமொடு உறைதரும் முனிவரர்; முனிவரர் - முனி சிரேட்டர்கள். வசிட்டர் போன்றவர்களே ஆசிரியர்கள். அந்த ஆசிரியர்களுக்கு ஒரு விசேடணம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அது 'ஈரமொடு உறைதரும்' என்பது. ஈரம் என்ருல் அன்பு என்று பொருள். அது தண்மையாகிய ஈரத்தைச் செய்தலின் ஈரம் எனப்பட்டது. 'இன் சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம் -- செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்'-என்ற திருக்குறள் இங்கே ஞாபகப்படுத்தத்தக்கது. ஈரமாகிய அன்பில் முழுகிஊறிய சொல்லே இன்சொல். அதுபடிறில்லாத சொல். படிறு என்பது பொய் வஞ்சனை என்ற கருத்துக்கள் கொண்டது. பொய்யும் வஞ்சனையும் அற்று அன்பில் ஊறிய இன் சொல்லும் பொருள் கண்டவர்கள் வாயிலேதான் தோன்றக் கூடியது. செம்பொருள் -- மெய்ப்பொருள். அதனைக் கண்டவர்கள் முனிவர்கள் அப்படிப்பட்ட முனிவர்களே காட்டுத் தவப்பள்ளி ஆசிரியர்கள். அவர்கள் வாயில் விளையுஞ் சொல் ஈரமாகிய இன்சொல். இன்சொல் தனக்கும் பிறர்க்கும் நன்மைபயக்கும் சொல். கூலிக்கு மார் தட்டும் ஆசிரியர்களுக்கும், ஈரமொடு றைதரும் முனிவர்க்கும் வெகுதூரம். கல்வி கூலிபெற்று வழங்கும் பண்டமன்று. கடவுள் தந்த அறிவை வழங்க வேண்டியவர்களுக்கு வழங்குவது தருமம். அந்தத் தருமத்தில் இருப்பவர்கள் 'ஈரமொடு உறைதரும் முனிவர்கள்'. அப்படிப்பட்ட முனிவர்களின் ஆசிரமப்பள்ளிகளை நாடிச் சக்கரவர்த்தியின் திருக்குமாரர்கள் செல்லுகின்ருர்கள் அவர்கள்' சோர் பொழுது அணிநகர் துறுகுவர்.' சோர் பொழுது மாலைக்காலம். காலையிலே பள்ளிக்குப் போனவர்கள், பகல் முழுதும் அங்கே தங்கி, 'முனிவர்களுக்கும்' முனிவர்பத்தினிகளுக்கும் வேண்டிய பணிவிடைகள்செய்து, அங்கேயே மத்தியான்ன போசனத்தையும் முடித்துக் கொண்டு, படிக்க வாய்த்த சமயங்களில் படித்துவிட்டு, மாலையிலே தமது நகரத்தை நோக்கி வருவார்கள். குசேலரும் கண்ணனும் சாந்தீபமுனிவரின் மனைவிக்கு விறகு ஒடித்துக் கொடுக்கிறவக்கள் என்பது மகாபாரதக் கதையில் கேட்கப்படுகிறது. அவ்வாறே இராமனும் தம்பிமாரும் ஏவல்கள் செய்து படித்துவிட்டு வருகிருர்கள்.

அவர்கள் பள்ளியிலிருந்து வரும்போது, நாமும் அவர்களைத் தொடர்ந்துவர முடியுமானல், அவர்களுடைய படிப்பின் அருமையை -- ஆசிரமக்கல்வியின் பெருமையை-- எவ்வித பரீக்ஷையுமின்றி எளிதில் நாம் அறியக்கூடிதாயிருக்கும். வீரனும் இளைஞரும் பள்ளியிலிருந்து வரும்போது, 'எதிர்வார், கார்வர அலர்பயிர் பொருவுவர் களியால்' இராமனுந் தம்பிமாரும் காடு கடந்து நாட்டுக்குள் வரும்போது, நாட்டுச் சனங்கள் அக் குழந்தைகளை 'எதிர்வார்' கள். அக்குழந்தைகளை எதிர் கொள்பவர்கள் போலக் கிராமவாசிகள் அக்குழந்தைகளுக்கு எதிரே வருவார்கள். பல்வேறு கருமங்களில் ஈடுபட்டு இருப்பவர்கள் கூட, அந்த அந்தக் கருமங்களை அப்படியே விட்டுவிட்டு, அப்பிள்ளைகளை எதிர்வார்கள். எதிர் கொண்டு தரிசிப்பதில் கிராமவாசிகளுக்கு ஒரு தனிக்களிப்பு உண்டு. காந்தத்தை எதிர்ப்படுகின்ற இரும்பாய் விடுகின்ருர்கள் சனங்கள். 'கார் வர அலர் பயிர் பொருவுவர்' என்கின்ருர் கவி. கார்காலத்தை எதிர்கொண்டு செழிக்கின்றபயிர்களாய்விடுகின்ருர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள். இராமனைக் காணுகின்ற சனங்கள் முகிலைக்கண்ட மயில்களாய் விடுகின்றார்கள் என்றே கூறலாம். குழந்தைகளின் கல்வி அழகு எதிர்ப்படுபவர்களின் முகங்களாகிய கண்ணாடிகளில் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. இம்மட்டோ! இந்த அளவிலும் அமையாமல், இராமனது ஆசிரமக் கல்வி மேலும் சுடர் விடுகின்றது. அது வருமாறு :-

எதிர்வரும் அவர்களை எமையுடை இறைவன் -- முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா -- எதுவினை, இடரிலை இனிது நும்மனையும்; -- மதிதரு குமரரும் வலியர் கொல்; எனவே'.

எமையுடை இறைவன் ஸ்ரீ ராமன். அவன் நம்மை யெல்லாம் தன் உடைமைப் பொருளாகப் பேணுபவன். அப்படிப்பட்டவன், எதிர் வரும் அவர்களை' த் தனிதத்னி நோக்குகின்றான். அவன் ஒவ்வொருவரையும் நோக்கும் விதம், 'முதிர்தருகருணையின் முகமலர் ஒளிரா' என்று வருணிக்கப்படுகின்றது. அவர்களைக் காணுந்தோறும் ஸ்ரீ ராமனுடைய முகம் காருண்ணியம் முதிர்ந்து கனிந்து விடுகின்றது. அன்றிச் சூரியனைக் கண்ட தாமரை மலர் போல விரிந்து விடுகின்றது. அம்மட்டில் அமையாமல் அவனுடைய முக வட்டம் ஒளிவட்டமாய் ஒளிக் கிரணங்களை அள்ளி வீசுகின்றது. இந்தநிலையில் அவனுடைய செம்பவள வாயிலிருந்து இனிய வார்த்தைகள் வருகின்றன. இனிய நோக்கு முன் வர, இனிய வார்த்தைகள் அதனைத் தொடர்ந்து வருகின்றன.

'எது வினை' எப்படி முயற்சிகள்! 'இடர் இலை' க்ஷேமந்தானே! 'மதிதரு குமரரும் வலியர்' மதிக்கத் தக்கவர்களும் கூரிய புத்தியுள்ளவர்களுமான நற்புதல்வர்கள் கல்வியிலும் ஆண்மையிலும் ஆற்றல் படைத்தவர்களாயிருப்பார்களே! என்றிங்ஙனம் எதிர்ப்படுபவர் ஒவ்வொருவரையும் சுகம் விசாரிக்கின்றான் இராமன். ஸ்ரீராமனது குலநலம் ஒருபக்கம் இருக்க, அவனுடைய ஆசிரமக்கல்வியின் விசேடம் அந்த இளமைப் பருவத்தில் அவ்வாறு ஒவ்வொருவரையும் சுகம் விசாரிக்கச் செய்கின்றது

இராமனைக் காட்சி மாத்திரையில் களிக்கின்ற சனங்கள், அவனுடைய இனிய வார்த்தைகளையுங் கேட்பார்களாயின், வார்த்தைகளுந் தங்களைப்பற்றியவைகளாயிருக்குமாயின், அச்சனங்களின் களிநிலை இனி எந்நிலையை எய்துமோ! சனங்கள் கூற்றைச் சிறிது கேட்போமாக அஃது ஐய; நினை எமது அரசென உடையேம்; இஃது ஒரு பொருள் அல; எமதுயிருடன் ஏழ் மகிதலம் முழுதையும் உறுக; இம்மலரோன் உகுபகல் அளவு என; உரை நனி புரிவார்'.

சனங்கள் எந்த இராமன் தங்கள் சுகங்களில் கண்ணுங் கருத்துமாய்த் தங்களை விசாரிக்கின்றானோ, அந்த ராமனை எதிர்ப்படுந் தோறும், எதிர்ப்படுந்தோறும், அவனோடு 'உரைநனி புரிவார்'. பெரிதும் வார்த்தையாடுவார்கள் அவனோடு பேசுவதில் அவர்களுக்குப் பரம சந்தோஷம் உண்டு. அவர்கள் ஸ்ரீ ராமனை நோக்கி அவன் சுகம் விசாரிக்கும் போது முதலிற்கூறும் வார்த்தை 'அஃது ஐய' என்பது. ஐயனே அப்படியேயாகும் என்பது பொருள். நீ எப்படி நாங்கள் வாழவேண்டுமென்று எண்ணுகின்றாயோ, அப்படியே நாங்கள் வாழுகின்றோம். எங்களுக்கு எவ்வித குறையும் இல்லை. 'நினை எமது அரசு என உடையோம்' நீதானே இனி எங்களுக்கு அரசு. நீ எங்களுக்கு அரசனாயிருக்க எங்களுக்கு என்ன குறை வர முடியும்! 'இஃது ஒரு பொருள் அல' அப்பனே எப்பொழுதும் சந்திக்குந்தோறும் சந்திக்குந் தோறும் 'சுகந்தானே' என்று எம்மை விசாரிக்கின்றாயே, அப்படி விசாரிப்பது காரியம் அன்று. உனது செம்பவள வாய் நோவ இனி விசாரித்தலைச் செய்யாதே -- அது அமையும். 'எமது

உயிருடன் ஏழ் மகிதலம் முழுதையும் உறுக ;இம்மலரோன் உருபகல் அளவு உறுக ; நாங்கள் எங்கள் உயிரையும் ஏழுலகங்களையும் உன்னுடைய பாதங்களுக்கே அர்ப்பணஞ் செய்கின்ேரும் ; ஒரு பிரமகற்ப காலம் வரை நீ உலகங்களை அரசுபுரிந்து இனிது வாழ்வாயாக என்று இங்ஙனம் வாழ்த்துகின்ருர்கள் கிராம வாசிகளாகிய சனங்கள். ஆடவரெல்லாம் தசரதன் போன்றும் பெண்களெல்லாம் கௌசலை போன்றும், தத்தம் குலதெய்வங்களைப் பிரார்த்திக்கின்ருர்கள். இராமனுந்தம்பிமாரும் சனங்களின் வாழ்த்துக்களினுலே உடல் பூரித்து வளர்ந்து வருகின்ருர்கள். அவர்கள் உள்ளம் ஆசிரமக் கல்வியினுலே மாசு நீங்கி விருத்தியடைகின்றது. ஸ்ரீ ராமன் வசிட்டருடைய உத்தம மாணவன். அவருடைய ஆசிரமத்திலேயே வளர்ந்தவன். சகல வித்தைகளையும் வசிட்டரிடமே பயின்றவன் ஸ்ரீ ராமன். வில் வித்தை மல்வித்தைகள் கூட வசிட்டரிடமே பயின்றவன் அவன். இதனை ஒரு சமயம் மிக்க பெருமிதத்துடன் ஜனக மகாராசாவுக்கு எடுத்துரைக்கின்ருர் விசுவாமித்திரர். 'உறையோடும் நெடுவேலாய் உபநயன விதி முடித்து, மறையோது வித்திவரை வளர்த்தானும் வசிட்டன் காண்' என்பது விசுவாமித்திரர் கூற்று. தசரதன் ஸ்ரீ ராமனுக்குப் பெயரளவில் தந்தை. அவனுக்கு உண்மையான ஞானத்தந்தை வசிட்டர் என்கின்ருர் விசுவாமித்திரர்.

ஞானக்கல்வியைச் சாதி குலம் பிறப்பு விசாரியாமல் எவரிடமும் படிக்கலாம்; உலகக் கல்வியை உயர்ந்தோரிடமே படிக்க வேண்டும் என்கின்றது ஸ்மிருதி என்கின்ற தரும சாத்திரம். ஞானம் சொல்லுகிறவன் சாதி குலம் பிறப்பால் வருகின்ற உபாதி நீங்கியவன். அவன் ஆருக்கும் பாடஞ் சொல்லலாம். உலகியல் சொல்லுபவன் அந்த உபாதி நீங்காதவன். ஆகவே அவனிடம் அவனில் உயர்ந்தவர்கள் படித்தல் ஆகாது. அவனுடைய தாழ்ந்த குணங்கள் மாணவர்களைப் பற்றிக் கொள்ளும். ஸ்ரீ ராமன் வில்வித்தை முதலிய உலகியற் கல்வியை உயர்ந்தோரான வசிட்டரிடமே பயின்ருன். அதன் பயனை அவன் வாழ்க்கை முழுவதையும் எடுத்துக் கொண்டு பரீக்ஷித்துப் பார்க்கலாம்.

தாடகை மகாகொடியவள்; சாதுக்களான தவத்தவர்களை எடுத்து விழுங்குபவள் அவள். அவளைக் கொல்லுவது மகாபுண்ணியம். அந்தணராகிய விசுவாமித்திரர் அந்தப் பாதகியைக் கொல்லும்படி ஒருசமயம் இராமனை ஏவினுர். அப்பொழுது இராமன் என்ன செய்தான் ? 'பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்' இவள் எப்படியும் ஒரு பெண்ணுய் இருக்கின்ருளே. பெண்ணைக் கொல்வது தருமம் ஆகுமா என்றெரு எண்ணம் இராமன் மனசில் உதித்தது. இது சாதாரண கல்வியால் வருவதொன்ரு? இதுநிற்க.

துரோகியாகிய இராவணனை எடுத்துக்கொள்ளுவோம். அவன் இராமனுக்குச் செய்த துரோகம் எல்லாரும் அறிந்தது. அந்தத்துரோகி யுத்தமுனையிலே நிராயுதபாணியாய் இராமன் எதிரில் தலைகுனிந்து நிற்கின்ருன். ஒருகணத்தில் அவன் தலைகளைக் கொய்து, சீதையை மீட்டுக்கொண்டு, அயோத்திக்குச் செல்லலாம். ஆனுல், இராமன் என்னசெய்தான்? 'இன்றுபோய்ப் போர்க்கு நாளைவா' என்ருன் அன்ரே? அணுக்குண்டு யுகத்திலே, நடந்து வருகின்ற கல்வி, இப்படி ஒரு சந்தர்ப்பத்திலே, எதிரிக்கு மன்னிப்பு அளிக்குந் தாளு? இது சிந்தித்தற்குரியது. இப்பொழுது காட்டியவைகள் யுத்ததர்மங்கள். இவைகள் இருக்க ஏனைய வாழ்க்கைத் தருமங்களையும் இராமன்பால் எடுத்து நோக்கலாம். குகர் எப்படிப்பட்டவர்? சடாயு யார்? விபீஷணன் இராவணனின் தம்பியன்ரே? அநுமான் முதலியவர்கள் வானரர்கள். இவர்கள்பால் இராமனுடைய நட்பு எப்படியிருந்தது சிந்தித்துப் பாருங்கள். சேரன் செங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டுவன் தமையன்; இளங்கோ தம்பி. சோதிடன் ஒருவன் தம்பியாகிய இளங்கோ இராசலட்சணம் உள்ளவன் என்றான். அப்பொழுது அதனைப் பொறுது வெகுண்டெழுந்தான் அந்தத் தமையன். ஆனால், கம்பராமாயணத்தில் தமையன் ஒருவனுடைய முகம்,
'அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றது'

இந்நிலை எப்பொழுது நிகழ்ந்த தென்பதைச் சிந்திக்க முடியுமானால் அது ஆசிரமக் கல்வியின் அருமையை அறிதற்குபகாரமாகும்.

வீரனு மிளைஞரும்
வெறிபொழில் களின்வாய்
ஈரமொ டுறைதரு
முனிவர ரிடைபோய்ச்
சோர்பொழு தணிநகர்
துறுகுவர்; எதிர்வார்
கார்வர வலர்பயிர்
பொருவுவர் களியால்
[கம்ப. திருவவதாரம். 132]

எதிர்வரு மவர்களை
எமையுடை யிறைவன்
முதிர்தரு கருணையின்
முகமல ரொளிரா
எதுவினை, இடரிலை;
இனிதுநும் மனையும்;
மதிதரு குமரரும்
வலியர்கொல் எனவே"
[கம்ப. திருவவதாரம். 135]

அஃதைய; நினையெம
தரசென வுடையேம்
இஃதொரு பொருளல;
மெமதுயி ருடனேழ்
மகிதல முழுதையும்
உறுகஇம் மலரோன்
உகுபக லளவென
வுரைநனி புரிவார்.
[கம்ப. திருவவதாரம் 136]

ஏழைய ரனைவரு
மிவர்தட முலைதோய்
கேழ்கிளர் மதுகையர்
கிளைகளு மினையார்
வாழிய வெனவவர்
மனனுறு கடவுட்
டாழ்குவர் கௌசலை
தயரத னெனவே.
[கம்ப திருவவதாரம் 133]

திறையொடு மரசிறைஞ்சும்
செறிகழற்காற் தெசரதனும்
பொறையொடும் தொடர்மனத்தான்
புதல்வரெனும் பெயரேகாண்
உறையோடு நெடுவேலாய்
உபநயன விதிமுடித்து
மறையோது வித்திவரை
வளர்த்தானும் வசிட்டன்காண்.
[கம்ப. குலமுறைகிளத்துபடல. 24]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளை வளர்ப்பு

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

தியாகராசர் கல்லூரி, மதுரை.

"நூலைப் போல் சீலை, தாயைப் போல் பிள்ளை" என்பது தமிழ் நாட்டுப் பழமொழி நூல் முருடாக இருந்தால் அதனால் நெய்யப்படும் ஆடையும் முருடாகவே இருக்கும். நூல் மென்மையாக இருப்பின், ஆடையும் மென்மையாக அமையும். கடையில் ஆடையைப் பார்க்கும் நாம், அதற்குரிய நூலின் எண் என்ன என்று கேட்கின்றோம் அல்லவா? ஆடையைக் கொண்டு நூலை விசாரித்து அறிவது போல, நாம் பிள்ளைகளின் செயல்களைக் கொண்டு பெற்றோரை அறிகின்றோம்.

நூலுக்கு ஏற்ப ஆடை அமையும்; இதை மாற்ற இயலாது. ஆனால் பெற்றோர் நிலைக்கு ஏற்பப் பிள்ளைகள் வளர்ந்தாலும், அவர்களை நல்லவர்கள் ஆக்கவும், கெட்டவர்கள் ஆக்கவும் அப் பெற்றோர்களின் அன்புகளோடு சூழ்நிலையும் சேர்ந்து கொள்கிறது. ஆடை அமைப்பில் நூலே சிறப்பிடம் பெறுகிறது. பிள்ளை வளர்ப்பில் பெற்றோர் இயல்புகளும் சூழ்நிலையும் சிறப்பிடம் பெறுகின்றன.

பலவகைப் பெற்றோர்

தாயும் படித்தவள்; தந்தையும் படித்தவர். அந்த இருவரும் மனமொத்த அன்பு வாழ்க்கை வாழ்கின்றனர். அவர்கள் வீட்டில் நல்ல புத்தகங்கள் நிறைந்திருக்கின்றன. கணவனும் மனைவியும் பூசலிடுவதில்லை. அவர்களிடையே பிறந்து வளரும் பிள்ளை எப்படி இருக்கும்? நல்ல முறையில் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து வளரும் அல்லவா? அதே பிள்ளை பள்ளிக்குச் செல்லும் போது பல திறப்பட்ட பிள்ளைகளோடு பழக வாய்ப்பு உண்டாகிறது. அப் பிள்ளைகளுள் சிலர் நல்லவராக இருக்கலாம். பலர் தீய பழக்க வழக்கங்களை உடையவராக இருக்கலாம். பெற்றோர் மிகுந்த கவலை எடுத்துக் கொண்டு, தம்பிள்ளை நல்ல மாணவரோடு பழகவே இடந்தருவர். இத்தகைய சூழநிலை அமைப்பால் பிள்ளை நன்நெறியிலேயே வளர இடம் உண்டாகிறது.

ஒரு தந்தை குடிகாரன். ஓயாது மனைவியை அடித்துத் துன்புறுத்துகிறான்; தீய சொற்களைப் பயன் படுத்துகிறான். தாயும் கணவனைக் கண்டவாறு வைகிறாள். இந்தக் குடும்பத்தில் வளரும் பிள்ளை பெற்றோர்களது பாதுகாப்பை இழக்கிறது. இளஞ் செடிக்கு ஏற்ற எரு இட்டு உரிய காலத்தில் தண்ணீர் விட்டு நல்ல காற்றும் வெளிச்சமும் உள்ள இடத்தில் வைத்தால் தான் அது நன்கு வளர முடியும். அது போன்றதே பிள்ளைவளர்ப்பும் பிள்ளைப் பருவத்திற்கேற்ற குடும்பநிலையும் சூழ்நிலையும் அமைய வேண்டும். நாள் தோறும் வீட்டில் தன் பெற்றோரே ஒருவரை ஒருவர் வைது கொண்டு சண்டை இட்டுக்கொள்ளுதல் பிள்ளையின் அறிவையும் வளர்ச்சியையும் மிகுதியாகத் தாக்கிவிடும். அந்த நிலையில் அப்பிள்ளை தீய பிள்ளைகளுடன் சேர்ந்தால் எளிதில் கெட்டு விடுதல் இயற்கை.

தந்தை மட்டும் படித்தவன்; தாய் படியாதவள். தந்தை பிள்ளையைக் கண்டித்து நன்முறையில் வளர்க்க எண்ணுகின்றான். தாய் தன் அறியாமையினால் பிள்ளைக்குச் செல்லம் கொடுக்கிறாள். தாயின் செல்லத்தால் பிள்ளை நாளடைவில் கெட்டுப்போய் விடுகின்றான். இவ்வாறு குடும்பத்தில் வளரும்பிள்ளை சூழ்நிலையாலும் கெட்டுவிடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் படியாதவர்; ஆனால் நல்ல ஒழுக்கமுடையவர்; பிள்ளையை அன்போடு வளர்க்கின்றனர்; பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர். பிள்ளை தீயமாணவனுடன்; பழகுகின்றான்; அவர்கள் தூண்டுதலால் வீட்டிலுள்ள பணத்தைத் திருடுகிறான். இவ்வாறு அவன் சிறு சிறு குற்றங்களைச் செய்து நாளடைவில் பெரிய குற்றவாளி ஆகிறான்.

பிள்ளை வளர்ப்பில் பெற்றோர் பங்கு முக்காற் பங்காகும். பிள்ளையை வீட்டில் நன்கு வளர்ப்பதும் வெளியில் நல்ல சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தலும் பெற்றோர் கடமையாகும். இந்த இரண்டில் எது தவறினாலும் பிள்ளை வளர்ப்புக்குறைவுடையதாகும்.

**பெற்றோர் நிலைமை**

நமது நாட்டில் பெற்றோருள் பெரும்பாலார் கல்வியறிவு இல்லாதவர்கள்; மிகுந்த ஏழைகள்; வசதியற்ற குறுகிய இல்லங்களில் வாழ்பவர்கள். இத்தகையோர் கூடிவாழும் இடமும் பல வசதிகள் அற்றதாக இருக்கின்றது. போதிய கல்விஅறிவும் நாகரீகப் பழக்க வழக்கங்களும் இல்லாமையால் அம்மக்களிடம் நல்ல பேச்சுவார்த்தைகள் மிகுதியாக இல்லை; தீய சொற்களை பலர்முன் கூறத்தகாதவற்றை, எளிதாகப் பேசுகின்றனர். இந்தச் சூழ்நிலையில் வளரும் பிள்ளைகளும் இளமை முதலே இச் சொற்களைப் பேசுவதைக் கேட்கின்றனர். சமுதாயத்தில் சான்றோர்கள் இருந்து இம்மக்களைச் செம்மைப் படுத்தாமையால், இவர்கள் வாழையடி வாழையாக இப்படியே பேசியும் வீண் சண்டைச்சவுரகளை வளர்த்தும் வருகின்றனர். சூதாடுதல் முதலிய தீய பழக்கங்களும் இவர்களிடம் இருக்கின்றன. இச் சூழ்நிலையில் வளரும் பிள்ளைகள் கெட்டுத்திரிவது இயற்கையாகிவிட்டது. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' ஆதலால், இளமையில் உண்டாகும் இத்தீய பழக்க வழக்கங்கள் வயது ஏற ஏற முறுக்கேறுகின்றன.

**பிள்ளைவளர்ப்பு ஒருகலை**

பிள்ளைவளர்ப்பு ஒரு கலையாகும். சமுதாய நலத்திட்டத்தில் இக் கலையைப்பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லும் அறிஞர்களை நியமிக்க வேண்டும். அவர்கள் ஊர்ஊராகச் சென்று பொதுமக்களுக்கு இக் கலை அறிவை ஊட்ட வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையற்ற பல செய்திகளைப் பொதுமக்களிடம் பேசும் பேச்சாளர்கள், பிள்ளைவளர்ப்புக் கலையைப் பற்றி அறிந்து அதைப் பொதுமக்களுக்கு ஊட்ட வேண்டும். நாட்டிலுள்ள நல்லவர்களும் சன்மார்க்க சங்கங்களும் அரசினரும் இத்துறையில் மிக்க ஊக்கம் காட்டவேண்டும். சமுதாயத்தில் உண்மையான பற்றுக் கொண்ட ஊழியர்கள் இத்துறையில் இறங்கி வேலை செய்யவேண்டும். இன்றுள்ள அவலநிலை உண்மையாக மாறவேண்டுமானால், இந்த முறையில் அனைவரும் பாடுபடவேண்டும். இங்ஙனம் உழைக்காமல் குற்றம் புரியும் சிறுவர்க்கு இரண்டொரு பள்ளிகள்மட்டும் வைத்துவிடுதல் போதாது; அவற்றுக்குப் பொதுமக்களோ அரசாங்கமோ மானியம் வழங்கிவிட்டால் மட்டும் போதாது.

**முடிவுரை**

இன்று சிறுவராக இருப்பவரே எதிர்காலச் சமுதாய மக்கள்; இந்நாட்டு மன்னர். ஆதலால் அவர்கள் நல்ல ஒழுக்கம் உடைய நன்மக்களாக இருந்தால்தான் எதிர்காலச் சமுதாயம் சிறந்து விளங்கும் சமுதாயம் நல்லநிலையில் இருந்தால் தான் நாட்டில் அமைதி நிலவும்; மக்கள் மக்களாக வாழ முடியும்; அரசியலும் பயனுடைய அரசியலாகும்; இந்த உயிர்நாடியை நன்மக்களும் அரசாங்கமும் கவனித்து விரைவில் ஆவன செய்தல் வேண்டும்; சிறுவர் உலகம் சீரடையச் செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈவோர் எழிலே நாட்டின் நல்வளம்

(நம. சிவப்பிரகாசம்)

"இர்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்' என்று கல்வியின் நுண கருத்தைப் பொருத்தமாய் விளக்கும் பொருளுக்கமையக் கற்கப்படுவோரை ஈவோர் என எடுத்துக் கொண்டு தமிழகத்துத் தாய்மொழி ஆசானாக அமர்ந்துள்ள கொடை வள்ளல்களைப்பற்றி, 'கல்லாரேயாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின் நல்லறிவு நாளும் தலைப்படுவர்' என்றபடி அன்னாருடன் பன்னாட் பழகிய நட்புரிமை கொண்டு, அன்பு செறிந்த ஆசியுரை கூறுதும்.

தான் அறிந்ததை மாணக்கனுக்கு ஈந்து உவக்கும் ஆசான் நாடுமகிழும் சான்றேன் ஆகின்றான். 'தக்கோர் குணங்கொடையால்' என்றாங்கு அறிவூட்டும் நெறி நிற்கின்ற ஆசான் தக்கோன் ஆகின்றான். 'இட்டார் பெரியோர், என்றபடி கற்பிக்கப்படுவோருக்குக் கல்விஇட்டு வளம் வகுக்கின்ற ஆசான் பெரியோன் ஆகின்றான்.

நாட்டின் வளத்துக்கு எடுத்துக் காட்டாகவுள்ளது மலை. அதற்கு ஒப்பாக உள்ளவன் ஆசான். அளக்கப்படமுடியாத அறிவின் பெருமையும் அருந்திறனால் ஆய்ந்தறிந்த அறிவினால் அருமையும், சென்றவிட மெல்லாஞ் சிறப்புடைமையால் அகண்ட புகழும் உடைய ஆசான் மக்கள் நல்ல வண்ணம் வாழ்வதற்குப் பயன்படும் மலை போலப் பரந்த நிலையுடைய (பரோபகாரியாகின்றான்) பிறர்க் குரியாளனாகின்றான்.

வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவது வளநலமிகுநிலம். அத்நிலம்போன்று ஆசான் சொல்ஏர் உழவனும் மாணக்கனுக்குப் பயன்படும் பாங்கும் வண்மையும் உடையவனாய் வாழ்வை அளிக்கின்ற கொடைவள்ளல் ஆகின்றான்.

மங்கல வாழ்வுக்கு அணியாய் அமைவது மலர். அம்மலர்போன்று அறிவு அழகும் அவ்வறிவை மாணக்கன் ஆர்வமுடன் அடைந்து ஆயும் தேமதுரச் செறிவும் பொருந்தக் கற்கப்படுவோனுக்குக் கலைமணமும் செம்பொருட்டேனும் உவந்துகுக்கும் பொறிவாழ்பூவாகின்றான்.

உலகத்து உயரிய வாழ்க்கைக்குச் சால அமைவது சான்றாண்மை. சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல ஒருபாற்கோடாத உள்ளத்தமைதி உடைமையால் ஆசான் சான்றோனாகின்றான்.

இத்துணைப் பெற்றியமைந்த வித்தகன்வழியே அரசும் செல்லும் என்னே!

ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருகவென்னா தவருள்
அறிவுடையோனா றரசுஞ் செல்லும்.

என்பது புறநானூற்றுப் பொன்மொழி.

தாமின்புறுவது உலகின்புறக் காணுப பரந்த நோக்குள்ள ஈகையாளர்களாய் அமைந்திருக்கும் பழைய பண்பு என்றும் இந்நாட்டில் நின்று நிலவுவதற்கு ஆசிரிய சங்கங்கள் அரும்பெருந் துணையாகின்றன. அவ்வாறுழைத்து ஆண்டு பலவாகியும் தூய பணியைப் பேணித் தொடர்ந்து புரியும் வலிகாமம் வடக்குத் தமிழ் ஆசிரியர் சங்கம் வளர்மதிபோல் அறிவு ஒளி பரப்பி நீடுவாழ்க. வாழ்க தெய்வத் தண்டமிழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# — கலை வழி —

[சி. என். அண்ணாதுரை. எம்.ஏ]

கலைத்துறை இன்று செழிப்புடன் வளர்ந்து கொண்டு வருகிறது; சிறப்புடன் என்று கூருமல் செழிப்புடன் என்று கூறுவது பொருளாழத்துடன் தான். செழிப்பான வளர்ச்சியே சிறப்பு என்று கொள்ள விரும்புகின்றவர்களை நான் தடுக்கவில்லை.

கலைத்துறையுடன் மக்களுக்கு உள்ள தொடர்பு வளர்ந்த வண்ணம் இருக்கிறது. "நடை உடை பாவனை' யில் கலையின் "வண்ணம்" அறிந்தோ அறியாமலோ ஏறி இருந்திடக் காண்கிறேன்.

அழகுக் கலையிலிருந்து அடுக்களைக் கலை வரையில், ஒருபுதுமையும், வளமையும் மின்னிடக் காண்கிறேம். மின்னுவதெல்லாம் பொன்னல்லத் தான். ஆனல் மங்கிக் கிடப்பதுதான் மாண்புக்கு அடையாளம் என்றும் தீர்ப்பளித்துவிட முடியாதல்லவா?

கலைத்துறை குறித்து எண்ணுவதும் பேசுவதும், ஆய்ந்தறிவதும், எழுதுவதும், வளர்ந்து வருகிறது. ஏராளமான ஏடுகள்! இதழ்கள்! மலர்கள்! துண்டு வெளியீடுகள்! எல்லா இதழ்களுமே கலைக்காக · ஒரு இடம் அமைத்துக்கொண்டுள்ளன. கலைக்காக என்றே உள்ள இதழ்கள், கலை குறித்து எண்ணிட உதவுகின்றன; மக்கள் கலைபற்றி எண்ணுவதைத் துணைகொண்டு இதழ்கள் பயன் பெறுகின்றன. ஒரு நல்ல தொடர்பு ஏற்பட்டுக்கொண்டு வருகிறது.

கலை, சமுதாயத்தின் நிலையை உயர்த்துகிறது என்பார் உளர். இல்லை, சமுதாயத்தின் நிலையைக் கலை தாழ்த்தி வருகிறது என்று கூறுவார் உளர்; இருசாரார் கூறுவதினின்றும், நிலையை மாற்றும் வலிமை கலைக்கு இருப்பது புலனுகிறது; அதிலே ஒரு மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கிறது; ஏனெனில் கலையின் வலிமை போயேவிட்டது என்றும், கலையின்மூலம் காணக் கிடைத்த பலன்களை இன்று காண முடிவதில்லை என்றும் கூறிக் கவலையைக் காட்டுகிருர்களே, சிலர், அவர்தம் உரை உண்மை அல்ல என்பது 'விளங்குகிற தல்லவா! கலை, வலிவுள்ளதாக, இருக்கிறது, பொலிவு வளருகிறது, மக்களிடம் உள்ள தொடர்பு வேகமாகப் பெருகி வருகிறது, செழிப்பாகவும் இருக்கிறது.

வலிவும் பொலிவும், மக்கள் தொடர்பும், செழிப்பும் கொண்டதாகக் 'கலை' இருக்கும்போது அந்தத் துறையை அலட்சியப் படுத்துவதோ, அதன் 'வளர்ச்சியையும் வகையையும்' இயற்கைக்கு விட்டு விடுவதோ, அதன் மூலம் பெறப்பட வேண்டியவைகள் எவை எவை என்பது குறித்துப் பொறுப்புக் காட்டாதிருப்பதோ நல்லதல்ல.

மலடிக்கு மகவுடன் கொஞ்சத் தெரிகிறதா இல்லையா என்பது பற்றி அதிகக் கவலை கொள்ளத் தேவை இல்லை; பெற்ற 'செல்வத்தை'ப் பேணி வளர்த்திடும் ஆற்றல் அன்னைக்கு இருக்கிறதா என்று அறிந்தாக வேண்டு மல்லவா?

கலை, மலடி அல்ல; படக் காட்சி 'பாவை' யில் கூறுவதானல், கலை 'மக்களைப் பெற்ற மகராசி!' எனவே, கலை மூலம் கிடைப்பது கிடைக்கட்டும் பெறுவோர் பெறட்டும் என்று இருந்து விடக் கூடாது. மக்களைப் பெறக் கூடிய மகராசி என்று தெரிந்தான பிறகு, சீராட்ட, பாராட்ட, சிறப்புடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்திட வழிவகையுடன் 'மகராசி' இருந்திடத்தக்க ஏற்பாடு இருந்தாக வேண்டுமே.

நல்லதங்காள் கூடத்தான் 'மக்களைப் பெற்ற மகராசி' - ஆனால் பாபம், கிணற்றிலே போட்டல்லவா குழந்தைகளைக் கொல்லவேண்டி நேரிட்டது.

அதுபோலத்தான், கலை, பல்வேறு 'பலன்களை' ஈன்றெடுக்கும் வளமுள்ளது என்பது உணரப்பட்டானபிறகு, அதன் போக்குக் கவனிப்பாரற்றதாக; இருந்து விடச் செய்வது கூடாது, என்கிறேன்.

கலை, வலிவுடையதுதான்; ஆனால் அந்த வலிவு, அழிவு வேலைக்கா? ஆக்க வேலைக்கா?

கலை, பொலிவுடையது; மறுப்பாரில்லை; ஆனால் அந்தப் பொலிவு, உள்ளத்திலே ஆபாசங்களை மூட்டி விடவா? அல்லது தூய்மையைத் தழைத்திடச் செய்யவா?

கலை, மக்களிடம் நெருங்கிய தொடர்புடையதுதான்; ஆனால் அந்தத் தொடர்பு ஆசான், மாணவன் என்ற விதமாகவா? பொலீஸ்காரன் குற்றவாளி என்ற வகையிலா? தோழர்கள் என்ற போக்கிலா? தொடர்பு எங்ஙனம் இருத்தல்வேண்டும்?

கலை, செழிப்புடையதுதான். ஆனால் அந்தச் செழிப்பு மக்களின் வளத்தை - உடல் - உள்ளம் - பொருள் - பண்பு - ஆகிய எல்லா வளங்களையும் - பெருக்கும் விதத்தில் இருத்தல் முறையா? அல்லது ஈடுபட்டோரைச் செழித்திடச் செய்வதுடன் மட்டும் இருந்திடல் போதுமா? இன்னோரன்ன கேள்விகள் எழுகின்றன.

எவரும் இதுபோல எழுப்புதல் காணோமே, என்கிறீர்கள்; கலைத்துறையிலே ஈடுபட்டவர்களுக்குள்ளே அடிக்கடி காணப்படும் 'சச்சரவுகள்' கலைத்துறையினர்க்கும் மற்றத் துறைகளில் உள்ளோருக்குமுள்ள வேறுபாட்டுணர்ச்சிகள், இவை யாவுமே மேலே குறிப்பிட்டுள்ள "கேள்விகள்" உள்ளத்திலே ஊசலாடுவதன் விளைவுதான்; வேறென்ன?

முறைப்படுத்தி, பக்குவப்படுத்தி, விளக்கம் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன், இந்தக் கேள்விகளை அணுகாததால், அணுகுவது கடினமாக இருப்பதால்தான், எளிதான வேறோர் வழியைக் கையாண்டு, கலையுலகில் உள்ளோர் ஏளனம் - ஏச்சு - பழித்தல் - சபித்தல் - என்பனபோன்ற கணைகளை ஒருவர்மீதொருவர் ஏவிக்கொள்கின்றனர்.

சச்சரவுகளாகி விடுகின்றன, இயற்கையாக எழுந்துள்ள பிரச்சினைகள்.

கலைத்துறையினர் எவரும் இந்தப் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் முடியாது. இந்தப் பிரச்சினைகளுக்குப் "பரிகாரம்" ஒருவருக்கொருவர், "வாய்ப்பு" வழங்கிக்கொள்வதுமல்ல.

கலை, வலிவும், பொலிவும் கொண்டது; மக்களிடம் அதற்கு உள்ள தொடர்பு வளர்ந்த வண்ணம் இருக்கிறது; அதன் செழிப்பும் பளிச்சிடுகிறது, உண்மை! இந்த "வாய்ப்பு" எவ்வழிச் செல்லல் வேண்டும்?

ஈதென்ன கேள்வி? எவ்வழிச் செல்லவேண்டும் என்றால் நல்வழி செல்லவேண்டும் - என்று பதில் அளிப்பீர்கள்; எளிதாகவும் நம்பிக்கையுடனும் பதில் அளிக்கிறீர்கள்; பதிலிலே பாகு கலந்தும் அளிப்பவர்களைக் காண்கிறேன். நாராசத்தைக் கலப்பவர்களையும் பார்க்க நேரிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு எளிதான ஒரு பதில் இருக்கும்போது, கேள்வியில் ஏதோ கடினம் இருப்பதுபோல ஏன் காட்டிக் கொள்கிறீர்? என்று என்னைக் கேட்க எண்ணுவீர்கள். தொடுக்கும் கேள்வியில் அல்ல; கிடைத்திடும் பதிலில் தான், நான் கடினம் ஊடுருவி இருந்திடக் காண்கிறேன்.

எவ்வழி செல்லவேண்டும் என்றால், நல்வழி என்கிருர்கள். மெத்த மகிழ்ச்சி.

நல்வழி எது?

நல்வழி கூற வல்லார் எவர்?

நல்வழி என்பது நம் காலத்துக்கு மட்டும் பொருந்துவதா, என்றென்றும் நிலைத்து நிற்பதா?

நல்வழி இஃது என்று கூறுபவர், கூறிடத் தகுதி படைத்தோர்தான் என்று ஏற்றுக்கொள்வது எங்ஙனம்? இவைகள் நீங்களும் நானும் எண்ணி எண்ணிப் பார்த்துப் பதில் தேடித் தீரவேண்டிய கேள்விகளிலே சில.

"மலேரியாக் காய்ச்சல் இது; கொயினு தந்திருக்கிறேன்" - என்று மருத்துவர் கூறும்போது, இவருக்கு எப்படி இது தெரிந்தது? இவர் கூறுவதை நாம் எங்ஙனம் சரியானது என்று ஏற்றுக்கொள்வது? என்று எவரும் ஐயப்பாட்டுக்கு ஆளாவதில்லை; "ஆம்" என்கின்றனர். பணமும் தருகின்றனர்.

அஃதேபோல குறிப்பிட்ட சிறப்பறிவுத் துறைகளிலே ஈடுபட்டவர்களின் 'கருத்துக்கள்' மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. மறுப்பார், ஐயுறுவார், வழக்காடுவார் அதிகம் இரார்.

ஆனல் எது **நல்வழி?** என்பதற்கு இன்னின்னவர் பதில் அளிக்கும் தகுதி பெற்றுர், பிறர் கேட்டு இசைவு அளிக்கும் கடமை உடையார்,என்று அறுதியிட்டுக் கூறிவிட முடியாது. கூடாது; தேவையும் இல்லை.

எனவேதான் எது **நல்வழி** என்பதற்கு, அளிக்கப்படும் பதில், வாழ்க்கை முடிவு பெறச் செய்வதாக இல்லை, புது வழக்குகளுக்கு வழிசெய்கிறது.

இதற்கு முடிவுதான் என்ன?

உண்டு! நல்வழி, எது என்பதைப் பிறர் கூறக்கேட்டு, எண்ணிப் பாராமல் ஏற்றுக் கொள்வதோ, அல்லது மறுத்துப்பேசி மாச்சரியங்களை மலியச் செய்வதோ, உண்மையான பலனைத் தராது.

வெற்றி, பெற்றவர்களையே வீழ்த்தி விடுவதுண்டு, வாதியே பிரதிவாதியாகிவிடும் விசித்திரமும் எழக்**கூடும்.**

எனவே **"நல்வழி"** என்பதற்குப் பொருள், பிறர் கூறுவதைக்கொண்டும், நாமே எண்ணிப் பார்ப்பதைக்கொண்டும் மட்டுமல்லாமல், நாம் எங்கு செல்ல விரும்புகிறோம்? நமது சமுதாயம் எங்கு செல்லவேண்டுமென்று நமக்கு உறுதியாகத் தோன்றுகிறது? என்பதுபற்றி ஒரு "முடிவுகண்டு" பிறகு, அந்த இடம்செல்ல, எவ்வழி சிறந்ததோ அது நல்வழி என்று கொள்ள வேண்டும்.

இதிலே இன்னல் அதிகம்; ஆனல் இந்த முறையில் தேர்ச்சி ஏற்பட்டால், இனிமையும் கிடைக்கும்.

இனி, எங்கு செல்லவேண்டும்? என்பதைத் தகுந்த முறையிலே காண வேண்மானல், இன்று எங்கு இருக்கின்ருேம் என்பதனை அறிந்தாக வேண்டும்; இன்றுள்ள கேடுபாடுகள் யாவை என்பதையும் தெரிந்துகொண்டாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலில் இருந்தவனுக்கல்லவா நிழலின் அருமை தெரியும்?

இன்று, நாமும், சமுதாயமும் "எங்கு" இருந்து வருகிறோம்?

ஜாதியும் அதனாலாயபேதங்களும், மூட நம்பிக்கைகளும் அவைகளால் மூண்டுவிடும் நாசங்களும், பொருளாதார பேதங்களும், அவைகளால் கொதித்து எழும் குரோதங்களும், ஆட்சி முறை அலங்கோலங்களும், அவைகளால் ஆர்த்தெழும் ஆவேச உணர்ச்சிகளும் அருவருக்கத்தக்க நடவடிக்கைகளும் - தன்னம்பிக்கையற்ற தன்மையும், பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் போக்கும், சலிப்பும் - குழம்பிக்கிடக்கும் இடத்திலே இருக்கிறோம்.

சேற்றிலுள்ள செந்தாமரையைக் காட்டினால் மலருக்குப் பெருமையே தவிர சேறு சிறப்படைந்து விடாது. அதேபோல, இவ்வளவு இழிதன்மைகளுக்குமிடையிலே, காணப்படும் கருத்துத் தெளிவுள்ளோரை, அவர்தம் பேச்சினைக் காட்டிவிடுவது, சமுதாயம் சிறந்த நிலையில் உள்ளது என்று காட்டுவதாகாது.

இந்த "இழிதன்மைகளை" நீக்கிக் கொண்டு, இவை ஒழிந்த பண்புகள் நிறைந்த ஓர் "நல்லிடம்" செல்லவேண்டும்.

அதற்கான வழிதான் நல்வழி!

காசிக்குச் செல்ல எண்ணிக் கொண்டு, காஞ்சிபுரம் பஸ்ஸில் ஏறிப் பயன் என்ன?

பம்பாயில் போகும் வண்டி பளபளப்பாக இருக்கிறது என்பதால் அதிலே ஏறிக்கொண்டு பாபநாசம் எப்படிச் போய்ச் சேரமுடியும்?

அதுபோலத்தான் **செல்லும் இடம்** எது என்று ஏற்படுத்திக்கொள்ளுகிறோமோ, அந்த இடத்துக்குக் கொண்டு செல்லும் பாதை, எதுவோ, அதுதானே நம்மைப் பொறுத்தவரையில் நல்ல பாதை!

இந்த முறையிலே ஒரு "பக்குவம்" ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; பிறகு பாதை புரியும்; பயணமும் எளிது.

ஏடெடுத்துப் படித்திடும் போதும் பாடலைக்கேட்டு இன்புறும் வேளையிலும், ஆடலைக்கண்டு அகமகிழும் போதும், படக்காட்சிகண்டு பரவசப்படும் வேளையிலும், ஓவியத்தைக்கண்டு உள்ளத்தில் கிளர்ச்சி எழும்போதும் பேச்சுக் கேட்டுப் பேரின்பம் பெறும் போதும், அழகுகண்டு ஆனந்தமடையும் போதும், இந்த "ஒரு நோக்கம்" அளவு கோலாகவும், துலாக் கோலாகவும், உரை கல்லாகவும் இருந்திட வேண்டும்; இந்தக் கலை நிகழ்ச்சிகளை ஆக்கித் தருவோருக்கும் இது முழுதும் தேவை.

இந்த வகையிலே "கலை" கவனிக்கப்பட்டால், அதன்மூலம் செழிப்புக் கிடைக்கும்; அந்தத்துறையும் செழிப்புடன் இருந்திடுவது மட்டுமல்லாமல், சிறப்புடன் திகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்தமிழரின் இணைப்பு மணம்

புலவர், நா. சிவபாதசுந்தரன் அவர்கள்
மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

பழந் தமிழரின் வாழ்க்கையை அகம், புறம் என இரண்டாகக் கொண்ட தொல்காப்பியர்; அகவாழ்வில் அமைந்த அன்பியலான இன்ப வுலகை; கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என மூவகையாக வகுத்துள்ளார். அம்மூன்றும் தொல்மக்களான தமிழரின் இன்பியல் வாழ்வின் தோற்ற வளர்ச்சியின் படிமுறைகள் எனலாம். தொல்காப்பியர் அகத்திணையியலில் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணையென்று முறைப்படுத்திக் கூறினும், ஐந்திணையை விரித்துக் கூறியபின்பே கைக்கிளை பெருந்திணைகளைக் கூறியுள்ளார். இதிலிருந்து தொல்காப்பியர் காலத்தமிழர் ஐந்திணை வாழ்க்கையையே பெரிதும் போற்றினர்கள் என்பது புலனாகின்றது. உலகியலை ஒட்டி உன்னி நினைக்கும்போது அம்முறை பெருந்திணை, கைக்கிளை, ஐந்திணை என்று நிரல் படும்.

பொதுவாகக் குடும்பத் தோற்ற வளர்முறையை ஆராய்ந்த இக்கால மேலைத்தேய விஞ்ஞானிகள் முதற் குடும்பமுறை பெற்றோர்களும் குழந்தைகளும் மணப்பதைத் தடுத்ததென்றும்; இரண்டாவது குடும்பமுறை சகோதரனும் சகோதரியும் மணப்பதைத் தடுத்ததென்றும்; மூன்றுவது குடும்பநிலை ஒரு குலத்துக்குள் மணப்பதைத் தடுத்து, ஒரு குலத்தைச் சார்ந்தவர்கள் வேறு குலத்தைச் சேர்ந்தவர்களை மணந்து வாழ்ந்தனர் என்றும்; இதிலிருந்து ஏகதார மணத்திற்கு வித்திடப்பட்டதென்றுங் கூறியுள்ளார்கள். அம்மூன்று நிலையில் உள்ள மணத்தைக் கூட்டு மணம், இணைப்பு மணம், ஏகதார மணம் எனச் சுட்டியுள்ளார்கள். அவ்விஞ்ஞானிகளின் கருத்துப்படித் தொல்காப்பியரை நோக்கும்போது முதற் குடும்பமுறை பெருந் திணையாகவும், இரண்டாங் குடும்பமுறை கைக்கிளைத் திணையாகவும், மூன்றுங் குடும்ப முறை ஐந்திணையாகவும் அமையும். இதில் இரண்டாங் குடும்பமுறையான கைக்கிளையை - இணைப்பு மணத்தை ஈண்டு ஆராய்வாம்.

சிறுகுலத் தொகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் கூட்டாக வேலை செய்தனர். கூட்டாகவே தமக்குள்ளே புணர்ந்து மக்கள் விருத்திசெய்தனர். மாக்களாகவும், காட்டு மனிதராகவும், வாழ்ந்தனர். அவர்கள் இரத்தத் தொடர்புள்ள உறவினர்கள். பேதாபேதமில்லாது கூடிப் புணர்ந்து இன உற்பத்தி செய்வதின் விளைவுகளை நாட்செல்லச் செல்லப் பொருளாக்கத் துணைகொண்டு விளங்கினர்கள். நெருப்பும் கால்நடைச் செல்வங்களும் பழந்தமிழர் பற்றிக்கொள்ளவே சிறுகுலத் தொகுதி சிதைந்து கூட்டுக் குடியிருப்பில் சகோதரிகள் ஒரு தொகுதியின் மையமானர்கள். அவர்களை மணந்து கொள்ள முடியாத உடன் பிறந்த சகோதரர்கள் இன்னெரு தொகுதியின் மையமானர்கள். அவர்களுடைய சகோதரிகள் தமக்குப் பொதுவான கணவர்க்குப் பொதுவான மனைவியராக விளங்கினர்கள். இக் கணவர்கள் அவர்களின் சகோதரர்கள் அல்லர். இத்தகைய "கூட்டுத் திருமணம்" பெற்றோர்களில் "தாயை" மட்டும் திட்டமாக அறியச் செய்தது. இதுவே இணைப்பு மணத்தின் இனியபேறு என்க. இணைப்பு மணத்தில் "தாய்" குழந்தையின் தெய்வமானள். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தமிழுரையில் ''அன்னே'' முதலிடம் பெற்றது. தமிழ் நிலத்தின் இணைப்பு மணச் செய்தியின் அறிகுறி அன்றே. நாளடைவில் கூட்டத் திருமணம் பொது மனைவியராகும் நிலை பெயர்ந்து, கூட்டத்துள்ள ஒரு ஆணும் பெண்ணும் வேட்கை மிகுந்து கூட்டத்துள்ள மற்ற ஆண்களையும் பெண்களையும் விலக்கி விட்டுத் தமக்குள்ளே புணர்ச்சி உறவுகளைக் கொண்டு இருவராக வாழ்ந்தனர். அவர்கள் வேட்கை தணியும் வரையும் உறவு கொண்டவர்கள். உறவில் உண்மை இல்லாததாலே ஒருவராகாமல் இருவராக இருத்தலால் இக்குடும்பநிலை ''இணைக் குடும்பம்'' எனப்படும் என்பர்; இதுவே மேலைச் செய்தியாகும். இம் மணத்தில் ஒருவன் பல மனைவியரைப் பெறும் நிலை இருந்ததென்றும் கூட்டத் திருமணத்தின் கடைசிக் கட்டம் இணைக்குடும்பமேயென்றும் அவர்கள் கூறியள்ளார்கள். இதை நாம் நம் தமிழில் காண்பாம்.

''அதுவே;

தானே யவனே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்''
(இறை: கள: 2)

என்பது இறையனுர் களவியல் நூற்பா. இந்நூற் பாவிற்கு ஒருவன் (பெயர் குறிப்பிடப்படவில்லை) ''இவனும் பற்பனூருயிரவர் கூர்வேல் இளைஞரொடு திரிதரினன்றித் தனியனுதல் இலன்; பெரியனுதலால் இவளும் பற்பனூருயிரவர் ஆயர் மகளிர் புடைசூழத் திரிதரினன்றி தனியளாதல் இலள், பெரியளாதலால் இங்ஙனம் இல்லாதார் இவனும் இளைஞரின் நீங்கித் தானேயாய், இவளும் ஆயத்தின் நீங்கித் தானேயாய் இங்ஙனம் புணர்வர் என்ப'' என்று உரை ஒன்று செய்ததாக நக்கீரர் காட்டியுள்ளார். இந்த உரை மேலை அறிஞரின் இணைப்பு மணக்கருத்தோடு ஒத்துள்ளது' அவ்வுரையில் ஆடவரும் பெண்களும் மண நோக்கில் கூட்டம் கூட்டமாகத் திரிவதும், மணப்பதும், அதிலிருந்து விடுபட்டுத் தானேயாய்ப் புணர்வதில் இருவராய் நிற்பதுமாகிய இணைப்பு மணத்தின் இரண்டு நிலைச் செய்தியும் அமைந் திருக்கின்றது. ஆனல் நக்கீரர் தாம் வாழ்ந்த காலத் தமிழ் மக்களின் அன்பின் ஐந்திணை வாழ்விற்கு அவ்வுரை பொருந்தாமை கண்டு அதை மறுத்துத் தாம் ஒரு புத்துரை செய்தார். நக்கீரர் மறுத்த அவ்வாசிரியர் அவ்வுரைச் சிந்தனைக்குத் தமிழ் நிலத்தில் வாழ்வு வளங்காணுது வழங்கியிருப்பரோ? இல்லையென்க. இந் நூற்பாவில் ''காமப் புணர்ச்சி'' எனப் பொதுப்படக் கூறியதும், அதற்கு நக்கீரர், ''வேட்கை மிகுவினுல் புணர்வது'' என்று உரை கண்டதும் காண்க. இன்னும் அந்நூற்பாவிலே, ''இருவயின் ஒத்தல்'' என்ற தொடர்'', ''இரண்டு இடத்திலிருந்து ஒப்புப்பெறுதல்'' என்று நேர் பொருள் தருதலும் இணைப்பு மணத்தினதும் இணைக் குடும்பத்தினதும், தோற்றத்தை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. தொல்காப்பியரும் ''காமக்கூட்டம்'' என்று சொல்லியதும் காண்க.

தொல்காப்பியர் களவியலில் களவொழுக்கத்திற்குரிய காரணம் முதலியன கூற எண்ணி

''ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்

ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரையின்றே''
(தொல்: கள: 2)

என்ற ஒரு நூற்பாவைச் செய்தருளினுர். இதைப்படித்த தமிழ்ப்புலவோர் பலவிதமாக உரை செய்துள்ளார்கள். நாமும் இணைக்குடும்பத் தோற்றத்திற் கேற்ப உரைகூற உன்னுகின்ரேம். இதற்கு நச்சினர்க்கினியர் உதவி செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றார். இந்நூற் பாவில் அமைந்த நுட்பமான பகுதி.

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப",

என்பது. இப்பகுதி இணைக்குடும்பத்திற்கும் தனிக்குடும்பத்திற்கும் பொது நின்று பொருள்தரும். புலவர்கள் பொறுமையாய் இதை ஊன்றி உன்ன வேண்டுகின்றேன். "ஒன்றே வேறே யென்றிருபால்வயின்" என்றஅடிக்கு நச்சினார்க்கினியர், "இருவருக்கும் ஓரிடமும் வேறிடமும் என்று கூறப்பட்ட இரு வகை நிலத்தின் கண்ணும்," என்று உரை எழுதியுள்ளார். இவ்வுரைக்கு அவரே விளக்கம் கொடுக்குமிடத்து, "ஒரு நிலம் ஆதலை முற்கூறினர். இவ் வொழுக்கத்திற்கு ஒதியது குறிஞ்சி நிலம் ஒன்றே ஆதற்சிறப்பு நோக்கி. வேறு நிலம் ஆதலை பிற்கூறினர். குறிஞ்சி தன்னுள்ளும் இருவர்க்கும் மலையும் ஊரும் வேருதலும் அன்றி திணை மயக்கத்தான் மருதம் நெய்தல் என்னும் நிலப்பகுதியுள் ஒருத்தி அரிதின் நீங்கிவந்து எதிர்ப்படுதல் உள வாதலுமென வேறுபட்ட பகுதி பலவும் உடன்கோடற்கு" என்று எழுதியுள்ளார். இதில் இணைப்பு மணத்தில் இருந்து இனித்த இணைக்குடும்பம் நிலத்தை அடிப்படையாகக்கொண்டு மலர்ந்ததாதலின் அவ்விடத்தின் முதன்மை அழகாக விளக்கப்பட்டுள்ளது. இனி, நம் உரையைக்காண்பாம். "இருவர்க்கும் ஓரிடமும் வேறிடமும் என்று கூறப்பட்ட இருவகை நிலத்தின் கண்ணும் உடன்பிறந்தாரை ஆண்பகுப்பு, பெண்பகுப்பு என்று பகுத்தல் செய்யப்பட்ட கட்டுப்பாட்டில் ஒப்புக்கொண்டமக்களில், அக்கூட்டத் திருமணத்தின் நின்று தனித்து இணைவதால் உயர்ந்த கிழவனும் கிழத்தியும் காண்க."

இவ்வாறு இணையுங்கால் ஆண் நிலைத்தகுதி மிகுந்தாலும் குற்றமில்லை என்பது நமதுரை. இவ்வுரை கழவொழுக்கத்தின் முன் நிலைச்சருக்கம் என்க. மேற்கூறிய உரைக்குத்தக அந் நூற்பாவைக் கொண்டு கூட்டுச் செய்யின், ஒன்றே வேறே யென்றிரு பால் வயின், பாலதாணையின் ஒத்த, ஒன்றி யுயர்ந்த கிழவனும் கிழத்தியும் காண்ப; மிக்கோனுயினுங் கடிவரை யின்றே" என வரும். இப்பொருள்கோள் இணைப்பு மணம்நோக்கி எழுந்ததென்பது அறிக. இவ்வாறு ஊழ்வினையைப் பற்றி உன்னி உணராத ஊமை நாகரிகத்தின் இணைக் குடும்பச் செய்தி காண்க. மறைமலையடிகளார், "மேற் பிறவிகளிற் கட்டும் காவலும் இன்றி ஓர் ஆடவனும் ஒரு மங்கையும் தாம் ஒன்றாய்க் கலந்து ஒழுகிய பகுதியும், கட்டுங் காவலும் தோன்றிய பிற்பிறவிகளில் அவர்தம் வேறாய் இருந்தொழுகிய பகுதியும் என்ற ஈரிடத்தும் என்று "ஒன்றே வேறே இருபால் வயின்" என்ற அடிக்கு உரை கொடுத்துள்ளார். இதிலிருந்து "ஒன்றே" என்றது 'கூட்டு மணம்' என்பதும், "வேறே" என்றது "இணைக்குடும்பமும்" அதன்வழி வந்த "தனிக் குடும்பமும்" என்பதும் அடிகளாரின் அடியகத்தில் இறைச்சியாய் அமைந்திருந்தது தெளிவாகின்றது. நிற்க,

களவியலில் இயற்கைத் தேர்வில் அமைந்த புணர்ச்சியை, தெய்வப் புணர்ச்சிஎன்றும்மூன்னுறுபுணர்ச்சிஎன்றும் குறிக்கப்பட்டுள்ளது. இதில் "முன்னுறு புணர்ச்சி" இணைக்குடும்பத்தில் தோன்றிய சொல்லென்க. "இவள் நலம் இவனானே முன்னுற எய்தப்பட்டமையானும், இவன் நலம் இவளானே முன்னுற எய்தப்பட்டமையானும் என்பது" என்று அச்சொற்கு உரை தரப்பட்டுள்ளது. இதில் கூட்டத்தை விட்டு ஆண், பெண் விலகுவதற்குரிய ஊழை எண்ணாத அக்கால நிலைக்குக் காரணம் காட்டப்பட்டுள்ளது. அதுதான் "நலம்" என்பது. இந்நலம் பொறியால் யாத்த புணர்ச்சி"; "உருவு திறுத்த காம வாயில்" என்று தொல்காப்பியர் தெளிவாக்குவதால் புறநலமே பெரிதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தது என்பது தெளிவு. இன்னும் இவ்வுரை இரண்டாகப் பகுக்கப்பட்டும் ஒருபக்க உருநலம் சிறந்ததாகவும் காட்டியதால் இணைப்பு மணம் கைக்கிளைத் திணையாய்த் தமிழகத்தில் இருந்ததென்பது தெளிவாகின்றது. இதில் முன் உரை ஆண்பாற் கைக்கிளையாயும் பின்னுரை பெண்பாற் கைக்கிளையாயும் காண்க. எனவே இணைப்புக் குடும்பத்தின் புணர்ச்சி முன்னுறு புணர்ச்சி என்பதும், அதுவும் "இவன் நலம் முன்னுற இவளானே எழுதப்பட்ட பெண்பாற் கைக்கிளை என்பதுவும் தெள்ளத் தெளிவு. இன்றும் தொல்காப்பியர் இயற்கைப் புணர்ச்சியின் இயல்பு கூறுமிடத்து முதற்கண் "தலைமகள்" இயல்பு கூறியதும் ஒருதக்க சான்றன்றோ? மற்றொன்று அன்பின் ஐந்திணைக்கு ஆண்பாற் கைக்கிளையே சிறந்தது என்று கூறியதும் காண்க,

ஆண்பாற் கைக்கிளையைத் தொல்காப்பியர் வைத்தது காதற் களவியல் உள்ளப்பண்பும் புணர்ச்சி சிறத்ததாகலின் அன்புணர்ச்சி சிறக்க "காட்சி, ஐயம், துணிபு" என்று வகுத்தார். களவியல் - இணைக் குடும்பக் களவியல் காதலில்லையாதலால் உரு அழகில் உந்தப்பட்டு முன்னுறுதலால் மெய்தொட்டுப் பயிறலான மெய்யுறு புணர்ச்சி பெரிதாதல் இயற்கையே. உருவழகில் உந்தும்போது ஐயம் துணிபுக்கு - மனப்பண்புக்கு இடமேயில்லை,

இணைக் குடும்பமாகுதற்கு முன் செய்த களவை, களவென்ற சொல்லால் சொல்லுதல் நேரியதன்று என்று சில புலவர் எண்ணியுள்ளனர். "மறை" என்றே கூறவேண்டும். ஏனெனில் முன்னுறு புணர்ச்சியில் மெய்யுறு புணர்ச்சியே பெறுதலால் பெண்ணின் வயிறு கருவாய்ப்புறும்போது அக்கருவுக்குரிய ஆண் அவன் இருந்த கூட்டத்தார்க்கு மறைபொருளாய் இருத்தலால் என்க. இணைக் குடும்பக் களவில் பாங்கன் பாங்கி அமையவில்லை. ஏனெனில் கூட்டத்தார் ஒருவரும் அறியாமல் இப்புணர்ச்சி இயங்குவதால்என்க, இது அகநானூற்றில் அறுபத்திரண்டாம் பாட்டில் "பேயும் அறியா மறையமை புணர்ச்சி" என்று மிக அழகாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்வடியில் களவு "மறை" என்றும், அம்மறையின் இயல்பை "பேயும் அறியா" என்று சுட்டிக் காட்டுவதிலிருந்தும் இணைக் குடும்பக் களவுச் செய்தி இனிதுறுகின்றது. அப்பாட்டில் பெண்ணின் அழகு சித்தரிக்கப்படுவதால் அகத்தில் சேர்ந்தது. எனவே, ஆணின் அழகில் பெண் வேட்கையுற்று மறைப் புணர்ச்சி செய்வது இணைப்பு மணத்தின் செய்தி என்று சொல்லவும் வேண்டுமோ?

தொல்காப்பியர் களவொழுக்கம் இயல்பு கூறிய நூற்பாவில் "அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் காமக் கூட்டம்" என்று கூறியதால் அன்பொடு புணராத காமக்கூட்டம் ஐந்திணையில் உள்ளது என்பது வேண்டும் இல்லையேல் "அன்போடு புணர்ந்த" என்ற அடை ஐந்திணைக்கு வரஏதில்லையாம் இனி அந்நூற்பாவில் "துறையமை நல் யாழ்த்துணையமையோர் இயல்பே", என்று களவொடுக்கம் காட்டப் பெற்றுள்ளது. இதில் யாழ்த்துணையோர்" என்றது கந்தருவரை என்க. இவர்களில் துணைமை செய்யாத கந்தருவர் களவு செய்து வேட்கை தணியும் நாள் வரையும் புணர்ந்து பிரியும் கந்தருவரும் இருந்துள்ளனர் என்க. இவர்களைத் தொல்காப்பியர் எடுத்துக்காட்டாமல் துணைமை செய்துவாழும் கந்தருவரை எடுத்துக் காட்டியதால் இணைக்குடும்பமும் தனிக் குடும்பமும் தமிழ் நிலத்தில் இருந்ததுக்கு ஐயமில்லை. இதிலிருந்து இணைப்பு மணந் தனித்த களவையுடையதென்பதும், அது பிரிவுக்குடும்பமாகவும் பிரிவில்லாக் குடும்பமாகவும் அமையப்பெறும் என்பதும் நாம் எண்ணலாம்.

உருவு நிறுத்த காமவாயிலில் இனித்த தமிழ் நிலத்து இணைக்குடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம் உடல் நலத்தில் கண்ணுங் கருத்து மாக இருந்தது. அஞ்ஞான்று இருந்த குழந்தைகளுக்கும் தாய்க்கும் நோயும் துன்பமும் வருவித்துக்கொள்ளாமல் பெற்றோர்கள் தம் இளைஞர்க்குச் செய்து வைத்த இல்வாழ்க்கை ஏற்பாடுகள் மேலை அறிஞர் இணைக் குடும்பத்துக் குரிய செயற்பாடுகளோடு ஒப்புறுத லால் அவற்றை இனிக் காண்பாம்.

"காதற்பரத்தை எல்லார்க்கும் உரித்தே" என்னும் இறையனுர் அகப்பொருள் நூற்பாவிற்கு நக்கீரனுர் உரையிலிருந்து அவ்வேறுபாடுகள்காட்டுவோம்.

"தலைமகளை எய்தாத முன்னே
பரத்தையரை உடையன்

என்பது. எனவே மேற்சொல்லப்பட்ட குறை எய்தாதோ எனின் எய்தாது. குரவர்கள் இவனறியாமையே இவ னுரிமை இது எனவும், இவன் யானை யும் குதிரையும் இவ்வெனவும், மற்று மெல்லாம் இவற்கென்று வகுத்து வைத்துத் தாம் வழங்கித் துய்ப்ப என்பது. அவ்வகையே குரவர்களான் இவ னுரிமை வளர்க்கப்பட்டாராகலின் தலை மகளை எய்துவதன்முன் உளர் என்பது இவன் முன்னே தன் உரிமையாவது அறிந்தவாறு என்னை எனின், தலை மகன் தலைமகளை நீங்கித் தருமமும் அருத்தமும் உள்பட்டுத் தலைமகள் மாட்டுப் போதருமிடத்து, அவர் முன் சொன்னவாறே குழலும் யாழும் தண் ணுமையும் முழவும் இயம்புப; இயம் பினவிடத்து, 'இஃது என்னை?' என் னும்; என்றக்கால், 'அது' நின் உரிமை அன்றே? என்ப. என்றார்க்கு 'அஃது என் உரிமை யாயினவாறு என்னை' என்னும், என்றவிடத்து, 'நின்குரவர் களான் நினக்கு உரிமையாக வகுக்கப் பட்டார்' என்ப; 'ஆயின் நம் குரவரது பணிமாறு கொள்ளலாகாது' என்பத ஞற் காண்டற்குச் செல்லும்; சென் ருனை அவர்தங்கண் நயப்பிப்ப என்பது இதுபரத்தையிற் பிரிவு நிகழுமாறு."

இவ்வுரையி லிருந்து பண்டைத் தமிழ்ப் பெற்றோர்கள் தம் புதல்வர்கட்கு உரிமையாகத் தத்தஞ் செல்வ வளத் திற்குத் தக்கபடி பெண்கள் இருவர் மூவரை அவர்க்குக் காமக் கிளத்தியராக வளர்த்து வைப்பர். தன் புதல்வன் தன்ருற் காதலிக்கப்பட்ட ஒரு மங் கையை மணஞ் செய்துகொண்டபின், அவன் தன் மனைவி மகற் பெற்றனளா யின் அம்மகவு நன்கு வளர்ந்து சிறு வன் சிறுமியாகும் வரையில் அவன் தன் மனைவியை அணுகாமைப் பொரு ட்டு, அவனுக்கு உரிமையாகத் தாம் வளர்த்த இளமங்கையரை அவன் பெற் றோர்கள் அவனுக்கு மனைவியராக அமைத்து வைப்பர். இவ்வாறு ஆணும் பெண்ணும் மனநல, உடல் நலங்கள் நன்கு வாய்க்கப்பெற்று உயிர் வாழ்ந் தனர். இவ்வாறு விரும்பி மணந்த மூதன் மனைவிக்குப் பின் பெற்றோர்க ளால் வளர்த்து அமர்த்தி வைக்கப் பட்ட மனைவியர் காமக்கிழத்தியர் அல் லது "இற்பரத்தையர்" என்னும் பெய ருடையராய்த் தலைமகனோடு இணைந் திருந்து வாழ்க்கை செலுத்தியவரலாறு.

"காமக் கிழத்தி மனையோ
ளென்றிருவர்

ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்"
(தொல் : கற்: 5)

என்ற தொல்காப்பியர் வாக்காலும் நக் கீரர் உரை நன்கறியக் கிடக்கின்றது. இதற்கு வரலாற்றுச் சான்ருகப் புற நானூற்றில் ஒரு செய்தி கிடைத்திருக் கிறது. வையாவி நாட்டை பெரும் பேகன் என்ற வேந்தன் ஆட்சி புரிந் தான். அவனுடைய மனைவி பெயர் கண் ணகி என்பது. அவன் நல்லூர்ப் பரத் தையரோடு பூண்ட புறத்தொழுக்கம் முறுகியதனுல் தன் மனைவியாகிய கண் ணகியைக் கைவிட்டான். அக்கண்ணகி யார் பொருட்டுச் சான்றோர் பலர் பாடிப் பரிசில் முறையாக நின்ற செய்தியே அச்செய்தியென்க; இன்னும் வணிகர் குலக் கோவலன் கண்ணகியை விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவியென்னும் பரத்தையோடு சில நாட்கள் வைகி அவளிடம் அன்பின் தன்மை அமையாத பொருட் பெண்டிராய் இருப்பதை உணர்ந்த கோவலன் அவளை விட்டுத் தானே கண்ணகியை மீண்டும் அடைந்த செய்தியும் இளங் கோவடிகளாற் காட்டப்பட்டுள்ளது. புறநானூற்றுக் காலத்தில் புலவர் போன்ற சான்றோர்கள் அறிவுறுத்த, அதனால் தெளிந்து அகன்ற நிலையும், சிலப்பதிகார காலத்தில் அவ்வாறு அமையாது தானே அன்பை விளங்கி பரத்தையரை விட்டு விலகும் நிலையும் நோக்கப் பழந் தமிழகம் அன்புப்பாதையில் வளர்ந்த முறை விளங்குகின்றதல்லவா? நிற்க,

தமிழகத்தில் இணைக்குடும்பத்தில் அமைந்த வேறுபட்ட உடம்பின் நிலைகளை உற்றுநோக்கி ஆராய்ந்து நம் பண்டையத் தலைவர் நாற்பத்தைந் தாண்டுகட்கு மேற்பட்ட தங் காதன் மனைவியரையும் ஆடவர் மருவுதல் தவிர்ந்து வேறு மாதரை மணந்து கொண்டு வாழவும் செய்தனர். இதனைத் தொல்காப்பிய நூலை ஆராய்ந் தாற் புலனுகின்றது. ஓர் ஆண் மகன் தான் முதலில் மணந்து கொண்ட மனைவி "தொன்முறை மனைவி என்றும் பின்னர் மணந்துகொண்ட மனைவி பின்முறை மனைவி என்றும், பெயர் பெறலானமை தொல்காப்பியத்துக் கற்பியலிற் போந்த

"பின்முறை யாக்கிய
பெரும்பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி
எதிர்ப்பா டாயினும்"

(31)

என்னும் நூற்பாவினுல் இனிது விளங்காநின்றது. இவ்வாறு நந்தமிழ் முதுமக்கள் தான் முதல் மணந்த மனைவியைக் காத்தற்பொருட்டுப் பன்மனைவியரை மணந்தும் பின்முறை மனையாளர்க்கு மற்றொருமங்கையை மணந்தும் இணைக்குடும்பம் இயங்கிய வரலாறு அறிக. இதனுலேயே பழந் தமிழகத்தில் "வரைவின் மகளிர்" பலர் மலிந்தார்கள்; அம்மகளிரும் அவ்வாழ்விலேயே இன்பமுங் கண்டார்கள். இம் மகளிர்கள் ஆணின் பொருளுழைப்பில் அமையாது தன்னுழைப்பில் வாழ்க்கையைக் கழித்ததும் அவ்வின்ப முறைக்கு உதவியாயிற்று என்க. இத்தகு பெண் கூட்டத்தையே திருவள்ளுவர் "வரைவின் மகளிர்" என்ற தலைப்பால் கண்டித்து அறிவுறுத்துவாராயினர்.

இணைக் குடும்பத்தால் பழந்தமிழ் நிலத்தில் மருமக்கள் தாயம் உண்டாயிற்று. இணைக் குடும்பத்தில் பெண்ணே தலைமை வகித்தாள். ஏனெனில் பெண்ணே உழைப்பில் -பயிர்த்தொழிலில் - ஈடுபட்டு வீட்டில் உணவுப் பொருளைப் பெரிதும் அமைத்துக்கொண்டதேயாம். இன்னும் பலமனைவி மணமுறும் ஆண்கள் பெண்வழிச் சேரல் விந்தையல்ல. பெண் வீட்டை ஆண்டாள். ஆண் நாட்டை ஆண்டான். இக் குடும்பத் தோற்றம் தாயும் சேயும் தெளிவாய்த் தெரிந்த இணைப்பு மணத்தில் நின்று வந்ததாதலால் தாயர் முறை தலையெடுத்தது. "தாயம்" என்ற சொல் தமிழ்ச்சொல்லாக இருப்பதாலும் முன்னர் சேரநாடுஎனப் பெயர் பெற்ற இன்றைய கேரள நாட்டில் இப்போதும் மருமக்கள் மானியமுறை இருப்பதாலும் தமிழகம் அந்நிலையை அடைந்தது என்பதற்கு ஐயமில்லை. "தாயம்" என்ற சொல் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னே இத் தமிழ் நாட்டில் வழங்கியது என்பது அவர் "தாயத்தின் அடையா" (பொருளியல் 25) எனக் கூறுதலான் அறியத் தக்கது. தாயததின் அடையா என்ற சொற்றொடரால் தாயத்தின் அடைந்த நிலை தமிழகம் தழுவியது. என்பது பெறப்படும். தந்தைக்குரிய பொருள் களாய் மக்கள் எய்துதற்குரிய பொருள் களிற் சேராதனவாய். என்பதே இதன் பொருள். இனிப் பெண்வழிச் சேறலில் ஆண் நின்ற நிலையைக் காண்பாம். அன்பின் ஐந்திணையில் தலைவியின் களவொழுக்கத்தை வெளிப்படுத்தும்முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் தலைவியாற் தோழிக்கும், தோழியாற் செவிலிக்கும், செவிலியால் நற்றாய்க்கும், நற்றாயால் தந்தை முதலானவர்க்கும் அறிதல்முறை புலனெறி வழக்கில் ஒப்பப்பட்டதிலிருந்து பெண் வீட்டை ஆளும் செய்தி உலகியலில் இவ்வாறு ஒட்டியதென்பது தெளிவு; இன்னும் அன்பின் ஐந்திணையில் வரும் "சேட்படை" தோழியாலும் "ஒருவழித் தணத்தல் தாயர்களாலும் அமைக்கப்பெற்றமையிலிருந்து வீட்டின் செயல் உரிமைபெண்ணுக்கேயென்பது இனிதறியப்படுகின்றது. இதனை;

"தாயறிவுறுதலின் ஏனோரும் அறிப"
என்று இறையனாரும்,

"தந்தையும் தன்னையும்
முன்னத்தின் உணர்ப"

என்று தொல்காப்பியரும் கூறியுள்ளார்கள். இன்னும் அன்பின் ஐந்திணையில் "இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக் கடைகொண்டு பெயர்தல் என்று உடன்போக்கில் ஆடவர் நிலையும்,

"ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்
தாமே செல்லும் தாயரும் உளரே"

என்று பெண்கள் நிலையும் தொல்காப்பியர் சொல்லுவதிலிருந்து பெண் வீட்டையும் ஆண் காட்டையும் ஆண்டதாய் இணைக்குடும்பத்தின் அடிப்படைக் கருத்தின் எதிரொலியைக் கேட்கலாமன்றோ.

"கிழவன் சேட்புலம்
படரின் இழை அணிந்து
புன்றலை மடப்பிடி பரிசிலாகப்
பெண்டிரும் தம்பதம்
கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீரக் கோண்.....

(புறம் 151)

நின் நயந்து உறை நர்க்கும் நீ நயந்து உறை நர்க்கும் பன்மாண் கற்பினின் கிளைமுதலோர்க்கும் என்றோடும் சூழாது, நீயும் எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே என்ற புறநானூற்றுப் பாடல்கள் ஆண் அகத்தில் இல்லாத நேரத்திலும் வீட்டிலுள்ள பொருள்களை எடுத்துத் தன் விருப்பம்போலக் கொடுக்கும் உரிமை இருந்ததும் காண்க. ஆனால் சிலப்பதிகாரக் காலத்தில் ஆண் இல்லாத காலத்தில் பெண் ஒன்றுமே செய்யமுடியாத படிக்கு ஆணின் ஆதிக்கம் அமைந்திருந்த தன்மை கோவலனுக்குக் கண்ணகி

"அறவோர்க் களித்தலும்
அந்தண ரோம்பலும்
துறவோர்க்கெதிர் தலும்
தொல்வோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்
இழந்த என்னை"

என்று கூறுமுகத்தால் புலனாகின்றது.

இணைப்புமணம் - இணைக்குடும்பம் முன்னூறு புணர்ச்சியாலும், பெணவழிச் சேறலாலும், ஒருபக்கக் காமமே சிறக்கக்கூடியதாயிற்று. இதில் பெண்ணின்காமமே சிறந்ததெனக. இந்தத் தமிழறிஞர்கள் "கைக்கிளை" என்பா. காதலிக்கப்பட்ட வளுக்குக் காதலன்பால் ஒத்த அன்பில்லாமையும், முற்றிலுமன்பில்லாமையும், அவ்வாறே காதலிக்கப்பட்டவனுக்குக் காதலியால் உள்ள நிலையும் கைக்கிளைப்பாற்படும் பல்மனைவியரைப் புணரும் ஆணிடம் அன்பு கிளைக்காமல் தோன்றுமல் பெண்ணிடத்தில் அன்புக்கிளைக்கின்றது. பெண்பாற் கைக்கிளையே இணைக குடும்பத்திலிருந்தது. அன்பின் ஐந்திணையில் ஆணபாற் கைக்கிளையே சிறந்ததென்றுல் அன்பில்லாத ஐந்திணையில் - இணைக்குடும்பத்திற் பெண்பாற் கைக்கிளையே சிறந்தது எனப் பழந் தமிழர் எண்ணினர் என்பது தெளிவன்றோ.

"முன்னைய நான்கும்
முன்னதற்கென்ப"

என்ற நூற்பாவைத் தொல்காப்பியர் பெருந்திணை நூற்பாவிற்குப் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து, கைக்கிளைக்கு மேலும் ஒரு முடிபு கூறியுள்ளார். பெருந் திணைக் குறிப்புக்கள் நான்கின் முற்பட்ட நிலை களாகிய ஏறுமடற்திறமும், இளமை நீங்காத் திறமும் தேறுதலொழிந்த காமத்துமிகாத்திறமும் மிக்க காமத் தின் மாறுகாத் திறமும் ஆகிய நான் கும் கைக்கிளைக்குரியன என்று கூறுவ தால் கூட்டு மணமாகிய பெருந்திணை யில் வாழ்ந்த பழந்தமிழ் மக்கள் அதன் அடுத்த படி முறையான கைக்கிளையில் எழுந்த பல நிலைச்செய் திதெளிவாகின்ற தன்றோ. இந்தக் கைக்கிளைத் திணை யின் மணச்செயலை "இரத்தல் நலம் பாராட்டல், புணராவியக்கம், நயப் புரைத்தல் என மேற்கூறிய நான்கை யும் இளம்பூரணர் சுருங்கிய தெளிந்த சொற்களாற் காட்டியுள்ளார். புற நானூற்றில் போரவைக் கோப்பெரு நற்கிள்ளி என்பவனைப் புலவர் சான்ற நக்கண்ணையார் என்பார் காதற்காமம் கொண்டார். அது கைக்கிளையால் அமைந்தது. நக்கண்ணையாரே தம் காமத்தைப் பாடியுள்ளார்.

"அடிபுனைதொடு கழன
மையணற் காளைக்கென்
தொடி கழித்திடுதல்
யான் யாயஞ் சுவலே
அடுதோண் முயங்கல்
அவை நாணுவலே
என்போற் பெருவிதுப்
புறுகவென்றும் ஒரு
பாற்படா அதாகி
இருபாற் பட்ட
இம் மையலூரே".

(புறம் 83)

என்பது அவர் பாடிய பாட்டு. காத லொழுக்கம் மேற்கொண்ட மகளிர் தம் காதலரைத் பிரியினும் தலைக் கூடப் பெறுவிடினும் பசந்து உடம்பு நனி சுருங்கித் தொடியும் வளையும் கழல வருந்துவராகலின், இங்கே பெருநற் கிள்ளியைத் தலைக்கூடப் பெறுத நக்கண்ணையார் "அடியின் கட்புனைந்த வீரக்கழலினையும் மை போன்ற தாடியினையுமுடைய இளை யோனுக்கு எனதுவளை என்னைக் கைவிடுதலால் அஞ்சுவன்" என்றும், "தன்னொழுக்கத்திற்கு தாய் இடை யூறுதலின் "யாயஞ்சுவல்" என்றும் கூறினர். சான்றோர் கூடிய அவை யினர் ஒருத்தியை ஒருவற்குத் திரு மணத்தால் கூட்டி வைப்பராதலின், அவர் தாம் விரும்பியவாறு தாமே சென்று கூடற்கு அவ்வவையினர் இகழ்வர் என்பதுபற்றி" அவர் நாணு வர் என்றார், தாயில்லையாயின் வளை கழலுதற்கு அஞ்சவேண்டா. அவை இல்லையாயின் முயங்குதற்கு அஞ்ச வேண்டாம் என்பது தெளிவுரை யென்க.

இப்பாட்டில் "அடிபுனை தொடு கழண்மையனற் காளை" என்றதனால் "உருபு நிறுத்த காமவாயில் புலனா கின்றது. அச்சமும் நாணமு முண் டாய் வருந்தும் என் கூற்றிலும் நில் லாது என் காதல் அறிந்து அவனொடு கூட்ட நினையாத தாய் கூற்றிலும் நில்லாது இருவர் கூற்றிலும் நின்று மயங்குகின்ற ஊர் என்று கூறுவதால் ஐந்திணைக்கும் அன்பின் ஐந்திணைக் கும் இடையில் தமிழகம் வளர்ந்து நின்ற தன்மையும். "இணைக்குடும்ப வளர்ச்சியின் இடைக்காலத்தில் பெண் அச்சமும் நாணமும் உடைய வராய் ஒழுகும் ஒழுக்கப்பெற்றியை உடையராயினர் என்பதுவும், "என் போற் பெருவிதுப்புறுக.... இம்மை யல் ஊர் என்றதனால்" பெண்பாற் கைக்கிளையான இணைப்பு மணத்தில் இயைந்த இணைக்குடும்பக் கட்டுப் பாடு அச்சத்திற்குரிய தாயிருந்ததென் றும், இணைக்குடும்பம் தனிக்குடும்ப மாய் வளர்ந்து பெருகுவதற்கு இணைக் குடும்பத் தலைவர்கள் திருமண நிறை வுக்கென ஓர் அவை அமைத்துக் கொண்டனர் என்றும் புலனாகின்றது, இது "ஐயர்யாத்தனர் கரணம் என்ப" என்ற தொல்காப்பியர் உரையால் விளங்கும். இவ்வாறு இணைக்குடும்பக் காலத் தமிழகம் வீட்டு நிலையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சத்தையும் நாட்டு நிலையால் நாணத்தையும் ஆக்கி அன்பின் ஐந் திணையின் வாயிலில் புகும் காட்சி காண்க. இப்புறப்பாட்டில் ''புணரா விரக்கம், நயப்புரைத்தல் என்ற இணைப்பு மணத்தில் இன்பச் செயல் புலப்படுத்தலுங்காண்க.

''என்னை புறங்கையுண்டும்
பெருந் தோளன்னே
யாமே யஞ்சிறை யிருந்தும்
பொன்னன்னமே''

என்ற மற்றொரு பாட்டால் நக் கண்ணை போராவைக் கிள்ளியை எண் ணித் தன்னுள்ளே நலம் பாராட்ட லும் இரத்தலும் ஒருவாறு அமைதல் காண்க.

கூட்டத் திருமணத்தில் பொது மனைவியராய் இருப்பதிலும் பார்க்க ஒருவனோடு ஒட்டி வாழ்வதால் ஒரு வாறு விடுதலை உண்டு என்று எண் ணிய தமிழ்ப் பெண்கள் ஒட்டிய ஒருவனைப் பல் பல் மனைவியரை மணக்க - உறவுகொள்ள இயைந்து நின்றார்கள். ஒட்டிய பெண்களும் பொருளின் பொருட்டும் பொற்பின் பொருட்டும் ஒட்டினார்களேயன்றி அன்பின் பொருட்டு அணைந்தாரல்லர். அவ்வாறு அணைந்தவர்களும் காமம் சாலாத இளையோளாக இருத் தலால் காமம்சான்ற ஆண், பெண் ணின் உருவும் உடலும் அக்காமத் திற்கு உளப்படாமைகண்டு ஒட்டிய பெண்ணைப் பழித்தும் புகழ்ந்தும் இயல்பு மிகுந்த கருத்துக்களைச் சொல்வான். அவளே காமம்சாலாத வளாதலால் அத்துன்ப இயல்பையே யுணராமையின் அவனுக்கு அவள் யாது கூறாது இருந்திடுவாள். எனவே அவள் தன் உணர்ச்சியை எண்ணித் தானே நகைத்துக்கொள்வான். இவ் வாறு இணைக்குடும்பத்தின் முதுநிலை தமிழகத்தில் இருந்தது.

காமம் சாலா இளமையோள்வயின்
ஏமம் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும்
என்று இருதிறத்தால்
தன்னொடும் அவளொடும்
தருக்கிய புணர்த்துச்
சொல் எதிர்பெறா அன்
சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும்
கைக்கிளை குறிப்பே;

(தொல்: அக: 50)

என்று தொல்காப்பியர் அழகாக அம்முது நிலையைக் கூறியுள்ளார். முன்னைய நான்கும் முன்னதற்கென்ப என்ற இணைக்குடும்பத்தின் இளமை நிலை என்று எண்ணுக.

பழந்தமிழ் நூல்கள் நிகழ்காலத் தையும் எதிர்காலத்தையும் நோக்கி வாழ்க்கைக் கருத்துக்களைத் தொகுக் குஞ் சொற்களால் அமைந்திருக்கின் றன. இறையனார் களவியல் பழைய உரை ஏகதாரக்கொள்கையைத் தெளி வாக்காதாதலாலே அதற்குப் புத் துரைகாணும் புலவர்கள் அரிதான செய்தியையே இறையனார் களவிய லில் முன் அமைந்த வரலாற்றுச் செய்தியின் அடிப்படையென்க. இவ் வாறு தமிழின்பத்தை வரலாற்று விஞ்ஞான நோக்கோடு காண்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமசுந்தரப் புலவர் வரலாறு.

நவாலியூர் சோ. நடராஜா அவர்கள்

யாழ்ப்பாணத்து வலிகாமம் மேற்குப் பகுதியிற் றிகழ்வது மானிப்பாய்க் கோவிற் பற்று. அதனைச் சார்ந்தது நவாலியூர். அது மருதமும் நெய்தலுங் கலந்த நிலப் பகுதியை உடையது. பல்லாண்டுகளாகக் கல்வியிலுஞ் செல்வத்திலும் மேம்பட்டு விளங்கி வருகின்றது.

நவாலியூரிலே இற்றைக்கு ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முன்னே, வன்னிய சேகர முதலியார் என்பவர் ஒருவர் குடியேறிச் சீருஞ்சிறப்பும் பொருந்த வாழ்ந்தார். அவருடைய ஒன்பதாவது தலைமுறையிலே அருமையினார் என்று வழங்கும் ஆறுமுகம் பிள்ளை யென்பவர் பிறந்தார். அவர் ஒரு சிறந்த தமிழறிஞர். கந்தபுராணத்துக்கும், பெரிய புராணத்துக்கும் சிறந்த உரை சொல்லுவதில் வல்லவர். அவருக்குக் கதிர்காமர் என்னும் புதல்வர் இருந்தார். அவரை அருமையினார் கதிர்காமர் என்று ஊரார் வழங்குவர். அவரும் ஒரு சிறந்த தமிழறிஞர்.

அருமையினார் கதிர்காமர் இலக்குமிப் பிள்ளை யென்னும் பெண்ணை மணஞ்செய்தார். இலக்குமிப்பிள்ளை கோண்டாவிலடிச் சிங்கைநாயக முதலியின் வழித்தோன்றலாகிய விநாசித்தம்பிக்கு மகள். இலக்குமிப் பிள்ளை கடவுள் பக்தியிலும் அடியார் பக்தியிலுஞ் சிறந்து விளங்கினார். பசித்தோர்க்கு இன்னடிசில் கொடுத்துப் பேணி மகிழ்வதே அவரின் வாழ்க்கைக் குறிக்கோள். மக்கட்பேறு இல்லாத குறை அவர்கள் இருவரையும் நாடோறும் வருத்துவதாயிற்று. நவாலியூரிலுள்ள அட்டகிரி முருகப்பெருமானை நோக்கிப் பல்லாண்டு நோன்பிருந்தனர். அதன் பயனாகக் கி. பி. 1878-ம் ஆண்டுக்குச் சமமான விக்கிரம ஆண்டு வைகாசித்திங்கள் இருபத்தைந்தாம் நாள் சனிக்கிழமை முற்பகலிற் பரணி நாளிற் புலவர் பிறந்தார்.

பேருவகைகொண்ட பெற்றோர் முருகப் பெருமானுக்குச் சிறப்புவகையான பூசைகள் செய்வித்தனர். பருத்தித்துறையிலிருந்த ஆறுமுகப்பெரியார் என்னுஞ் சோதிடரிடஞ் சாதகம் எழுதுவித்தார். ஆறுமுகப்பெரியார் கோள்களின் நிலைகளைத் திட்பமாகக் கணித்து "இச்சாதகன் இணையற்ற பெரும் புலவனாக விளங்குவான்" என்று கூறினார்.

சோமசுந்தரப்புலவருக்கு ஐந்தாண்டு வந்ததும் மானிப்பாயிலிருக்கும் அருணாசலப் புலவரைக்கொண்டு ஏடு தொடக்குவித்தனர். அருணாசலப்புலவரிடம் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் விரும்பித்தொழுவார் முதலிய நீதி நூல்களைக் கற்றுக்கொண்ட பின்னர், எண் கணிதமும் நிகண்டும் கற்றனர். புலவருடைய கல்வித் திறமையைக்கண்ட ஆசிரியர், குமரேசர் சதகம் தண்டலையார் சதகம் முதலிய சிறு நூல்களை ஆசையுடன் கற்பித்தனர். தமிழை மிக விரும்பிக் கற்றுவருதலைக்கண்ட பெற்றோர் இவர் ஆங்கிலங்கற்பதும் எளிதாகுமென்று கருதி மானிப்பாயிலிருந்த மாரிமுத்து உபாத்தியாயர் வைத்து நடாத்திய ஆங்கில பாடசாலையிற் சேர்த்து விட்டனர்.

ஐந்தாண்டுகள் ஆங்கிலங்கற்று எட்டாம் வகுப்பிற் சித்தியடைந்தனர். மேலும் ஆங்கிலங்கற்க விரும்பி நவாலியூர் இராமலிங்க வுபாத்தியாயரிடம் ஆசிரியப் புகுமுகத் தேர்வு வரையுங்கற்றனர். புலவரின் பெரிய தந்தை முறையினரான மாதவர் வேலாயுதரின் மகனே இராமலிங்கவுபாத்தியாயர். இவர்களிடம் சிவஞான சித்தியார் இராமாயணம் கந்தபுராணம் முதலிய நூல்களைப் பாடங் கேட்டனர்.

இராமலிங்கவுபாத்தியாயரின் மகன் வைத்தியலிங்கமும் x புலவரும் இணை பிரியா நண்பர். இருவரும் நெடுங்காலமாகத் தமிழ் நூல்களைக் கற்று நவாலியூரிலே சைவப் பிரசங்கமும் புராணப்படனமும் நடத்தி வந்தனர். புலவர் பதினைந்தாவது வயதிற் பாட்டுப் பாடத் தொடங்கிப் பதினெட்டிற் சிறந்த தமிழ்ப் பாடல்கள் யாக்கும் வன்மையைப் பெற்றுவிட்டார். இராமலிங்கவுபாத்தியாயர் அதனைக்கண்டு புலவரைப் பலமுகமாக ஊக்கப்படுத்தி வந்தனர்.

அட்டகிரிபதிகமும், அட்டகிரி முருகன் திருவூஞ்சல், சாவித்திரி கதை, பசுவின் கதை என்பன புலவர் இளம் பிராயத்திற் செய்த நூல்கள்.

ஆசிரியத் தொழிலே தமக்குப் பெரிதும் இணக்கமானதென்று கண்ட புலவர், வட்டுக் கோட்டையிலுள்ள ஆசிரியர் சின்னத்துரை யென்பவரை யடுத்துச் சித்தங்கேணியைச் சார்ந்த கலட்டியென்னும் இடத்திலே இரு ஆங்கில பாடசாலையைத் தொடக்கி ஓர் வருமாக நடத்தி வந்தனர். அங்கே, புலவர் ஆங்கிலம் தமிழ் இதிகாசம் என்னும் பாடங் களைச் செம்மையாகக் கற்பித்து வந்தனர்.

---

x மானிப்பாய்க் கிராமச்சங்கத் தலைவர் வை. மகேசன் அவர்களின் தந்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரும் பிள்ளைகளும் வித்தியாதரிசகரும் புலவரிடம் பெருமதிப்புக் கொண்டனர். வன் கயிலன்பேர்க்கு, கிறிக்கன்பேர்க்கு, வண்டவால், செல்லப்பா முதலாய வித்தியாதரிசகர் பலரும் மக்கறே, பெறைரா முதலாய வித்தியாதிபரும் புலவருடைய கற்பிக்குந் திறமையை அவ்வக்காலங்களிற் பலபடப் பாராட்டி வந்தனர். ஒருமுறை வன்கயிலன் பேர்க்கு என்பவர் "கலட்டியில் ஓர் உயர்ந்த அழகிய ஆசிரியர் கற்பிக்கின்றார் நீங்கள் அவரிடம் சென்று இதிகாசம் கற்பிக்கும் முறையையும் ஆங்கில இலக்கணங் கற்பிக்கும் முறையையும் அறிந்து கொள்ளுங்கள்" என்று ஓர் ஆசிரிய சங்கத்திற் கூறியதாகப் புலவருடைய பழைய மாணவரிற் பலர் இப்பொழுதுஞ் சொல்லி மகிழ்வர்.

புலவருக்கு இருபது வயதிலே குருவருட் பேறு கிடைத்தது. தென்னிந்தியாவிலுள்ள பெங்களூரிற் பிறந்த சுப்பிரமணிய சாமியார் என்பவர் நவாலியில் ஓரன்பர் வீட்டில் வந்திருப்பதையறிந்து அவரைக் காணச் சென்றார். சுப்பிரமணிய சாமியார் மெய்யுணர்ந்து அவாவறுத்து விளங்கிய ஓர் யோகியர். சாமியார் புலவரை நன்கு மதித்துச் "சோமசுந்தரம்! உனக்கு என்ன வேண்டும்? என்று கேட்டார். புலவர் "வேண்டுவதறிவதும் வேண்டாததறிவதும் சாமிக்கே தெரியும்," என்றார். சாமியார் சிரித்துக்கொண்டு 'முருகப் பெருமானை வழிபட்டு நீ வேண்டியவெல்லாம் பெறுக', என்று ஓர் யந்திர அருட்குறியைக் கொடுத்துப் புலவர் வீட்டிலே சில நாளிருந்து தம்மூர்க்குப் போயினர்.

அந்த அருட்குறியைப் புலவர் வைத்து வழிபாடு செய்து வருவாராயினர். அதன் பெருமையாற் புலவருக்கு எல்லாக் கல்வியும் சீருஞ் சிறப்பும் நாடோறும் வளர்ந்து வந்தன. நூல்கள் செய்யும் விருப்பமும் உண்டாயிற்று. மருத்துவம், சோதிடம், கைக்குறி நூல், மனை நூல் முதலிய கலைகளையுங் கற்றுக் கொண்டார். அப்பொழுது புலவருக்கு இருபத்தெட்டு வயதாயிற்று. பெற்றோர் திருமணஞ் செய்து வைக்க விரும்பினார். அதனைப் புலவர் எட்டுணையும் விரும்பாது நிற்றலையறிந்து பெற்றோர் தங்குல குருவாகிய சுப்பிரமணிய சுவாமிமேற் பக்திசெய்து முறையிட்டனர். சிலநாட் செல்லப் பெங்களூரிலிருந்து சாமியாரின் கடிதம் ஒன்று வந்தது. அதிலே, "நீ உன் பெற்றோர் விருப்பத்தின்படி திருமணத்தை நிறைவேற்று", என்று காணப்பட்டது. புலவர் மணஞ்செய்தற்கு ஒருப்பட்டார்.

சங்குவேலி யென்னுங் கிராமத்திலே எல்லாவகைச் சிறப்போடும் வாழ்ந்து வந்த புலவரின் தாய் மாமனார் வேலுப்பிள்ளையின் மூத்த மகளாகிய சின்னம்மையை மணஞ்செய்து இல்லறத்தை நடத்தி வந்தனர். புலவருக்கு வறுமையும் பிணியும் வந்து பெரிதும் வருத்தின. வருத்தினும் சிறிதுங் கலங்காது நாமகளிலும் முருகப் பெருமானிலும் பக்தி வைராக்கியங் கொண்டு, தமக்குற்ற வறுமையையும் பிணிகளையும் நீக்கி, நிலையான பேரின்பப் பெருவாழ்வு பெறுதற்கு வழிகாட்ட வேண்டுமென்று குறையிரந்து பலவேறு பிரபந்தங்களைப் பாடி வருவாராயினர். ஆண்டுதோறும் நவராத்திரி விரதம் பூண்டு அந்நாளிலே நாமகள் மேலும் முருகக் கடவுள் மேலும் புதிய புதிய வழிபாட்டு நூல்களைப் பாடி வந்தனர் ஏறத்தாழ இரண்டாயிரத் தைஞ்ஞூறு செய்யுள்கள் அத் தெய்வங்கள் மேலனவாகப் பாடப்பட்டவை.


புலவருடைய குலதெய்வம் முருகக் கடவுள். தொய்வுங் கண்ணோயும் சன்னியும் முதலாய பிணிகளால் வருந்திய காலங்களிலும், வறுமையால் வாடி வதங்கிய காலங்களிலும் தம் முறைப்பாட்டினை முருகக் கடவுளுக்கும் நாமகளுக்கும் சொல்லித் தமது தீவினைப் பயன்களைக் கழிக்க வேண்டிப் பல்வேறு பாடல்களைப் பாடி வந்தனர். ஈழ நாட்டிலுள்ள முருகன் திருப்பதிகள் எல்லாவற்றுக்கும் பாடல் செய்திருக்கிறார். பெரும்பாலானவை பதிகமும் ஊஞ்சலுமாகவேயமைந்தவை. நவாலியிலுள்ள அட்டகிரிப் பதியிலெழுந்தருளியிருக்கும் முருகக் கடவுண் மேலதாக அட்டகிரிப்பதிகமும் அட்டகிரிக் கலம்பகமும், அட்டகிரி வெண்பாவும், பிள்ளைத்தமிழும் பாடினர்.

நல்லை முருகன் மேலதாகத் திருப்புகழும் அந்தாதியும் பதிகமும் பாடினர். கதிரை வேலவர் மேலதாகப் பதிகமும் சிலேடை வெண்பாவும் பாடினர். கந்தவனநாதன் மேலதாகப் பதிகமும் திருப்பள்ளியெழுச்சியும் நான்மணிமாலையும் பாடினர்.

இப்பாடல்களை அவ்வப்போது எழுதித் தென்னிந்தியச் செய்தித் தாள்களிலும் இலங்கைச் செய்தித்தாள்களிலும் வெளியிட்டும் நூல்வடிவிலே பலவற்றைப் பதிப்பித்தும் வந்தவர், புலவர் அவர்களின் அரும் பெறற்றுணைவர் திரு. க. வேலுப்பிள்ளை அவர்களாவர். பிள்ளையவர்கள், புலவருக்கு ஊக்கமளித்து (i) உயிரிளங்குமரன் நாடகம் (ii) இலங்கைவளம் (iii) தாலவிலாசம் (iv) கந்தபுராணவுண்மை நூற்பொருள் முதலிய நூல்களை அவ்வப்போது எழுதுவித்தார்கள்.

இங்ஙனம் தமிழ் மொழியைச் செழிப்புறச் செய்த புலவருடைய கீர்த்தி இலங்கையிலுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி-வடக்குத் தமிழாசிரியர் சங்கச் செயற்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவிலும் பரந்தது. சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள், பண்டிதமணி. கதிரேசச்செட்டியார், பல்கலைப் புலவர், கா. சுப்பிரமணியபிள்ளை, சுவாமி விபுலானந்தர், பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை, பண்டிதமணி சு. வெண்ணெய்க் கண்ணனூர் முதலியோர் புலவருடைய கவித் துவத் திறமையைப் பாராட்டி வந்தனர். 1927ஆம் ஆண்டிலே புலவருக்குப் பொன்னுடை போர்த்துப் பதக்கமும் பொற்கிழியும் பரிசளித்துப் புலவர்ப் பட்டமும் நல்கினர். ஏறத்தாழ, இரண்டாயிரத்தைந்நூறு மாணக்கரைக் கற்பித்து, நாற்பது ஆண்டுகள் வரையும் ஒரே கலாசாலையில் ஆசிரியரா யிருந்து அருந்தொண்டாற்றி 1938ஆம் ஆண்டில் இளைப்பாறினர்.

இளைப்பாறிய காலத்திற் புலவர் தமது இல்லதிலே மாணவருக்குச் சைவசித்தாந்த வகுப்பும் இலக்கிய வகுப்பும் வைத்து நடத்திக் கல்வியைப் பரப்பி வந்தனர். மாணவ ரிடத்திலே ஒரு சிறிதேனும் வேதனம் பெறுது, உணவு முதலிய வசதிகள் செய்து தமிழ் மொழிக் கல்வியைப் பரப்பி வந்தமை புலவரின் சான்ருண்மைக்கு ஓரறிகுறியாகும். புலவ ரிடம் பாடங் கேட்ட மாணவருட் பலர் யாழ்ப் பாணத்து ஆரிய திராவிட சங்கமும், மதுரைத் தமிழ்ச் சங்கமும் நடாத்திவரும் பண்டித தேர்விற் சித்தியடைந்து தமிழை வளர்த்து வருகின்றனர்.

கலித்தொகை, திருக்குறள், திருக்கோவை யார், சிவஞானபோதம், கந்தபுராணம், என்னும் நூல்களை மிகுந்த சுவையுடன் கற் பிப்பார். செய்யுள்களிலுள்ள அழகுகளை யெல்லாம் திட்பநுட்பமாக வெடுத்து ஆராய்ந்து நகைச்சுவை ததும்பக் கூறி மகிழச்செய்வர். புலவர், தமது எழுபத் தைந்தாவது வயதிலே கி. பி. 1953ஆம் ஆண்டிலே இவ்வுலக வாழ்வை நீத்து இறை வன் திருவடிகளை யடைந்தார். புலவர் எழுதிய பாடல்களின் தொகை ஏறத்தாழப் பத்தாயிரம் என்பர். அவைகள் புலவரின் புகழுடம்பைப் பேணி வளர்க்கின்றன.

அவற்றுட் கவிச்சுவை மிக்க சில பாடல் களை இங்கே தொகுத்துத் தருகின்ருேம்.

# இலங்கை வளம்

## இலங்கை நீர்வளம்

எஃகிய பஞ்சினைப் போலத் -- தமிழ்
எல்லாள மன்ன னிருதயம் போல
வெஃகிய வெண்முகிற் கூட்டம் -- இந்து
வெண்டிரை மேயவெ ழுந்திடு மன்றே. 1

ஈயாத வற்சரின் வெளவி -- நல்ல
இரவலர்க் கீகின்ற புரவலர் போல
ஓயா வுவர்க்கட லள்ளி -- மிக
வுண்டு திரண்டு புரண்டெழு மேகம். 2

கல்லா தவர்மனம் போல -- அன்றிக்
கடுகணைக் குகைவரு கணையிருள் போல
அல்லா தழுக்காறு கொண்டோர் -- மனம்
ஆமென வேயிருண் டங்குசூல் கொண்டே 3

செங்கதி ரோன்றனை யெள்ளி -- நின்று
சிரிப்பது போல விடையிடை மின்னி
அங்கவ ஞேடமை றகூவி -- எதிர்த்
தார்ப்பது போல விடித்து முழங்கும். 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைம்மலை கன்மலை போலப் -- பெருங்
காண்டா மிருக நிரைகளைப் போல
மைம்மலி ராவண னேவும் -- மூல
மாபல மென்னவும் வந்து குவிந்து. 5

## வேறு

பாத பங்கய மலையின் மீதினும்
பகரு பேதுரு மலையின் மீதினும்
ஓது கதிரைமா மலையின் மீதினும்
உயர்ந்த வன்னியா ரணிய மீதினும் 6

பார்த்தி டாதகட் டோகை யாலிடப்
பாம்பொ டுங்கிடக் காந்தள் வாய்விட
வேர்த்த வெம்மைபோய் வளிகு லிர்ந்திட
வேறு வேறுபோய்க் கால்க ளூன்றியே. 7

கொடை மட்டம்படுங் குமண மன்னவன்
கூறு சித்திரப் புலவ னுக்கருண்
மடை திறந்திடுங் கொடை விதங்கள்போல்
வயிறு ளைந்துமா மழைசொ ரிந்தவே. 8

## அருவி வீழ்ச்சி

அரசு நீழலிற் புத்த மாமுனி
ஆறு வற்சரம் பெற்ற யோகினைப்
பரவு பாரினுக் கருளு மாறுபோற்
பாத பங்கயத் தருவி பாயுமே. 9

ஏசு வென்றிடு ஞான பண்டிதன்
ஏறி மாமலைக் கூறு நீதிபோற்
பேசு மாமுகில் சொரிய வாங்கியே
பேது ருமலை யருவி பாயுமே. 10

உண்ட செந்தமிழ்ச் சைவ நூலமு
தோங்க நல்லைவந் தருளு நாவலன்
கண்ட னப்பிர சங்க மாமெனக்
கதிரை மாமலை யருவி காலுமே. 11

குக்கி புக்கவை யருவ ருப்பினாற்
கொட்டி விட்டிடுங் கொள்கை போலவே
மைக்கண் மாமழை வழங்கு வாரிநீர்
மலைக்க ணின்றிழு மென்னப் பாயுமே. 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கதிர்காமம்

அதிரவரு மாணிக்க கங்கைதனின் மூழ்கி
யன்பொடுசி வாயவென வருணீறு பூசி
முதிருமன் பானெஞ்சு முருகவிழி யருவி
முத்துதிர மெய்ப்புளக மூரவுரை குளறப்
புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்
பொருவில்கந் தாசுகந் தாவென்று பாடிக்
கதிரமலை காணுத கண்ணென்ன கண்ணே
கர்ப்பூர வொளிகாணுக் கண்ணென்ன கண்ணே. 13

### வெந்நீர்க் கேணிகள்

காதலனைப் பிரிந்தவளின் மனம்போல வொன்று
கவிபாடிப் பரிசுபெருன் மனபோல வொன்று
தீதுபழி கேட்டவன்தன் மனம்போல வொன்று
செய்தபிழைக் கழுங்குமவன் மனம்போல வொன்று
நீதிபெரு வேழைதுயர் மனம்போல வொன்று
நிறைபழித்த கற்புடையாள் மனம்போல வொன்று
காதுமழுக் காறுடையான் மனம்போல வொன்று
கனலேறு மெழுநீர்க ளுண்டுகன்னி யாயில். 14

# நாமகள் புகழ் மாலை

### திருப்பள்ளி யெழுச்சி

சந்தனச் சிலம்பினி லிசைக்குயில் கூவுந்
தகுமருட் பாவினச் சங்கொலி மேவுஞ்
செந்தமிழ்த் திருப்புகழ்ச் சேவல்கள் யாவுஞ்
சிறைபுடை யடித்தெதிர் சிலம்பிடக் கூவும்
அந்தமில் கலைக்குரு கரற்றிய வொலியும்
அடியவர் சயசய வமலையு மலியும்
எந்தமை யாண்டருள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 15

### குயிற் பத்து

அவியாத செழுஞ்சுடரை யன்பர்க் கென்றும்
ஆருத துன்பமெலா மாற்று வாளைக்
கவியாது மறியாவென் னுவின் மேவிக்
கவியுரைத்துக் கேட்டுமகிழ் கலைவ லாளைப்
புவியாத ரித்ததமிழ் புகல்கின்ருளைப்
பொதியமலை முனிமடியிற் பொருந்தினுளைக்
குவியாத கஞ்சமலர் முகத்தி னுளைக்
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செந்தமிழ்க் குலதெய்வம்

கண்டெழுந் திருகரங் கூப்பித் தலைக்குமேற்
காட்டியஞ் சலிசெய்குவார்
கடவுளே யிப்போது பேசியது முங்களது
கதையென்று கண்ணீர் விடுவார்
தெண்டனிடு வாரிங்கு வந்தகா ரியமேது
தெரிவிக்க வேண்டுமென்பார்
சிறிதுபொரு ளுதவியென் றடியெடுத் திடுமுனந்
திருமுகங் கருமுகமதாய்
விண்டவாய் கூம்பக் கழுத்துச் சரிந்தொரிரு
விழிசொருகி நாக்கு வீழ்ந்து
விக்குளெழ மரணவே தனையுறும் வச்சையர்கள்
வீட்டிலே பொருளிரக்கச்
சென்றிடா வரமுழுன் றிருவடிச் சேவையுஞ்
சிறியெனுக் கருளுகண்டாய்
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 17

இல்லாமை யால்வந்த துயரினுல் மிகநொந்
திரக்கத் துணிந்துமானம்
ஏகாது பின்றள்ள வாற்றுமை முன்றள்ள
விடையூச லாடியாடிப்
பல்லா யிரந்தரங் காட்டியும் நாவினுற்
பயிலாத மொழிபயின்றும்
பணியாத பேரைப் பணிந்துமுன் திறவாத
படலைபல பலதிறந்தும்
பொல்லாத வஞ்சரைப் பாடியும் புகல்கின்ற
பொய்ம்மைமொழி செவிமடுத்தும்
போற்றுமுன் பெருமைபறி போகவிட் டென்மனம்
புண்பட்டவாறு போதும்
செல்லாத செல்வமுந் திருவடிச் சேவையுஞ்
சிறியெனுக் கருளுகண்டாய்
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்திமிழ்க் குலதெய்வமே. 18

## நயனப் பத்து

வாவென் றழைப்பது போலிமைக் குப்வண் டமிழ்க்கவிதை
தாவென்று கேட்பது போலே செவிக்கடை சாரும்பின்னர்
ஆநன் றென்றுரைப் பதுபோன் மலர்ந்தின் னருள்பிலிற்றும்
பூவொன்று செந்தமிழ்த் தேவி கயலைப் பொருவிழியே.

## தாலாட்டு

ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ

தென்பொதிய மாமலைவாழ் தெய்வக் குடமுனிக்கு
நம்பனரு ளாலளித்த ஞானச்செழுஞ்சுடரோ.

செந்தா மரைமுதல்வன் செம்பொற் கரம்பிடித்த
அந்தா மரைமே லமர்ந்தருளு மோதிமமோ.

ஆருயிர்கள் நாவசைக்க அங்கிருந்து காலசைக்குஞ்
சீருயிர்க்கும் பொற்றூவித் தெய்வமடமயிலோ.

அஞ்ச முயர்த்தோ னணிமணிநாப் பஞ்சரத்துட்
செஞ்சொற் பழமறைகள் செப்பியருள் சாரிகையோ.

வித்தைப் பெருங்கடலில் மேலோர் குளித்தெடுத்த
சுத்தச் சுரிமுகமீ சோதிமுத்த மாமணியோ.

கல்விக் கிரியரித்துக் கற்றவர்கள் கண்டெடுத்த
வில்லிட் டொளியுமிழும் வெள்ளைவை டூரியமோ.

வெள்ளைக் கலைமதித்து மெய்ப்புலவர் வாரியள்ளி
உள்ளக் கவலைகெட வுண்டுவக்குந் தெள்ளமுதோ.

பூமணக்குந் தாரும் புகழ்மணக்கும் புத்துறவும்
பாமணக்குஞ் சீரும் பரிந்தளிக்கும் பங்கயமோ.

வெள்ளமுந் தீயும் விறல்வேந்தும் ஒன்னலருங்
கொள்ள முடியாக் குறையா நவநிதியோ.

சேரன் குலக்கொழுந்தோ சென்னி தவக்கொழுந்தோ
பாரப்பூ ணாரமணி பாண்டியனார் பாக்கியமோ.

மேருமலைகுனிய வெள்ளிமலை மெய்வெளுக்க
ஆரப் பொதியமலை யாளு மரசியரோ.

ஏடகப்பொற் பஞ்சணையில் வைகை யெழினுதலாள்
ஆடகக்கை யாயிரத்தா லாட்டவள ராரணங்கோ.

பாட்டும் பொருளும் பரமசிவ னென்றெவர்க்குங்
காட்டுங் கருணைக் கடலோ கடலமுதோ.

கற்றுணையாய்க் கட்டிக் கடலிலெறி பட்டவர்க்குச்
சொற்றுணையாய் நின்றருளுந் தோன்றாத் துணைவியரோ

தொண்டனுக்கு நள்ளிரவிற் றூதாகப் போக்கியெங்கள்
அண்டர்பிரான் றன்னை யடிப்படுத்து மாயிழையோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசை யொலியாளோ ஓங்கார நாயகியோ
பேசுவிந்து நாத வடிவமைந்த பெய்வளையோ.

சொன்மா மணிமதுரைச் சொக்கப் பிரானருளுங்
கன்மாப் பலகைக் கனகமணித் தொட்டிலிலே.

கன்மாப் பலகைக் கனகமணித் தொட்டிலிலே
சொன்மாலை யேழெழுவர் சூட்டவளர் தூமணியோ.

சீரா ரகத்தியமாஞ் செம்பவளத் தொட்டிலிலே
பாரார் பரவப் பயின்றருளும் பான்மொழியோ.

கூருந்தொல் காப்பியமாம் கோமேதத் தொட்டிலிலே
பூரணனுர் தாலாட்டக் கண்வளர்ந்த பூரணியோ.

பாவலர்கள் நாவாகும் பவளமணித் தொட்டிலிலே
காவலர்கள் கைகொடுக்கக் கண்வளருங் காரிகையோ.

நீரியலுஞ் சென்னி நிமலன் மலைப்பிறந்த
ஆரிய மங்கை யருகிருந்து தாலாட்ட

ஆரிய மங்கை யருகிருந்து தாலாட்டச்
சீரிய செஞ்சொற் றிருமகளே கண்வளராய்.

அன்னக் கொடியாளே அம்பூர வாகனியே
பொன்னுரைத்த மேனிப் புரிகுழலே கண்வளராய்.

அஞ்ச மலர்விழிக ளாணிமுத்தஞ் சிந்தியிடச்
செஞ்சொற் பெருமதுரைச் செல்வி யழவேண்டாம்.

எல்லாத் திசையு மெறித்த விருஞ்சீர்த்தி
கல்லார் மனம்போலக் கங்குல்வாய்ப் பட்டதுவோ.

ஆதரிப்பார் போனுர்கள் ஆடையணி யில்லையென்று
மாதரசி நொந்து மனக்கவலை கொள்ளுதியோ.

மூலைக்கு மூலை மடங்கிமுடங் ,கிக்கிடந்த
கோலத் திருவா பரணக் குவையெல்லாம்.

கோலத் திருவா பரணக் குவையெல்லாம்
வாலறிவின் மேலோர் வருந்தி யெடுத்தார்கள்.

ஊனுந் துகிலும் உடற்சுகமுங் கைப்பொருளும்
நானுங்கை விட்டவர்கள் நாடி யெடுத்தார்கள்.

நாடியெடுத்து நலனழியா மற்றிருத்தி
நீடுலகி லெங்கு நிறைய வளித்தார்கள்.

எங்கு மளித்த வெழிலா ரிழைக ளெல்லாம்
மங்கா நிதிவழங்கும் வாழ்வே யெடுத்தணிவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டும் பனுவற் றிருப்புக ழெலாங்கூறி
வாட்டந் தவிர மகிழ்ந்துதா லாட்டினமே.

கஞ்சத் தவிசுங் கலைவாணர் நாவும்போல்
நெஞ்சத் திருந்து நினைத்த வரங்கொடுத்து

நெஞ்சத் திருந்து நினைத்த வரங்கொடுத்துச்
செஞ்சொற் பிராட்டி திருவருள்செய் தாண்டருளே.

ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ. 20

### அம்மானை

சொல்லார்க்கு மஞ்சுகம்போற் றோகைமயிற் சுந்தரியாள்
எல்லா மளிப்பா ளிரப்பவருக் கம்மானை
எல்லா மளிப்பா ளிரப்பவருக் காமாயின்
இல்லாமை யாற்கவிஞ ரேங்குவதே னம்மானை
ஏற்பதிழி வென்றவர்க ளிரவார்கா ணம்மானை. 21

தென்னன் மணிக்கூடல் சேருந் தமிழரசி
சின்னஞ் சிறுத்தவிடைச் சேணிச்சி யம்மானை
சின்னஞ் சிறுத்தவிடைச் சேணிச்சி யாமாயின்
என்னென்ன நூலிழைக ளீகுவா ளம்மானை
ஏராரு மோரைந் திழைதருவா ளம்மானை. 22

## இலக்குமி தோத்திரம்

ஓரா யிரந்தளத் தாமரைத் தவிசினு
னுலகம்ப டைத்திடுவதும்
உவணகே தனனுலகு திதிசெய்வ தும்பரன்
ஒடுக்குவது மும்பர்தலைவன்
சீரா யிருந்தரசு செய்வதுங் கல்வியிற்
றேசினிற் றிரமதனிற்
திருவினல் லருளினிற் கொடையினிற் புகழினிற்
செப்புபெரி யோராவதும்
பேராயிரம்பெற்ற வாரணங் கேயுனது
பேரருள் படைத்தல்லவோ
பேசுமிப் புடவியிற் கண்கண்ட தெய்வமென்
பெருமாட்டி நீயல்லையோ
தேரா திருந்தவிச் சிறியேனை யாளுவாய்
திருவடிக் கபயமபயம்
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
செம்பதும மலர்வல்லியே. 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்துண்ட நெல்லெனக் களிறுண்ட கனியென்ன
ஐயகோ மிடியுண்டு நான்
அலையுண்டு தனிகரா லிடியுண்டு வையுண்
டடங்காத கவலையுண்டாய்
வெந்துண்டி யின்றியெத் தனைகால முழலுவேன்
விரையுண்டு புகையுண்டுபூ
வேயுண்டு நறவுண்டு கரியவண் டினநின்று
வெறிகொண்டு பாடுகுழலாய்!
சந்துண்டு கச்சினிற் றளையுண்ட விருதனத்
தையலே யடியனேற்குத்
தனமுண்டு படவுளத் தயையுமுண் டோவெனத்
தரளமுண் டுன்வாயினிற்
சிந்துண்டு போமென்று வாய்விண் டிடாயினிச்
சிறியனுக் காருண்டுகாண்
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
செம்பதும மலர்வல்லியே. 24

# உயிரிளங்குமரன் நாடகம்

## நட்பின் பெருமை

மண்ணுல கத்தின் மாசறு மனமுடை
அன்பநின் பெருமை யறைகுதற் கெளிதோ
அகநக நட்ட வவனியல் கூறிற்
குறிப்பினில் வேண்டுவ நெறிப்பட வுதவி
ஆதரித் தணைத்தலின் **அன்னையே** போன்றும்
மிகுதிக் கண்ணே மேற்சென் றிடித்துத்
தகுதி கூறலிற் **றந்தையே** போன்றும்
உடனு யுறைதலின் **உடன்பிறப்** பொத்தும்
இன்பந் தருதலின் **ஏந்திழை** போன்றும்
ஏவிய புரிதலில் **இளஞ்சிறார்** போன்றும்
தீநெறி விலக்கி நன்னெறி யுய்த்தலில்
மேவிய **விருவிழிமணியே** போன்றும்
துணையா யிருத்தலிற் **றோளிணை** போன்றும்
அருந்தொழில் புரிய வருகுநின் றுற்றலில்
விரும்பிய செங்கைப் **பெருவிரல்** போன்றும்
அறிவு கொளுத்தலி **லருநூல்** போன்றும்
சென்ற விடமெல்லாம் சிறப்புத் தருதலிற்
கன்றிய பலதுறைக் **கல்வி** போன்றும்
பயன்கோ டாமையின் **வியன்முகில்** போன்றும்
இன்பினுந் துன்பினும் என்னியல் காட்டலிற்
பன்னிய **பளிங்கின்** பான்மை போன்றும்
இன்றியமை யாமையி **னின்னுயிர்** போன்றும்
என்னினை வறிதலி **னிறையவன்** போன்றும்
மன்னிய **நண்பனை** வாய்ப்புறப் பெற்றோர்
எய்தா வொண்பொரு ளிலையெனப்
பொய்யா நாவினர் புகன்றிசி னோரே. 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரைச் சிலேடை வெண்பா

தண்டைக்கால் கண்டவருந் தானேர்ந்து கொண்டவருங்
கண்ட மறுக்குங் கதிரையே -- பண்டொருநாள்
மானிடமா ஞர்க்கு மறைமொழிந்து மானுக்காய்
மானிட மாஞர் வரை. 26

நம்பனுறை பேடகமு நல்லாவி னெய்விளக்குங்
கம்பமா வேறுங் கதிரையே -- கும்பிடுவோர்
சங்கடம்ப ளுளுஞ் சிதைத்தருளைத் தந்தகந்தன்
செங்கடம்ப ளுளுஞ் சிலம்பு. 27

மேல்கீழ்ப் பிறவிகளில் வீழ்குநரை வேர்த்தோரைக்
காலாறு தல்செய் கதிரையே -- நாலாறு
மேழுமைஞ்சி னீங்கி யினிதருள வெம்பிறவி
நாளுமைஞ்சி நீங்கு நகம். 28

# நல்லையந்தாதி

புள்ளு மொலித்தன சேவலுங் கூவின பொங்கிருளும்
மெள்ள விடிந்தது நல்லையி லன்பரும் மேவிவிட்டார்
புள்ளிக் கலாப மயிலுமுன் வாயிலிற் போந்ததினிப்
பள்ளி யெழுந்தருள் வாய்பர மானந்தம் பங்கிடவே. 29

வித்தின்றித் தோன்றி வினையின்றி யெங்கும் விரிந்துமலத்
தொத்தின்றிப் பூத்துத் துயரின்றிக் காய்க்குமொர் தூயதருக்
கொத்தொன்று பூவார் குளிர்பொழில் நல்லை குலவுங் கண்டீர்
பத்தொன்று பத்தர்களேவம்மின் ஞானப் பழமுண்ணவே. 30

# மருதன் அஞ்சலோட்டம்

## இலங்கை ஆக்கம்

ஆயுள் வேதர் காலக் கணிதர்
சிற்ப நூல ராவமே
அடவி கொன்று விடெழுப்பி
ஆங்கிருக்கப் போவமே
மேயபஞ்சு நூலிலாடை
வன்னம் பன்னி நெய்வமே
வேற்றுப் புலத்தர் நாணவினைகள்
வேறு நூறு செய்வமே. 31

காடு கொன்று வாவி தொட்டு
மேழிச் செல்வங் காண்குவம்
கழனி தோறும் விளைவு கண்டு
கலத்தி லேற்றி யுலகிலே
நாடுந் துறைக ளோடிச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நிதியங் கூட்டுவம்
நலிக்கும் பஞ்சங் கெஞ்சியோட
நாட்டிற் றெழிலுங் காட்டுவம். 32

சிங்கக் கொடியும் நந்திக் கொடியும்
செகத்தி லோங்கத் தூக்குவம்
தெய்வத் தமிழைச் சிங்க ளத்தைத்
தேச மொழிக ளாக்குவம்
எங்கள் சாதிப் பழைமை பெருமை
எவர்க்குஞ் சென்று சாற்றுவம்
எம்மில் யாருஞ் சிறிய ரல்ல
ரென்று நின்று போற்றுவம் 33

இந்தி யாவி னின்று வந்தே
ஈழ நிதியங் கூட்டிடும்
இளைய தமிழர் முதிய தமிழர்
இனிய நண்பர் சோனகர்
வந்து சேர்ந்த பறங்கி மக்கள்
வங்கச் செல்வர் சிங்களர்
மாறி லாது சிறுமை நீங்கி
வாழ்க வென்றே யோடுவம் 34

கீழை நாட்டுத் தெய்வக் கலையும்
கிளரும் மேலைக் கலைகளும்
கேடி லெங்கள் சமய வாய்மை
கிளக்கு ஞான தத்துவம்
வாழி தமிழிற் சிங்களத்தில்
வளரு மிரண்டு கழகங்கள்
வடபால் தென்பால் அமைக வென்று
வாழ்த்துக் கூறி யோடுவம். 35

# தந்தையார் பதிற்றுப்பத்து

## கற்பித்த பத்து

கல்லா மாந்தர் முகத்திற் காண்பன
புண்ணே யன்றிக் கண்ணே யவையல
பாட்டு முரையும் பயிலாதனவிரண்
டோட்டைச் செவியு மவர்தமக் குண்டே
கைகளோ விழுகை தொழுகை யாங்கவர்
கால்களோ வாடுகா லோடுகால் அவரோ
மக்களுள் அந்தோ பதடிக ளாவரென்
றெட்டுநா ளாயினும் பட்டினி கிடந்தும்
ஒல்லும் வகையா லோதுவித் தருளிய
நன்றியை நாந்தொழு மிறைவா
என்றும் மறவா தேத்துகம் யாமே. 36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுக்கமுரைத்த பத்து

முடங்கிய மயிர்காற் சிலம்பிவாய் நூற்ற
நூலினும் நுண்ணிய விழையே யாயினும்
நூறுபல வடுக்கி வளம்பெற முறுக்கின்
வீறுபொலி யானையு மறுக்ககில் லாதே
ஓரிழை யறுந்து செறிவு வேறுயின்
ஆற்றுச் சிறுவரு மறுத்தெறி குவரே
நாற்பெருந் தூணிற் கோலிய நெடுமனை
ஒருதூண்பாறில் வீழ்ந்துபாழ் படுமே
மக்க ளனைவரும் மனத்தொற் றுமையாய்
வாழ்வதே மேலாம் வாழ்வென வுரைக்கும்
மந்திர மொழிகளை மறவேம்
எந்தையுங் குருவு மிறையுமா னவனே. 37

## விலக்கிய துரைத்த பத்து

இருவர் நின்றுழி இடைபோ கற்க
ஒருவர் எச்சில் தானுண் ணற்க
கொலைதலை வந்த புலையற் காயினும்
தன்னுடை மிச்சில் மறந்துமீ யற்க
உரலில் அம்மியில் மருவுத லொழிக
மதியார் வாயில் மிதியா தொழிக
உண்டி யின்றி யுடம்புநனி சாயினும்
உண்ணு தவர்பா லுண்ணுத லொழிக
ஈயார் தம்முழை யிரத்தல் ஒழிக
வாயாற் சுடரினை யவித்தல் ஒழிக
கீழோர் தம்மொடும் வெய்துரை ஒழிகவென்
றையநீ சொல்லுமல் லவைகள்
உய்வுற வகங்கொண் டோம்புகின்றேமே. 38

# வசந்தன் ஆடல்

(பண்டிதர் வி. சீ. கந்தையா)

உணர்ச்சிக் கவிவளம் நிறைந்த நாடாகிய மட்டக்களப்பிலே, மக்களது களிப்பினுல் நடிக்கப் படுவனவாய் நாட்டை உயர்வுறுத்தும் சிறப்புவாய்ந்த கூத்துவகைகள் பல உள்ளன. அவற்றுள், நன்கு மதித்துப் போற்றத்தக்க பெருமையுடைய ஒன்று வசந்தன் ஆடல். பன்னிருவர் வட்டமாக நின்று கோல் கொண்டு தாள அமைதி பிசகாது ஆடும் ஒருவகை ஆடல் இது. இவ்வாடல் நடைபெறும்போது வேறுவேருன சத்தங்கொண்ட பாடல்கள் வேறுவேறு பெயருடன் படிக்கப் படுகின்றன. ஆடல்களின் பெயரால் அவற்றின் பாடல்களும் பெயர் பெற்று, அவ்வப் பெயருக்கேற்ற பொருள் பொதிந்தனவாய் இயல்வன"

'வசந்தன்' என்ற தனிச் சொல்லாலும் 'வசந்தன் கூத்து' என்ற தொடராலும் இந் நிகழ்ச்சி பெயர் பெற்றிருப்பினும் பின்னைய தே பெருவழக்காயிருத்தல் கொண்டு கூத்து வகையைச் சேர்ந்த ஒன்று இது என்று துணியலாகும். இவ்வாடல் நடைபெறும்போது வடமோடி தென்மோடி என்ற நாடகங்களைப்போலவே "மத்தளம்" "சல்லரி" என்பவை இசை நடைக்கியைய அடிக்கப்படுகின்றன வெனினும், இக்கூத்து அவற்றுள் எந்தவகையைச் சேர்ந்தது என்று பழங்கோள் காட்டி நாம் இன்று அறுதியிடக் கூடியதாயில்லை. என்ருலும், தாள அமைப்பின் ஒழுங்கினையும், பாட்டுக்களின் முடிவில் தருப்படித்தாடும் மாருத வழக்கினையும், அரங்கேற்ற காலங்களில் அணியும் சில உடை விசேடங்களையும் கொண்டு நமது பழஞ் சொத்தாக வழங்கிவருகின்ற 'தென்மோடி' நாடகவகையினை இவ்வாடல் ஒருபுடைச்சார்ந்து நடத்தல் தெரிகின்றது. இதனுல் காலவழக்கில் மக்கள் இதனை வெறும் கோலாட்டம் போலக்கருதினுலும் பண்டைய மரபுப்படி வசந்தனை நாம் ஒரு கூத்து என்றே கொள்ளுதல் சரியாகும்.

இவ்வாடலை அழகு படுத்தும் "வசந்தன் கவிகள்" தமிழ் அறிந்த பெருமையுடையன. இப்பாடல்களின் பெருஞ் சிறப்பைக்கண்டு மகிழ்ந்து, மற்றையோரும் இவற்றைப்படித்துப் பயன் கொள்ளுதல் வேண்டும் என்ற நன்னேக்கினேடு காலஞ்சென்ற தமிள்அறிஞரான தி. சதாசிவ ஐயரவர்கள் பல்லோரறியாது ஏட்டுருவில் கிடத்த கவிதைகளை நூல் செய்து வசந்தன் கவித்திரட்டு' ஒன்றை நமக்குத் தந்து சென்ருர்கள். ஆனுல் அந்தப் பழங்கலையை நாம் இன்று மறந்துவிடும் நிலையில் அதன் பெருமைகளைச் சிந்தியாதிருக்கின்ருேம். ஆடலும் அறியாது, பாடலும் தெரியாது இருக்கும் நமது இந்த இழிநிலை வெட்கப்படத்தக்க ஒன்ருமும்.

கல்வியறிவின்றியே உணர்ச்சிப்பெருக்கின் வலைப்பட்டுக், கவிகளையாக்கித் தந்தோரின் பரம்பரையினர் வசந்தன் பாடல் ஆசிரியர்கள். அவர்கள் தமது ஊரையும் பேரையும் குறிப்பிடாது ஒன்றுவிட்டனர். ஆனுல் ஆடலின் பகுதிதோறும் 'வசந்தன்' என்ற தலையங்கத்தை ('குயில் வசந்தன்,' 'மாதவி வசந்தன்' 'வேளாண்மை வெட்டு வசந்தன்' என் பனவாக) வைத்துப்போற்றுதற்கு மட்டும் மறந்திலர். இதனுல் பாடல்களுக்கெல்லாம் வசந்தன் என்றபெயர் எவ்வளவு முக்கியமாகக் கருதப்பெற்றது என்று தெளிவாகின்றது. இப்பெயர் வந்தமைக்குரிய காரணம் நிறைவுற்ற நிலையில் நமக்குக் கிடைக்கவில்லை. வசந்தகாலத்தில் ஆடப்படுவதால் இப்பெயர் பொருந்திற்றென்று சிலர் கூறுவர். நடுநிலப் பகுதியினைச் சார்ந்து மாரியும் கோடையுமின்றி, வேறு பருவ பேதங்களை உணராத மட்டக்களப்பு நாட்டுக்கு வசந்தம் என்ற பருவகாலம் வருதல் நிலஇயல் அறிவிற்குப் பொருத்தமானதுபோற் தெரியவில்லை. அம்மன் பள்ளு என்ற வசந்தன் பாடலொன்றில் "அமுதஞ்சேர் சின்னப்புலவன் பாடவே" என்னும் அடியின் பாடபேதமாக "வசந்தன் சேர் சின்னப்புலவன் பாடவே" என்று சில ஏடுகளில் இருப்பதும், "வசந்தன்" என்ற சொல் காலத்தை எட்டிய பெயரினதாய் இருக்காது என்ற கருத்தினை ஒருபடி வலியுறுத்துகின்றது. சித்திரை தொடக்கம் ஆடி முடிய உள்ள பகுதியே மட்டக்களப்பு நாட்டில் பண்டு தொட்டு இக்கலை நிரம்பி வழிந்தகாலமாகும் கண்ணகி தேவியின் வழிபாடுபற்றிய இன்னேர் ஆடலான கொம்பு விளையாட்டின் போது ஆவணி புரட்டாதி ஆகிய மாதங்களிலும் இது நடைபெறுவதுண்டு.

வசந்தன் பாடல் பலவற்றையும் செய்த புலவர்கள் இந்நாட்டுக் காரைதீவினையும், தம்பிலுவில்லையும் சேர்ந்தவர்களாய் இருக்கலாமென்று கருதப்படுகின்றது. சின்னப் புலவர், சின்னவி அண்ணவியார், வசந்த ராசபிள்ளை என்ற பழம்பெயர்கள் சில அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹர்களில் இதுபற்றிக் கேட்கப்படுகின்றன எனினும், இப்பொருள் நன்கு ஆராய்ந்து முடிவு கட்டவேண்டிய ஒன்ருகும்.

வசந்தன் பாடல்களிற் பல கண்ணகி வரலாற்றைக் கூறும் வகையில் அமைந்து அவ்வழிபாட்டின் தொடர்பினவாய் இயலுகின்றன. இவற்றில் காணும் கண்ணகி வரலாறு சிலப்பதிகாரக் கதைக்கு மாருன ஒன்ருகத் தெரிகின்றது. கண்ணகியின் பிறப்பு தெய்வீக முறையிலே இப்பாடல்களில் கற்பிக்கப் பெற்றுள்ளது.

"உருவில்லாத மாயமாகியே–நுதல் விழிதனில்
ஒருபொறி கவிழ்ந்துறக்கமானதே
விருதராசர்கள் புகழ்தென்பாண்டியன்–வீற்றி [ருக்கின்ற
வேளையன்னதில் மாங்கனியானதே–என்று

இறைவனது நெற்றிக்கண் பொறி யொன்று மாங்கனியாகி அம்மாங்கனியே பின்னர் கண்ணகியாய் மாறிற்றென்று அம்மன் பள்ளு வசந்தனிற் குறிப்பிடும் வரலாறு இங்குள்ள "கண்ணகி வழக்குரை" என்னும் நூலிற் கூறப்படும் வரலாற்றுப் பகுதியினை ஒத்துள்ளது. "கூவாய் குயில்" என்பது போன்ற சில வசந்தன் பாடல்கள் வரலாறு மட்டுமின்றி, கண்ணகி வழிபாட்டினையும் கூறுவதாயிருக்கின்றன.

கண்ணகி கதையின் தொடர்பானவைகள் போக மிகுதியிற் பெரும்பகுதி வேளாண்மைச் செய்கை பற்றிய ஆடல்களாகும.

"கொண்டலாலே மழையும் இருளுது,
கூடுங்கோ மள்ளருப் பட்டிகட்ட
தென்றல் வந்திடு தெற்குத் திசையினில்
சென்று காரிருள் மண்டி ஒதுங்குது"

என்று இயற்கையின் காலநிலே கூறி, வேலேக்கு மள்ளரைக்கூவியழைக்கும் பொருள் கொண்ட இது உப்பட்டி கட்டு வசந்தனே அழகுறுத்தும் முதற் பாடலாகும். இவையும் இராமகாதை சார்ந்த சிலவும், செல்லப்பிள்ளே வசந்தன் முதலாயினவுமாக அறுபத்துமூன்று ஆடல்களுக்குரிய பாடல்களை ஐயர் அவர்கள் திரட்டி நூலாக்கியுள்ளனர். இன்னுஞ் சில ஆடல்கள்பற்றிய பாடல்கள் இப்பதிப்பில் இடம்பெற்றில. காரைதீவு, தம்பிலுவில், மண்டூர், வந்தாறுமூலே என்னும் ஊர்களிலே பல வசந்தன் ஏடுகள் பெட்டகங்களிற் தூங்கிக் கிடக்கின்றன. அவ்வாருன ஏடுகள் சிலவற்றில் 'கண்ணகியம்மன் பத்ததி' என்ற அம்மன் பூசை விதிகளும் உள. அதனல் பொது மக்களின் கைக்கு இவ்வேடுகள் சேர மறுக்கப்படுகின்றன வென்று தெரிகின்றது.

வசந்தன் பாடல்களுள் நரேந்திர சிங்கன்பள்ளு, இராசசிங்கன் பள்ளு என்றதலேப்பில் உள்ளவை, தாம் எழுந்த காலத்தை ஒருவாறு காட்டுவன. முதலதை நரசிங்கன் பள்ளு எனவும் கண்டிராசன் பள்ளு எனவும் கூறுவதுண்டு. இது கி–பி 1706 முதல் 1739 வரை கண்டியிலிருந்து அரசாண்ட நரேந்திர சிங்கன் என்னும் அரசன் மீது பாடப்பட்டதாகும். மற்றயதுஅவனுக்குப்பின் (1739–1741) இருந்த கண்டி அரசனுகிய ஸ்ரீ விஜயராச சிங்கன் மேற் புனேயப்பெற்றது. நரேந்திர சிங்கனது பட்டத்து இராணியின் சகோதரனை இம்மன்னன் மதுரை நாயக்கர் மரபைச் சேர்ந்தவன். கண்டியரசர்களிற்பலர் நல்ல தமிழறிஞர்களாயிருந்தனர். அவர்கள் மட்டக்களப்பு நாட்டினைப் பண்டுதொட்டே ஆண்டு வந்தார்கள். அம்மன்னர்களைக் காலந்தோறும் இங்கிருந்த புலவர்கள் பாடிப்பரிசில் பெற்று வந்த வழக்கின் தொடர்பாக இந்தஇரு வசந்தன் பாடல்களும் உள்ளன. இந்நாட்டில் இருந்த கொடையாளிகளான செல்வர்சிலரும் பாடல்களில் இடம்பெற்றுள்ளனர். நிலவளமும் அதனைப் பயன்கொள்ள மக்கள் கைக்கொண்ட வேலேகளும், தனித்தனியாக வசந்தனில் காணப்படுவ. வேளாண்மை வசந்தனிலே இங்குள்ள வயல்களில் விதைக்கப்படும் நெல்லின் பல இனங்கள் அழகுடன் கூறப்பட்டுள்ளன.

"பச்சைப் பெருமாள் கறுப்பன் பாலே
முகவன் செழும்பன்றிக்கூரன் வெள்ளே
வாலன் பவளச் சம்மா மெச்சியேபலரும்
விரும்பும் வெள்ளே வாணன் இந்த மேதினி
யெல்லாம் புகழும் முத்துச் சம்பா" —5

"முத்துச்சம்பா நெல் முளேயை முன்னே
விதைப்போம் நல்ல முருங்கன் கறுப்பன்களே
மேட்டில் விதைப்போம் சித்தியுடன் நெல்
வயல் முற்றும் விதைப்போம் – பயிர் செழித்த
பின் வேலிகாவல் செப்பனிடுவோம்..."–7

அம்பன் பள்ளு என்ற வசந்தனில் மாதவியினுடைய நடன அரங்கேற்றமும் இடம் பெறுகின்றது. அரசவையிலே தோன்றிய மாதவி புனேந்த கோலமானது, வசந்தன்கவி வாணரது புலமை வாயிலிருந்து மிகுந்தநயத்துடன் புறப்படுவதை இப்பாட்டின் தொகுதியிலே காணலாம்.

"வேளையறிந்தே இனியமாதவி–காற்சிலம் [பிட்டு
வீரத்தண்டைபொற் பாடக மணிந்து
வாளையனைய விழிக்குமை யெழுதிக்–குழைக் [குத்தோடிட்டு
மைக்குழல் வார்ந்து மலர்கள் சொருகியே–6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சொரிமுத்துமாலை பதக்கம் சவடியும்-மார்
[பிலணிந்து
துணை முலைக்குப் பொற்கச்சுகளிறுக்கியே
பரிபுர சித்திரக்கடையம் பூட்டியே-விரல்கள்
[தோறும்
பசும்பொன்மோதிரம் பரிந்திணக்கியே-7

''இணக்கமான துகில்கள் புனைந்துதான்-
[வழுதிசபையிலே
இரதி யென்னவே வடிவமிலங்கவே
மணக்கம் குங்கு மக்களபம் பூசியே-இனிய
[தோகை
மயில்கள் போலவே மாதவியாடினாள்''-8

இனிய செஞ்சொற் பயின்ற இப்பாடல்களிலே மாதவியணிந்திருந்த 'நகை நட்டுகளின் வனப்பெல்லாம் நன்கு காட்டப்பட்டுள்ளன. இசைப்பாடலாக அமைந்த இத்தகையபாடல்கள் கொண்ட வசந்தன் கவிதைத்தொகுதியானது பொருள்வளம் நிறைந்து கற்போர் கருத்தைக் கவர்ந்து நிற்பது. நாட்டின் பழம் பண்பெல்லாம் பொதிந்த கருவூலம் போன்றவை இப்பாடல்கள். அவற்றுக்கியைய ஆடப்பெறும் வசந்தன் ஆடலும் மட்டக்களப்பின் ஒருபழம் கலைச்சொத்தாயுள்ளது.

இக்கலைச் சிறப்பு நாட்டின் புகழை மேம்படுத்துவது. இசை நுணுக்கம் செறிந்த வசந்தன் பாடல்களை முறைப்படி பாடவல்லாரும் அவற்றின்வழி ஆடல் பயில்வாரும் மட்டக்களப்பின் கலைச்செல்வர்கள், இனிய சொற்கோப்புக் கொண்ட வரிப்பாடல்களாகிய இவ் வசந்தன் பாடல்களின் நயமும், ஆடலின் சிறப்பும் அறிந்து பேணித் தம் பரம்பரைப் புகழை மட்டக்களப்புத் தமிழகத்தார் மேலும் வளர்ப்பாராக.

Phone: 649

**HERE IS SPECIAL NEWS FOR YOU**

YOU WILL FIND R. B. THE IDEAL CENTRE FOR ALL YOUR

**Bridal Requirements**

HERE UNDER ONE ROOF YOU WILL FIND ALL THE SHADE AND SIZE AT THE RIGHT PRICE AND ABOVE ALL THE SERVICE AT R. B. IS JUST WHAT WILL PLEASE A BRIDE LIKE YOU

*ALWAYS AT YOUR SERVICE*

**R. B. & BROTHER**

*178, K. K. S. Road :: Jaffna.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்துவசிரோமணி

# பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்

பண்டிதர் இ. நமசிவாயம்

புன்னாலைக்கட்டுவன் என்ற ஊரில் ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலயம் ஒன்று உளது. அவ்வாலயத்துச் சுற்றுப் புறத்தில் அந்தணர் பரம்பரையாக வசித்து வருகிறார்கள். அவர்கள் ஆரிய மொழியும் தமிழ் மொழியுமாகிய இருமொழிகளையும் தம் மிரு கண்களெனப் போற்றுகின்றவர்கள். நல்லொழுக்கமுடையவர்கள். தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டு செய்வதில் சிரத்தை யுடையவர்கள். அவர்கள் பரம்பரையில் சென்ற நூற்றாண்டில் வசித்தவர் ஒருவர் சங் கரையர் என்பவர். அவருக்குக் கதிர்காமை யர், சின்னையர், சோமையர் என்று மூன்று புத்திரர்கள் பிறந்தனர். அவர்களுள் கதிர் காமையர் என்பவர் மேற்கூறிய ஆலயத் துக்கு அண்மையில் ஒரு பாடசாலை தாபித்து அதில் தாமே ஆசிரியராக இருந்து பெருந் தொண்டு புரிந்தவர். அப்பாடசாலைதான் பிற்காலத்தில் புன்னாலைக்கட்டுவன் அரசினர் பாடசாலையாக மாறியது. சங்கரையரின் இரண்டாவது மகன் சின்னையர் தான் வித் துவசிரோமணி கணேசையர் அவர்களின் தந் தையார் ஆவர்.

சின்னையர் ஆயாக்கடவைச் சித்திவிநா யகர் ஆலய அருச்சகராக இருந்தவர். அது அவருக்குப் பரம்பரை உரிமையாய் அமைந் தது. சிவபத்தி நிரம்பியவர் தாம் பூசிக்கும் படிகலிங்கத்துக்குப் பூசனை புரிந்தன்றி உண் ணாத நியமம் பூண்டவர். நன்றாக நடக்க முடியாதபடி காலில் சிறிது ஊறு உடையவர் ஆயினும் அவ்விலிங்கத்தை நாள்தோறும் நூற் றெட்டுத் தரம் வீழ்ந்து வணங்கியெழும் நியமம் பூண்டவர். இவற்றால் நிரம்பிய பொருள் வருவாய் இல்லாதவர். அவரின் மனைவியார் வருத்தலை விளானில் பிரபலசோ திடராய் விளங்கிய யோகவன ஐயரின் சகோ தரி. அவ்வூர் வேலாயுதையரின் புத்திரி. பொன்னம்மை என்ற பெயரை உடையவர். அவர்கள் இருவருக்கும் ஒருவர் பின் ஒருவ ராய் நான்கு புத்திரிகள் பிறந்தனர். அத னால் அவர்களுக்கு வறுமைத் துன்பம் மிக் கது. அதனோடு ஆண்பிள்ளை இல்லையே என்ற கவலையும் சேர்ந்து கொண்டது கட வுள் பத்தி வளர்ந்தது. விநாயகர் அரு ளால் அவர்களுக்கு ஓராண்மகவு பிறந்தது. அம்மகவு கணேசன் அருளாற் பிறந்தமை யால் அதற்குக் கணேசையர் என்று பெய ரிட்டனர்.

கணேசையர் அவர்கள் ஆங்கில வருடம் ஆயிரத்தெண்ணூற்றெழுபத்தெட்டுக் குச் சரியான ஈசுர வருடம் பங்குனி மாதம் பதினைந்தாம் நாள் (26 - 3 - 1878) செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணி இருபது நிமிஷமளவில் பூராடம் மூன் றாங்காலில் பிறந்தவர்கள். இவருக்கு ஐந்து வயதானபோது வித்தியாரம்பம் செய்விக்கப் பட்டது. ஐயரவர்கள் தமது பெரியதந்தையா ராகிய கதிர்காமையரிடம், அவரால் தாபிக்கப் பட்ட பாடசாலையில் கல்வி பயின்றார். இக் கால முறைப்படியன்றி அக்கால முறைப்படி நீதி நூல்கள், அந்தாதிகள், பிள்ளைத்தமிழ் கள், நிகண்டு, இலக்கணம் முதலாயின வற்றை ஒழுங்காகக் கற்றார்கள். எட்டாவது வகுப்புமுடிய அப்பாடசாலையிலேயே கல்வி பயின்றார்கள். எட்டாவது வகுப்பில் கந்த புராணங் கற்றார்கள். ஐயரவர்கள் படித்த அந்த வகுப்பை அம்முறை பரீட்சிக்க வித் துவ சிரோமணி நல்லூர் ச. பொன்னம் பலப்பிள்ளை அவர்கள் அழைக்கப்பட்டார்கள். பிள்ளையவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் மருகர். நன்மாணாக்கர், பலநூற் பயிற்சியு டையவர்கள். சிறந்த உரையாசிரியர். ஒப் பாரும் மிக்காரும் இல்லாத வித்துவ சிரோ மணி. பரீட்சையின் போது ஐயர் அவர்க ளுக்கு வித்துவசிரோமணியின் ஆற்றல் புல னாயிற்று. அவரிடம் பாடங்கேட்க வேண்டு மென்ற ஆவல் உதயமாயிற்று. வித்துவசிரோ மணிக்கும் ஐயர் அவர்களிடம், அவர்களிட மமைந்த கல்விப்பிரியமும் ஆற்றலும் நோக்கி அன்பு உண்டாயிற்று.

தம்மரிய புத்திரனின் அவாவை நிறை வேற்ற ஆவன செய்தார் சின்னையர். சின் னையரின் மூத்த மகன் வண்ணார்பண்ணையில் விவாகஞ் செய்தவர். அவ்வூர்ச் சிவன்கோ வில் பிரகாரத்தில் அவர் வீடு இருந்தது. இப்போதும் அவர் பரம்பரையினர் அங்கேயே வசித்து வருகின்றனர். அப்பரம்பரையில் வந் தவர்தான் வண்ணை பாகவதர் மணி ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள். பாகவதர் அவர்கள் ஐயா அவர்களுக்குப் பேரன் முறையினர். தமக்கையாரின் வீட்டில் தங்கி ஐயர் அவர்கள் வித்துவசிரோமணி அவர்களிடம் பாடங்கேட்டு வந்தார்கள். இடையிடையே நம் தந்தையாருக்கு உதவி செய்தற்பொருட்டு, புன்னாலைக்கட்டுவனில் தங்கினார்கள். அங்கு தங்குங் காலங்களிலும் நல்லூர் சென்று பாடங் கேட்பதில் தவறியதில்லை. காலையில் புன்னாலைக்கட்டுவனிலிருந்து நடந்து நல்லூர் சென்று பாடங்கேட்டபின் பொழுதுபட அங்கிருந்து நடந்து புன்னாலைக்கட்டுவனை அடைவார்கள். வித்துவசிரோமணியிடம் பாடங்கேட்பது இலகுவான காரியமன்று. அவர்களை வீட்டில் சந்திப்பது அருமை. புராணங்களுக்குப் பொருள் சொல்வதற்கும், பிரசங்கங்கள் புரிவதற்குமாக வித்துவ சிரோமணி அவர்கள் அங்கங்கே அடிக்கடி சென்றுவிடுவார்கள். ஐயர் அவர்களும் சோர்வடையாது அவர்கள் செல்லுமிடமெல்லாஞ் சென்று புராணப் பொருள்களைக் குறித்துக் கொள்வார்கள். பிரசங்கங்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து கொள்வார்கள். வீட்டிற் சந்திக்குங் காலங்களில் உயர்ந்த இலக்கண இலக்கிய நூல்களைப் பாடங் கேட்டுக் கொள்வார்கள். ஐயர் அவர்களுக்கு வித்துவ சிரோமணியிடம் பாடங்கேட்பதில் அத்துணை அவா இருந்தது. ஐயர் அவர்களின் விடாப் பிடியைக் கண்ட வித்துவ சிரோமணியவர்களுக்கும் ஐயர் அவர்களின் மேல் அதிகப் பிரியம் இருந்தது. துரோணாச்சாரியாருக்கு அருச்சுனன் மேல் இருந்த பிரியம் போல.

காலம் அவ்விருவரையும் பிரித்து விட்டது. வித்துவசிரோமணி அவர்கள் இறைவன் திருவடி எய்திவிட்டார்கள். மீகாமன் இல்லாத மரக்கலம் போலத் திகைத்தார்கள் ஐயர் அவர்கள். அவர்களின் துன்பங்களைய உறுதுணையாக வாய்த்தார்கள் சுன்னாகம் குமாரசாமிப் புலவர் அவர்கள். புலவர் அவர்கள் வடமொழி, தென்மொழியாகிய இருமொழிகளிலும் நிரம்பிய பாண்டித்தியம் உடையவர்கள். தருக்க சாஸ்திரத்தில் வல்லவர்கள். சொல்லாராய்ச்சியில் நிகரில்லாதவர்கள் பொய்ம்மை களைந்து மெய்ம்மை நிலை நாட்டும் கண்டனகாரர். பொய்ப்புலவர்கள் அவர்கள் பெயரைக் கேட்டால் நடுங்குவார்கள். அங்ஙனம் சிறந்த புலவர் அவர்களின் சேர்க்கையால் ஐயர் அவர்களுக்கு வடமொழியறிவு மிகுவதாயிற்று. தருக்க சாத்திர அறிவு செம்மையுறுவதாயிற்று. ஆராயுந்திறன் எய்துவதாயிற்று. புலவர் அவர்கள் விண்ணுலகெய்திய போது ஐயர் அவர்களுக்கு ஏறக்குறைய நாற்பத்துநான்கு வயது நடந்து கொண்டிருந்தது. எனினும் ஐயர் அவர்கள் புலவர் அவர்கள் சிவபதமெய்தும்வரை அவர்களின் தொடர்பை விட்டதில்லை.

ஐயர் அவர்கள் தங்களுக்கு இருபத்தெட்டு வயது நடக்கும் போது விவாகஞ் செய்தார்கள். மனைவியார் பெயர் அன்னலட்சுமி அம்மை. அம்மையார், ஐயர் அவர்களின் தாய்மாமன், வருத்தலைவிளான் யோகவன ஐயரின் ஏகபுத்திரி. வடமொழி தென்மொழியாகிய இருமொழிகளிலும் அறிவு பெற்றவர். அழகும் நல்லொழுக்கமும் உடையவர். பெரும் பொருட் செல்வத்துக்கு உரிமையுடையவர். இவர்களுக்குப் புத்திர பாக்கியம் கிடைக்கவில்லை. ஐயர் அவர்களுக்கு ஐம்பத்திரண்டு வயது நடக்கையில் மனைவியார் இவ்வுலகை நீந்துவிட்டார். மனைவியாரின் நகைகளை விற்று வருத்தலைவிளான் மருதடிவிநாயகர் ஆலயத்துக்கருகில் ஒரு காணி வாங்கி, அதில் ஒரு கிணறு தம்மனைவியார் பெயரில் வெட்டுவித்து முற்கூறிய ஆலய உபயோகத்துக்காகத் தருமசாதனம் பண்ணினார்கள் ஐயர் அவர்கள். சீதனமாகக்கிடைத்த நிலம் பணம் என்பவற்றை எல்லாம் உரிமைக்காரருக்குப் பகிர்ந்தளித்து விட்டார்கள். பின் விவாகஞ் செய்யாது தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டு செய்துகொண்டு வாழ்ந்தார்கள்.

தமக்கு இருபத்திரண்டு வயது நடக்கும் போது ஐயர் அவர்கள் வயாவிளானில் ஒரு பாடசாலை தாபித்து தாமே அதில் ஆசிரியராக இருந்து இரண்டு வருடம் சேவைசெய்தார்கள். இதன்பின்தான் விவாகம் நடந்தேறியது. விவாகத்தின் பின், மூன்றுந்தராதர பத்திரப்பரீட்சையில் சித்தியெய்தினார்கள். பின் தம் மாமனாராகிய போகவன ஐயரால், தையிட்டியில் தாபிக்கப்பட்ட பாடசாலையில் சில ஆண்டு சேவை செய்தார்கள். நயினாதீவு சுன்னாகம் பிராசீனபாடசாலை, என்ற இடங்களில் பல ஆண்டுகளாகச் சேவைசெய்தார்கள். இடையிடையே, கீரிமலை, வண்ணார்பண்ணை என்ற இடங்களிலும் படிப்பித்திருக்கிறார்கள். பிற இடங்களில் சேவை செய்த காலங்களில், காலை, மாலை, இரவுநேரங்களிலும், பிற இடங்களில் சேவை செய்யாத இறுதிக் காலத்தில் எந்தநேரத்திலும், வருத்தலைவிளானில் வகுப்புக்கள் நடத்தியிருக்கிறார்கள். இவர்களிடத்துப் படித்தவர்கள் யாழ்ப்பாணத்துப் பலவிடத்தும் இருக்கிறார்கள்.

ஐயர் அவர்கள் இலக்கணம், இலக்கியம், தருக்கும், சோதிடம் என்பவற்றில் மிகுந்த பாண்டித்தியம் உடையவர்கள். உரைசெய்தல், வசனஆக்கம், செய்யுளாக்கம் என்பவற்றில் நிரம்பிய வல்லமை உடையவர்கள். இவற்றுக்கு ஐயர் அவர்களால் ஆக்கப்பட்ட தொல்காப்பிய உரைக் குறிப்புக்கள், இரகுவமிசஉரை நாணிக் கண்புதைத்தல் என்னும் ஒரு துறைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவையுரை. அகநானூற்றுரை, குசேலர் சரிதம், ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம், குமாரசுவாமிப்புலவர் சரிதம் மருதடிவிநாயகர் பிரபந்தம் என்பன சான்று பகரும். செந்தமிழ் ஈழகேசரி முதலாய பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதி வெளியிட்ட, ஆராய்ச்சிக் கட்டுரைகளும் சான்றுபகரும்.

ஐயர் அவர்கள் இல்லோர்க்கீயும் இயல்புடையவர்கள். ஆலயத்திருப்பணிகள் செய்தலில் ஆர்வமுடையவர்கள். வருத்தலை விளான்மருதடிவிநாயகர் ஆலயம், புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலயம் என்பவற்றில் அவர்கள் செய்ததிருப்பணிகள் என்றும் அவர்களை ஞாபகஞ் செய்வன.

சைவமும் தமிழும் வாழத்தாம் வாழ்ந்த ஐயர் அவர்கள் துறவுள்ளம் படைத்தவர்கள். வேண்டுதல் வேண்டாமை இல்லாதவர்கள். விநாயகப் பெருமானைத்தஞ்சமாகக் கொண்டவர்கள். வருத்தலை மருதடிவிநாயகர் ஆலயத் தண்மையில் ஓராச்சிரமம் அமைத்து அதில் வதிந்தவர்கள். அவ்வாச்சிரமத்திலேயே தம் முடலைவிட்டு, இறைவன் பாதம் எய்தியவர்கள் அவர்கள்சிவபதமுற்றது, ஆங்கிலவருடம் ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தெட்டுக்குச் சரியான விளம்பி ஞூ ஐப்பசிமாதம் இருபத்து மூன்றாம் நாள் (8–11–58) சனிகாலை ஆறுமணியாகும். நட்சத்திரம் உத்தரம் திதி அபரத்துவாத சி. ஐயர் அவர்களின் ஞான பரம்பரை நீடு வாழ்க.


# SUBHAS CAFE

*Prop: A. SANGARAN*
176, HOSPITAL ROAD, JAFFNA.

எங்களிடம் பலவித சிற்றுண்டிகள், ஐஸி சொக்ஸ் ஐஸ்கிறீம், காப்பி, தேநீர் குளிர்ந்த பானங்கள் எந்நேரமும் கிடைக்கும்.

**சுத்த போசனமும் உண்டு**

விசேஷ ஆடர்கள் குறித்த நேரத்தில் தயார்செய்து கொடுக்கப்படும்.

**தங்கும் இடவசதிகளும் உண்டு**

## "சுபாஸ் கபே"

176, ஆஸ்பத்திரிவீதி, : யாழ்ப்பாணம்.

**டாக்ஸி எந்தநேரமும் விடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னுகம்
# குமாரசுவாமிப் புலவர் ❁

(கு. அம்பலவாணபிள்ளை)

### தோற்றுவாய்

ஒரு நாட்டின் பெருமைக்கும் அதன் உண்மையான விருத்திக்கும் காரணராவோர் அந்நாட்டின் கண்ணே தோன்றி வாழும் கல்வி கேள்விகளால் நிரம்பிய சான்றோரேயாவர். அவர் தமது அறிவு முதிர்ச்சியால், சீலத்தோடு கூடிய நல்வாழ்க்கையினுல் அந்நாட்டு மக்களை நன்னெறிப்படுத்திச் சேறும் ஆற்றலை இயல்பாகப் பெற்றவராவர். அந்நாட்டின் உறுதி நிலைக்கும் விருத்திக்கும் அவருடைய ஆதரவு இம்மாத்திரமன்று. அவ்வாருய அறிஞர்களைப் பெற ஒருநாடு எத்துணைத் தவம் ஆற்றவேண்டுமென்பது சொல்லாதே போதரும். ஈழநாடெனப்படும் இலங்கையில் செந்தமிழணங்கு திருநடம் புரியும் தேயம் யாழ்ப்பாணமே. இங்கு பல தமிழ்ப் புலவர்கள் பலவிடங்களில் பல்வேறு காலங்களிற் ருேன்றித் தமிழன்னைக்குப் பல்வேறு துறைகளிற் பல்வகைத் தாய தொண்டுகளுஞற்றிப் போந்தனர். இவர்களைப்பற்றிப் பொதுவாகத் தமிழறிவும் ஆர்வமுமுடையார் யாவரும் நன்கறிவர்.

யாழ்ப்பாண நங்கைக்கு முகமெனக் கவின்பெற்று விளங்குவது சுன்னுகம் என்னுங் கிராமம். இக்கிராமம் பல பெருமைகளுடன் நல்லிசைப் புலமை வாய்ந்த அறுபெரும் புலவர்கட்கு உறைவிடமாயுள்ளது பற்றி மிக்க பேரும் புகழுமுடைத்தாய் விளங்காநின்றது. இக்கிராமத்தில் அவதரித்த புலவர்கள் தென்மொழியாகிய தமிழில் மாத்திரமன்றி வடமொழியாகும் சமஸ்கிருதத்திலும் பரந்த ஆழ்ந்தவறிவும் பயிற்சியும் ஆற்றலுங் கைவரப்பெற்றவர்கள். அவர்கள் வாழ்ந்த காலக்கிரமப்படி வரத பண்டிதர், முத்துக்குமார கவிராசர், சங்கர பண்டிதர், நாகநாத பண்டிதர், முருகேச பண்டிதர், குமார சுவாமிப்புலவர் என்போராக அவர்களை நிரைப்படுத்திக் கூறலாம். இவர்களுள் இரண்டாவதாகக் காட்டப்பட்ட முத்துக்குமார கவிராசரே, தொல்காப்பியம், இலக்கணவிளக்கம், வீரசோழியம் முதலிய அரிய பெரிய புராதன தமிழ் நூல்களைப் பிழையறப் பரிசோதித்து அச்சுவாகனமேற்றி அவைகள் அழிந்தொழியாது பாதுகாத்துப் பெரும்புகழ் படைத்த பேரறிஞர் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களின் நற்றமிழாசிரியராவர். இம்முத்துக்குமார கவிராசரின் வழித்தோன்றலாகவுள்ளவர்தான் சுன்னுகம் குமார சுவாமிப்புலவர்.

### கல்வி கற்றல்

முத்துக்குமாரகவிராசரின் கனிட்டரான சின்னத்தம்பியாரின் புத்திரர் அம்பலவாணபிள்ளையே குமாரசுவாமிப் புலவரின் தந்தையாராவர். மேற்படி அம்பலவாணப்பிள்ளைக்கும் சிதம்பர வம்மையாருக்கும் அருமை மைந்தராகக் குமாரசுவாமிப்புலவரவர்கள் 1854-ம் வருடம் தைமாதம் பிறந்தனர். உரிய காலத்தில் வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்றுத் தமிழ்க்கல்வியை ஊக்கத்துடன் கற்பாராயினர், இவருக்குத் தமிழ்க்கல்வியோ பரம்பரைச் சொத்தாகவே யிருந்தது. இவர் தந்தையார்

---

❁ இவ் விஷயம் 17-2-59 புலவரவர்களின் சிராத்த தினத்தன்று அகில-இலங்கை வானொலியில் பேசப்பட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலவாணபிள்ளையும் தமிழறிவுடையவர். கவியாத்தலில் வன்மையும் பெற்றிருந்தனர். புலவரவர்கள் கல்வியை இனிது கற்றுக்கொள்வதற்குப் போதிய வசதிகள் தாராளமாகக் கிடைத்தன. இயற்கையாகப் புலவர்களைப் பீடித்து வாட்டும் வறுமைநோய் இவருக்கு எட்டமாகவே நின்றது. இவரளவில் கோமியும் அவள் மாமியும் சிறிதும் முரண்பாடு கொள்ளாது ஐக்கியமாக வாழ்ந்தனரென்றே சொல்லிவிடலாம். அக்காலத்திற் சுன்னையம்பதியில் இலக்கணப்புலியாக விளங்கிய பூ. முருகேசபண்டிதரிடந் தமிழையும், ஐந்து மொழிகளில் விற்பன்னராய் விளங்கிய அ. நாகநாத பண்டிதரிடஞ் சமஸ்கிருதத்தையுங் கற்கும்பேறு இவர்க்கு இலகுவிற் கிடைக்கப்பெற்றது. இவர்களிடமன்றி அளவெட்டியில் வாழ்ந்த கனகசபைப்புலவரிடமுஞ் சில விலக்கணங்களையுந் தேர்ந்துகொண்டனரென்பர் தமக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்திய ஆசிரியர்கள் மாட்டு இவர் என்றும் நிறைந்த பக்தியுடையராயிருந்தனர். இவர்கள் நன்றியை மறவாது புகழ்ந்து பாராட்ட இவர் தவறுவதில்லை. வேறுபல அறிஞர்களையுந் தேடியடைந்து கல்வித்துறையிற் றமக்கு ஏற்படுஞ் சந்தேக விபரீதங்களைத் தீர்த்துக்கொள்வது இவரது வழக்கம். ஆறுமுகநாவலரவர்களிடத்திலுஞ் சென்று சில நூல்களிலுள்ள சந்தேகங்களைத் தெளிந்துகொண்டனரென்பர்.

## சொல்லாராய்ச்சி

சிறுவயதினராயிருக்கும் போதே இலக்கண விலக்கியங்களை மிக்கவாராய்வுடன் நன்கு கற்று நூலாராய்ச்சித் துறையில் மிகவும் ஈடுபட்டுழைக்கவாரம்பித்துவிட்டனர் எனலாம். கவிதைகளைச் சிறப்புடன் சொன்னயம் பொருணயம் பொருந்தவியற்றும் வன்மையும் பத்திரிகைகட்கு வாதவிஷயங்கள், கட்டுரைகள் வரையும் ஆற்றலும் இளமையிற்றானே இவர்மாட்டு இயற்கையாக அமைந்து விட்டன. நுண்மாணுழைபுலனும் தீவிர விவேகமும் பொருந்தப்பெற்ற இவருக்கு அபாரமான ஞாபகசக்தியுமுண்டு. சங்கநூல்கள், இராமாயணம், மகாபாரதம், சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்களிலுள்ள செய்யுள்கள் என்றும் நாநுனியில் நிற்பன; தேவைக்குத் தேவை வந்துதவுவன. முல்லையந்தாதி, கம்பரந்தாதி முதற்கொண்டு பதினைந்து அந்தாதிகட்கு மேல் வாய்பாடமாகச் சொல்லி உரைகூறும் வன்மையும் பெற்றிருந்தனர்.

இவ்வாறுகத் தமிழில் மிக்க பாண்டித்தியமும் பழக்கமுமுடைய புலவர்களது காலம் பெரும்பான்மையும் மாணவர்கட்குக் கல்வி பயிற்றுவதிலும், சொல்லாராய்ச்சியிலும், நூல்கள் இயற்றுவதிலும் செலவாயிற்றெனலாம். தமிழில் வழங்கப்படுஞ்சொற்களின் வடிவத்தை உள்ளவாறு நிச்சயப்படுத்திக் கூறுவதிலும், அச்சொற்களின் ஆற்றலை நன்கறிந்து விளக்குவதிலும் இவர்போற் சிறந்த வன்மை படைத்தவர் இன்னொருவரைக் கண்டுகொள்வது அரிதாகும். ஆற்றலாவது சொல்லின் வலி. அதாவது சொல்லுக்கும் பொருளுக்குமிடையிலுள்ள தொடர்ச்சி. இதனை யுறுதியாக நிச்சயப்படுத்திக் கூறும் வன்மையைச் சாதாரணமாக ஒருவர் பெற்றுவிடுவதென்பது இயலுவதன்று. இவ்வரிய வன்மை நிகண்டு, உரைநூல்கள், இலக்கியவிலக்கணங்கள், முதியோர் வழக்குகள் என்பனவற்றிற் பரந்த பழக்கமும் அறிவும் பெற்றுப் பெறவேண்டியதொன்றும்.

இவ்வரிய வன்மைப்பாட்டினைத் தாராளமாகப் பெற்றிருந்தமையினாற்றான் மற்றையோர் இயற்றி வெளியிடும் நூல்களிலுள்ள குறைபாடுகளை இவர் இலகுவிற் கண்டுகொள்ளக் கூடியவராயினர். பழைய நூல்களைத் திருத்தி யச்சிடுங்கால் பாடபேதங்களை நோக்கி ஏற்றனவற்றைச் சிறப்பாகக் கண்டுசொல்லும் பேராற்றலும் இதனைக் காரணமாகக் கொண்டே பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்கள் இலக்கணங்களி லுள்ள எத்தனையோ சொற்கள் உரிய வடிவத்தைப் பெற்றமைக்கும், ஆற்றல் பிறழாது அவைகள் உபயோகத்திற் கொண்டுவரப்பட்டமைக்கும் புலவரவர்கள் காலத்துக்குக் காலம் சொல்லாராய்ச்சி விஷயமாகப் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளே காரணமாயினவெனலாம். இவருடைய இராமாயணம் பாலகாண்டப் பதிப்பினை நுனித்து நோக்கின் இத்துறையில் இவர் வன்மை எத்தகைத் தென்பது எளிதில் அறியவரும். அதில் இவர் கண்ட புதிய திருத்தங்களும் நூதனமாக எழுதப்பெற்ற உரைவிளக்கங்களும் தமிழறிஞர்களின் பாராட்டினையும் மதிப்பினையுந் தாராளமாகப் பெற்றதுண்டு. இராமாயணத்துள்ள மற்றைய காண்டங்களையும் நன்கு பரிசோதித்து உரை விளக்கங்களுடன் வெளியிட முன்னர் இவர் சிவபதமடைந்தமை தமிழுலகு செய்த தவக் குறைவென்றே கூற வேண்டும்.

## நூலுரைகள்

நீண்டகாலம் ஆசிரியராக விருந்த காரணத்தால் உயர்ந்த தமிழ்க் கல்வி கற்கப்புகும் மாணவர்கட்கு இன்றியமையாதன யாவை என்பதை நன்கறிந்திருந்தனர். அவர்கட் கெல்லாம் இனிது பயன்படக்கூடிய முறையிற் புதிய நூல்கள் எழுதியும் வேறுபல பழைய நூல்கட்குச் சிறந்தவுரைகள் வகுத்துந்தந்துள்ளார். இற்றைக்கு ஐம்பது வருடங்கட்கு முன்னர் மிக்கவாராய்ச்சியின் பயனாக அரிதியற்றிய "இலக்கணச் சந்திரிகை"யும் பின்னர் (1918-ம் வருடம்) வெளியிட்ட "வினைப் பகுபத விளக்கம்" என்னும் நூலும் தமிழை ஆர்வத்துடன் கற்கும் மாணவர்களுக்கு அருவிருந்தாக வுள்ளன. இவ்விலக்கண நூல்களின் அருமை பெருமைகளை உண்மையான சிறந்த தமிழறிவு படைத்தவர்களே அறிந்தளவிட வல்லார்கள். "எத்தனை வருடங்களாக முயன்று இவ்வரிய நூல்களை எழுதினீர்களோ" என்றெல்லாம் மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ.வே சாமிநாதையரவர்கள் அபிப்பிராயங் கூறியுள்ளார்கள்.

எழுத்துஞ் சொல்லுங் கற்றபின் மாணவர்கள் அடுத்தபடியாகக் கற்க வேண்டிய இலக்கணங்கள் பொருள், யாப்பு, அணியென்பனவாகும். இவைகளை மிகவிரித்துக்கூறும் நூல்கட்குப்—அகப்பொருள் விளக்கம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம்—புலவரவர்கள் திறம்பட நன்கு விளக்கி வகுத்த பேருரைகள் பெரிதும் பாராட்டற் குரியன. நீண்டகாலமாக வாசிரியராகவிருந்து பெற்றதமது அனுபவத்தை ஏற்றமுறையிற் பயன் படுத்தி, அந்நூல்களில் மாணவர்களுக்கு ஏற்படுங் கஷ்ட நிலைகள், நுணுக்கங்கள், மற்றுந்தேவைகள் என்பவற்றை யெல்லாம் நன்கறிந்து எழுதப்பட்ட இவ்வுரை நூல்கள் ஈடு செய்ய வியலாத வெளியீடுகளென்றே கூறவேண்டும்.

## அகராதி தொகுத்தல்

சொல்லாராய்ச்சியில் பெரிது மீடுபட்டுழைத்துவந்த புலவர்களுக்குத் தக்க முறையில் அகராதி தொகுக்கும் வன்மையும் அமைந்திருந்தது நூதனமன்று. நீதிபதி கு. கதிரவேற்பிள்ளையவர்களால் பல்லாண்டுகளின் உழைப்பாக எழுதப்பெற்று, மதுரைத் தமிழ்ச்சங்கத்தினரால் அச்சிட்டு வெளியிடப்பெற்ற தமிழ்ப் பேரகராதி உருவத்தைப்பெற்று உலகிற் பயனடைதற்கு புலவர்களின் கூட்டுறவும் உதவியும் இம்மாத்திரமன்று. இவ்வகராதியிலுள்ள எடுத்துக் காட்டுகள், பொருள் நயங்கள் என்பன புலவர்களின் கைவரிசையைக்காட்டுவனவாகும். மேலும் புலவரவர்கள் தாமும்வேறாக "இலக்கியச் சொல்லகராதி" என்றபெயருடன் எவரும் முன்னர்க்கையாளாத முறையில் நவமாகவோர் அகராதி இயற்றித் தமிழ் கற்போருக்குப் பெரிதும் பயன்படும்படி வழங்கியுள்ளார்கள். தமிழிலக்கியங்களைக் கற்போர்க்கெல்லாம் இவ்வகராதி யொன்றுமேபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி-வடக்குத் தமிழாசிரியர் சங்க வெண் பொன் விழாச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானதென்பது தமிழறிஞர்கண்ட முடிவான அபிப்பிராயமாகும். "தமிழ்நூல்களை நான்கற்கும் போதெல்லாம் என்னைவிட்டகலாது நின்று உதவிபுரியும் நண்பன் உங்கள் அகராதியே" என்று சேர். பொன். அருணசலமவர்கள் கடிதங்கள் எழுதுங்காலத்தும் நேர் முகமாகச் சந்திக்கும் போதும் பன்முறை விசுவாசமாக இவ்வகராதியை வியந்துள்ளார்கள்.

## புதிய நூல்கள்

புலவரவர்கள் இயற்றிய 'புலவர் சரித்திரம்' என்னும் நூல் தமிழ்ப்புலவர்களின் காலங்களையெல்லாம் வரையறுத்து நிச்சயிக்கும் ஆராய்ச்சியிற் புகுந்துள்ளோர்க்கு ஒருகால் பயனளிக்காது போயினும், தமிழ்ப் புலவர்களைப் பற்றியும், அவர்கள் புலமைத் திறங்களையும் அவர்களியற்றிய செய்யுள்களின் நயங்களையும் அறிய நாட்டங் கொள்வோர்க்கு அது பேருதவியாகு மென்பதில் சந்தேகமின்று. மேலும் மாணவர்களுக்கு உபயோகமாகும் பொருட்டுப் புதிய செய்யுள் நூல்களும் உரைநடை நூல்களும் இவரால் ஆக்கப்பட்டுள்ளன. கட்டளைக் கலித்துறை யாப்பில் இவரால் இற்றைக்கு அறுபது வருடங்கட்கு முன்னர் இயற்றப்பெற்ற மேகதூதக்காரிகையும், வெண்பாத்துறையில் யாக்கப் பட்ட "சாணக்கிய நீதிவெண்பாவும்", விருத்தப்பாவில் இயற்றப்பட்ட "இராமோதந்தமும்" படிப்போர் சிந்தையில் பழைய சங்கநூல்களை ஞாபகப்படுத்துவன. இந்நூல்கள் மதுரஞ் சேர்ந்த கூரிய சீரிய செஞ்சொற்களால் அமைந்து சொன்னயம் மிகுந்து பரந்து விரவி, ஒழுகியவோசையும் விழுமிய பொருளுமுடையனவாகத் திகழ்வன. ஆரம்பத்தில் தமிழிலக்கியங் கற்கும் மாணவர்களுக்கு இந்நூல்கள் மிக்க பயன்படக்கூடியன.

இவரியற்றிய வசன நூல்களும் மாணவர்கட்கு உபயோகப் படவேண்டும் என்ற குறிப்புடன் எழுதப்பட்டனவாகும். முன்னர் குறிப்பிடப்பட்ட தமிழ்ப்புலவர் சரித்திரமேயன்றி, சிசுபாலசரிதம், இரகுவமிச சரிதாமிர்தம், கண்ணகிகதை முதலியனவும் சொல்லாற்றல் விளங்க மிக்க திறம்பட எழுதப்பட்டனவாகும்.

## கண்டனம் எழுதுதல்.

இவர் இளைஞராகவிருந்த காலந் தொடக்கம் விவாதவிஷயங்கள் கண்டனங்கள் என்பன பத்திரிகைகளில் எழுதுவதில் மிக்க விருப்பமுடையவராக விருந்தனர். அறிஞராகத் தம்மைக் காட்டிப் போலியாக நடிப்போர்களின் உண்மை நிலைகளை விரைந்து கண்டறிந்து அவர்கள் பிழைகளைக் கண்டிப்பதில் இவருக்கு நிகரானுரில்லையெனலாம். கண்டிக்கும் முறையும் மிகு விசித்திரமாகவிருக்கும். நூற்பிழைகளை விரைந்துகாணும் ஆற்றல் மிகப்பெற்றவர். இவருடைய கண்கள் பூதக் கண்ணாடி போல்வன. சாதாரணமாகக் கண்களால் கண்டுகொள்ளவியலாத நுண்ணிய பொருட்களைப் பூதக்கண்ணாடியின் உதவியைக் கொண்டு காண்பது போல, நூல்களில் மற்றையோர் கண்டுகொள்ளாத பிழைகளையெல்லாம் இவரது கண்கள் கண்டுவிடும். இவ்வாற்றல் எவரும் இலகுவில் பெறக்கூடியதன்றென ஸ்ரீமத் த. கைலாயபிள்ளையவர்கள் ஒருகால் குறிப்பிட்டுப் பாராட்டியதுமுண்டு. கண்டனங்கள் எழுதுவது காரணமாகச் சிற்சிலபோது வேறுசில புலவர்களின் விரோதத்தையும் பகையையும் இவர் தேடிக்கொண்டதுமுண்டு. மற்றையோர் பிழைகளை எடுத்துக்காட்டி வந்தமையால் தாம் எழுதும் நூல்களில், கட்டுரைகளிலெல்லாம் பிழைகள் நேராதிருப்பதில் இவர் மிகச் சாவதானமாகவிருப்பர்.

## சமயவறிவு

மொழிவளர்ச்சியில் மாத்திரம் இவரது தொண்டுகள் செல்லவில்லை. சைவ சமய சாத்திரங்களிலும் இவருக்கு நிரம்பிய அறிவுண்டு. நவாலர். பெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானின் பிரியமாணவரும் சித்தாந்த சாத்திர விற்பன்னருமாகிய இணுவில் ப்ரம்ஸ்ரீ நடராசையரிடம் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் முதலிய நூல்களையும் தருக்கசாத்திரங்களையும் நன்கு கற்றிருந்தனர். காலஞ்சென்ற ஸ்ரீமத் சுவாமிநாதபண்டிதரவர்கள் சிவஞானபோதமாபாடியத்தைப் பரிசோதித்து அச்சிட்டு வெளியிட்டபோதும், கொழும்பு நியாயதுரந்திரர் திரு. மு. திருவிளங்கமவர்கள் சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் முதலிய சாத்திரங்கட்கு உரை வகுத்து வெளியிட்டபோதும் அவ்வவர்கட்கெல்லாம் புலவரவர்கள் அளித்துள்ள உதவிகள் எத்தன்மையனவென்பதை அவர்களே தந்தம நூல்களின் முகவுரைகளில் எடுத்துக்காட்டியுள்ளார்கள். திரு. மு. திருவிளங்கமவர்கள் எழுதிய சிவஞானசித்தியார் உரையில், ஆரம்பத்தில் எழுதப்பட்டுள்ள அளவைப்பகுதி நயம்படத் திறமையுடன் விளங்குவதற்குப் புலவரவர்கள் கைவரிசையே பெருந்துணையாயிற்றெனலாம்.

## நாவலர் தொடர்பு

நாவலர் பெருமானின் தூய வாழ்க்கையே பலதுறையிலும் புலவரவர்களை வழிகாட்டி நின்றதை அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பத்தைப் பெற்றோர் நன்கறிவர். நாவலரவர்கள் சிவகதியடைந்தபோது புலவரவர்களுக்கு வயது இருபத்தைந்தாகும். பத்து வருடங்கட்குமேலாக நாவலருடன் மிக்க பழக்கமுடையவர். நாவலரவர்கள் நட்புந் தொடர்புமே இவர் தமது தமிழறிவையும் சமய சாத்திரவுணர்ச்சியையும் உரிய முறையில் விருத்திசெய்து பாதுகாத்தற்குப் பெரிய உதவியாயின. நாவலரவர்களிடம் சென்று கல்வி விஷயமாக ஏற்படும் சந்தேக விபரீதங்களை நீக்கிக் கொள்வது மாத்திரமன்றி அவருடைய சொற்பொழிவுகள், புராணபடனங்கள் எங்கெங்கு நிகழ்கின்றனவோ அங்கங்கெல்லாம் ஆவலுடன் தவறவிடாது சமுகமளிப்பது இவருடைய வழக்கம். நாவலர் பெருமான்மாட்டு இவருக்குள்ள அன்பும், மதிப்பும், அபிமானமும் இம்மாத்திரமன்று. தமிழ்மொழிபற்றியோ சமயத்துறையிலோ எவ்விஷயத்தையும் நோக்கி முடிவுசெய்யுங் காலெல்லாம் நாவலரவர்களே இவரின் உரைகல்லாவர். தாம்சிவபதமடையுமட்டும் நாவலரவர்களின் கொள்கைகள் மரபுகள் என்பவற்றுக்கெல்லாம் ஊறு வராது பாதுகாத்து வந்தனர். நாவலர்வகுத்த வித்தியாதருமங்கள், கல்விமுறைகள், சமயாசாரங்கள், வாழ்க்கையொழுங்குகள் என்பன எல்லாராலுங் கைக்கொள்ளப்பட்டு ஓங்கிவளரவேண்டுமென்ற வேணவாப்பூண்டிருந்தனர். நாவலரவர்கள்மாட்டு இவருக்கிருந்த பெருமதிப்பும் ஆர்வமுமே இவர் நாவலர் வித்தியாசாலையை இடமாகக்கொண்டு கல்வித்தொண்டுபுரிய நேர்ந்ததென்று கூறிவிடலாம்.

## குணமாண்புகள்

புலவரவர்கள்மாட்டுக் காணப்பெற்ற குணமாண்புகள் பலதிறப்பட்டன. தூய எளிய வாழ்க்கையையே கைக்கொண்டு வந்தனர். ஆடம்பரமான போலி வேடங்களை இவர் என்றும் விரும்பியதில்லை. பிறர் தன்னை மதிக்கவேண்டுமென்று எண்ணுவதில்லை. அறிவிலார் காட்டும் மதிப்பினையும் ஏற்பதில்லை. பணவருவாயை நோக்கி மாணவர்கட்குக் கல்விகற்பித்தறியாதவர். வருவாய் நோக்கி நூல்கள் எழுதி வெளியிட்டறியார். தாம் கல்வி விஷயமாக அறியாதனவற்றை நேரே அறியவில்லையென்று வெளிப்படையாகக் கூறிவிடுவார் மேலும் தாம் அறியாதவற்றை அறிந்தோரிடங் கேட்டுத்தெரிந்து கொள்வதிலும் பின்னிற்கமாட்டார். அறிந்தனவற்றையெல்லாம் மாணவர்களுக்கு ஒளியாது சொல்லி வைக்கும் பெருங்குணமுடையவர். கல்வி விஷயமாகவோ மற்றைய எந்தவிஷயமாகவோ தம்மையே மாற்றும் எண்ணங்கொள்வாரை விரைந்தறிந்து அவர்கள் கபட நாடகங்கள் கைகூடாது செய்துவிடுவார்; காரணம் பற்றிப் பக்கஞ்சார்ந் துரைத்தறியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாணவர்கள்

நீண்ட காலமாக ஆசிரியராக விருந்த இவரிடம் கல்விகற்று மிக்க தேர்ச்சியடைந்தோர் பலராவர். அவர்களிற் பலர் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களாகவும், நூல்கள் இயற்றுபவர்களாகவும், நூலாராய்ச்சியில் காலங்கழிப்பவராகவுமுளர். இவர்களில் மிகச் சிறப்படைந்தோருள் விசேஷமாக எடுத்துக் காட்டப்படக் கூடியவருஞ் சிலருளர். தொல்காப்பியத்தைச் சிறந்த உரை விளக்கங்களுடன் வெளியிட்ட வித்துவசிரோமணி ப்ரமஸ்ரீ சி. கணேசையர் அவர்களும் கொழும்பு ஆசிரிய கல்லூரித் தமிழ்ப்பண்டிதராக விருந்த தென்கோவை திரு. ச. கந்தையாபிள்ளை அவர்களும் புலவரிடங் கற்றுத் தேறியவர்கள். இவர்கள் கல்வியறிவையும் தமிழ்த் தொண்டின் பெருமைகளையும் உலகம் நன்கறியும். இவர்கள் அண்மையிற் காலஞ் சென்றமை தமிழுலகுக்குக் பெருநட்டமேயாகும். தீவிர விவேகமும் வடநூல் தென்னூலுணர்ச்சியும் மிக்கவராய் விளங்கிய தெல்லிப்பழை வித்துவான் ப்ரமஸ்ரீ ச. சிவானந்தையரவர்கள் இளம் வயதிலேயே காலஞ்சென்று விட்டனர். சுன்னாகம் சி. மாணிக்கத்தியாகராச பண்டிதரவர்கள் கோண்டாவில் பண்டிதர் ச. இளையதம்பியவர்கள் முதலிய இன்னும் பலபேர்கள் ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் புலவரவர்களிடம் கற்றுத்தேறினவர்கள். நாவலர் வித்தியாசாலையில் புலவரவர்களிடம் கற்றவர்களும் மிகப் பலர். இப்போது சீவந்தரர்களாயிருப்பவர்களில் குறிப்பிடப்படக்கூடியவர்கள் உடுவில் ப்ரமஸ்ரீ. வ. மு. இரத்தினேஸ்வர ஐயரவர்கள், கொக்குவில் ப்ரமஸ்ரீ. சீ. முருகேசையரவர்கள், இருபாலை ஸ்ரீ வேதாரணிய தேசிகரென்பேராவர். இவர்களேயன்றிப் பிற்காலத்தில் இவரிடம் முறையாகத் தொடர்ந்து கல்வியைக் கற்றோரும் பலராவர். அவர்களுள் விசேடமாகக் குறிப்பிடப்படக் கூடியவர்கள் "மட்டுவில் பண்டிதமணி", திரு. சி. கணபதிப்பிள்ளையவர்களும் மட்டக்களப்பைச் சார்ந்த மண்டூர் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையவர்களுமே. இவர்களிருவரும் நாவலர் வித்தியாசாலையில் மாத்திரமன்றிப் புலவரவர்கள் வாதநோயாற் பீடிக்கப்பட்டு இல்லத்திருந்த காலத்திலும் அங்குசென்று கல்விபயின்று வந்தவர்களாவர். இவர்கள் யாவரும் தம்மாசிரியர்மாட்டு மிக்க அன்பும் நன்றியுமுடையவராயிருந்து வந்ததுடன் தமது காலத்தைத் தமிழ்ப் பணியிலேயே செலவிட்டு வருவாராயினர்.

### இறுவாய்

இவ்வொருக நீண்ட காலமாக தமிழ்த்தொண்டு புரிந்துவந்த புலவரவர்களது ஆரோக்கியம் பிற்காலத்தில் வரவரக் குன்றுவதாயிற்று. கடைசி மூன்று வருடங்களாக வாதநோய்க்காட்பட்டு மிக வருந்தினர். இடைக்கிடை சிறிது குணமடைந்தாராயினும் நோய் பூரணமாக நீங்கினபாடில்லை. நோய்வாய்ப் பட்டிருந்த காலத்திலும் எழுத்துவேலைகள், மாணவருக்குக் கல்வி பயிற்றுதல் முதலிய வேலைகள் நடந்துகொண்டே வந்தன. காலவடைவில் உடம்பு மெலிவடைந்து பெலமுங் குன்றிவந்தது. பின்னர் துன்மதி ௵ மாசி ௴ 25-ந் திகதி (1922) உற்றார் உறவினர் நண்பர்கள் வருந்தவும், மாணவர்களும் கற்றோரும் மற்றோருங் கலங்கித் துயரடையவும் புலவர்கள் அரனடிமேவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மைக்கிணையுண்டோ ... ?

**ம**ங்கையராகப் பிறப்பதற்கே — நல்ல
மாதவம் செய்திடவேண்டுமம்மா'

என்று அறிவுக் கீதம் பொழிகின்றார் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையவர்கள். இக்கூற்றைப் பல கவிஞர்களும் ஆதரித்தே சென்றுள்ளார்கள் என்பதற்கு அவர்களியற்றிய இலக்கியங்கள் சான்று பகருகின்றன.

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்கிறார் வள்ளுவர். ''கற்புக் கடம் பூண்ட இத் தெய்வம்'' என்கிறார் இளங்கோ. ''நங்கையர் மனத்தவம் நவிலற் பாலதோ" என்கிறார் கம்பர். ''ஆளுமே பெண்மையரசு" என்கிறார் புகழேந்தியார். ''பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா" என்கிறார் பாரதியார். இப்படியாகப் பெண்மையை வழி வழியாகப் போற்றி வந்திருக்கின்றனர் கவிஞர்கள். ஆனால் பெண்மை நலஞ் சிறந்தாலன்றி பெண்மை பெருமையடைய முடியாது.

முதலில் பெண்மை என்பதன் பொருளை நாம் உணரவேண்டும். காட்சியிலே பெண்களாகத் தோற்றுபவர்களையெல்லாம் பெண்மை நலமுடையவர்கள் என்று கூறிவிட முடியாது. 'பெண்மை' என்பது கண்ணுக்குப் புலனாவதோர் அமைதித்தன்மை என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார். இன்னும் விளக்கமாகக் கூறுகிறார் கண்ணாலே காணும் போது தோன்றும் சாந்தமான தோற்றத்தின் இயல்பே பெண்மை யென்றும் கூறலாம். பெண் என்றதன் அடியில் இருந்து பிறந்த சொல் பெட்பு. பெட்பு என்பதன் கருத்து விருப்பம். ஆதலால் பெண்மை என்பது விரும்பு்ந்தன்மை யென்றும் பொருள் படுவதாகும். இதுகாறும் கூறியதிலிருந்து அமைதி பெற்று விருப்பத்தை யுண்டாக்கும் தன்மையே பெண்மை என்பது தெளிவாகிறது. ஆளுந்தன்மையும், அறிவும், முயற்சியும், ஆண்மையிடத்தே மிளிர்தல்போல, பேணுந்தன்மையும், அன்பும், நுகர்ச்சியும் பெண்மையிடத்தே மிளிர்கிறது.

இத்தகைய பெண்மைக்கு இலக்கணமாக அமைந்து நூல்களில் இடம் பெற்றவர்கள் வாசுகி, கண்ணகி, சீதை, திரௌபதி, தமயந்தி, நளாயினி என்போராவர். பெண்மைக்கு மாறான பாணியிலே நடந்த சூர்ப்பனகை, கூனி, தாடகை, காந்தாரி, முதலியோரும் நூல்களில் இடம் பெற்றுள்ளனர். முன்னவர்கள் கவிஞரால் போற்றப்பட்டுள்ளார்கள். பின்னவர்கள் கவிஞர்களால் தூற்றப் பட்டுள்ளார்கள். சாதாரணமாகவே நாம் நல்ல பெண்களைப் பற்றிப் பேசும் போது அவள் ஒரு சீதை யல்லவா? என்று நலம் பாராட்டுவதும், கெட்ட பெண்களைப் பற்றிப் பேசும்போது அவளா? அவள் சரியான சூர்ப்பனகைதான் என்று இழிவு பாராட்டுவதும் வழக்கம். இதிலிருந்து வாழ்க்கையிலே பெண்மையடையும் உயர்வும் பெண்மைக்கு மாறானவர் அடையும் இழிவும் எத்தகையது என்று அறியக் கூடியதாய் இருக்கின்றது.

காதலி என்ற அன்புப் பதவிக்கும் இல்லாள் என்ற குடும்பப் பதவிக்கும் தாய் என்ற பெரும்பேற்றுக்கும் உரித்தாகிறவர்கள் பெண்களே. இல்லாள் என்பது இல்லை ஆள்பவள் என்ற பொருளில் வந்ததாகும். தாய்மை என்பது ஒரு பெரும்பேறு. தாய்மையைப் போற்றாதவர்கள் இவ்வுலகிலில்லை. '' அம்மையே அப்பா ஒப்பிலா மணியே " என்று பாடும்போது மணிவாசகர் இறைவனைத் தாய்மையுருவிலேயே முதலிற் காண்கிறார். பட்டினத்தார் தாயின் ஈமக்கடன் கழிப்பதற்காகக் காத்திருந்தார் என்று கூறப் பட்டுள்ளது. இதிலிருந்து துறவு நிலையிலும் தாய்மைப் பாசம் இழுக்கும் தன்மையை நாமறிய முடிகிறது. பொதுவாகக் கூறினால் தாய்மையைப் போற்றாதவன் மனிதனல்ல. ஏன்? விலங்கினங்கள் பறவையினங்கள் கூட இதற்கு விதி விலக்காக இல்லையென்பது கண்கூடு.

இனி சங்க இலக்கியங்களிலே பெண்மை பெற்றுள்ள பெருஞ் சிறப்புகளைக் கவனிப்போம்.

சங்ககாலம் என்பது இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமாகும். அக்காலம் தமிழினத்தின் பொற்காலமாக விளங்கியது. அக்காலத்தில் வாழ்ந்த பெண் மக்களின் நிலை, அறிவு, வீரம், இல்லற நலன், கற்பு மேம்பாடு என்பன பிற்காலப் பெண்களுக்குச் சிறந்த அறிவுறுத்தல்களாகும்.

பல பெண்புலவர்களின் பாடல்கள் சங்க இலக்கியங்களிலே இடம் பெற்றுள்ளன. அவற்றிலிருந்து அக்காலப் பெண்களின் அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுத் திறனும் கவித்துவ வன்மையும் எத்தன்மைத் தென்பதை அறிய முடிகிறது. ஒளவையார் என்னும் பெண்புலவர் அதிகமான் பொருட்டுத் தொண்டைமானிடம் தூதுசென்று இருவரையும் சந்து செய்தார் என்பதைச் சங்கப் பாடல் ஒன்று காட்டுகிறது. இன்னும் வீர உணர்ச்சி மிக்கவர்களாகவும் அக்காலப் பெண்கள் விளங்கினார்கள். தாய்மார் வீர உணர்ச்சியோடு விளங்கிய படியால் அவர் தம் புதல்வர்களும் வீரர்களாகவே விளங்கினார்கள். தம் பிள்ளைகளுக்கு வீரப் பாலூட்டி வீர உணர்ச்சி கொடுத்தனர் தாய்மார்கள் என்பதற்குச் சான்றுகளுண்டு.

கீழ்வரும் பாடல் மூலம் ஒரு பெண்ணின் வீரத்தைக் காண்போம்,

"மண்டமர்க் குடைந்தன னாயின்
[உண்டவென்
முலையறுத்திடுவன் யான் எனச் சினவி இ
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துளவு வோள் சிதைந்து
[வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே"

ஒரு குடு குடு கிழவி. அவளுடைய மகன் போருக்குச் சென்றிருக்கிறான். அனுப்பி வைத்த தாய் அவன் வீரச் செய்தியைப் பற்றி அறிவதற்கு அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறாள். இதற்கிடையில் ஒரு செய்தி. அதாவது போருக்குச் சென்ற அவள் மகன் போரில் முதுகு காட்டி ஓடி இறந்து விட்டான் என்ற வதந்தி தாயின் காதுகளில் விழுகிறது. நாராசம் போல் விழுந்த அவ் வார்த்தைகளால் அவளுக்குக் கோபம் பொங்குகிறது. கையிலே வாள் ஒன்றை ஏந்திக் கொண்டு நேரே போர்க்களஞ் செல்கிறாள். என் மகன் முதுகிட்டோடி இறந்திருந்தால் அவன் பாலுண்ட மார்பை இதோ அறுத்தெறிகிறேன் என்று கூறிச் சினமடைகிறாள். போர்க்களத்திலே இருந்த பிரேதங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறாள். கண்டு விடுகிறாள் தன் மகனை. ஆனால் அவள் கேள்விப்பட்டது போல முதுகிலே ஒரு காயமுமில்லை; மார்பிலே தான் வேல் பட்டு இறந்து கிடக்கிறான் மகன்; பெற்ற பொழுதிலும் பார்க்கப் பெரு மகிழ்ச்சியடைகிறாள் அன்னை. எப்படியிருக்கிறது அக்காலப் பெண்களின் வீர உணர்ச்சி. இவர்கள் உயிரினும் பார்க்க வீர உணர்ச்சியையே பெரிதாக மதித்தார்கள் என்பது தெளிவாகும்.

அடுத்து அக்காலப் பெண்கள் வாழ்ந்து காட்டிய இல்லற வாழ்க்கையைக் கவனிப்போம். இல்லறம் நல்லறமாக விளங்குவதற்குக் கணவன் மனைவியருக்கிடையில் அன்பு, ஒருமைப்பாடு நிலவ வேண்டும். இருவரும் ஒருவர் என்ற தன்மை விளங்க வேண்டும். இருவருள்ளமும் ஒன்றுபட வேண்டும். இதனைச் சங்கச் செய்யுளொன்றில் காண்போம்.

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெய்நீர் போல
அன்புடை நெஞ்சம் தான் கலந்தனவே"

பருவமுள்ள ஆண்மகன் ஒருவனும் பருவமுள்ள பெண்மகள் ஒருத்தியும் ஒருவரையொருவர் சந்திக்கின்றனர். விதி உடன் நின்று கூட்டுகிறது. இருவர் மனமும் ஒன்றுபடுகிறது. அதாவது செம்மண் நிலத்தில் மழைநீர் விழுந்தால் எவ்வாறு மழைநீரும் செம்மண்ணும் கலந்து ஒன்றுபட்ட தன்மையாகி விடுமோ அந்தமுறையில் இருவர் மனமும் ஒருமைப்படுகிறது. இப்படியாக இருவர் மனமும் ஒன்றுபட்டமையைத் தலைவன் பின்னொருநாள் நினைக்கிறான். தனது தலைவியிடம் அதனைக் கூறுகிறான்.

தலைவியே! உனது தாய் யாரோ? எனது தாய் யாரோ! அதுவுமல்லாமல் உனது தகப்பனும் எனது தகப்பனும் எவ்வழியிலும் தொடர்புடையவர்களல்ல, ஆனால் நானும் நீயும் எவ்வழியாகவோ தொடர்பு வைத்துக் கொண்டோமே! செம்மண்ணும் நீரும் ஒன்றுபட்ட தன்மை போல எங்கள் இருவர் உள்ளமும் ஒன்றுபட்டு விட்டனவே. என்று சகசமாகக் கதைத்துக் கொள்ளுகிறான்.

இன்னும் அக்காலத்துப் பெண்கள் கணவனைப் பேணுந்திறனில் பிற்காலத்தவர்க்குப் பெரியதோர் எடுத்துக்காட்டாக விளங்கியிருக்கிறார்கள். களைத்துவந்த தனது கணவனுக்கு ஆறுதல் மொழிகூறி அன்புடன் உபசரித்து அறுசுவையுணவு அளித்து. மகிழ்வது மனைவியின் பெருங்கடனாகும். ஒரு மனைவி தனது கணவனுக்கு உணவூட்டிய முறையைச் சங்கப்பாடல் மூலம் காண்போம்.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாது உடீஇ
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல்
[முகனே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டித் தயிரை நன்ருகப் பிசைந்து கொண்டிருக்கிருள் ஒரு பெண். அதற்கிடையில் உடுத்திருந்த சேலையும் சிறிது கழன்று விடுகின்றது. சேலையை அவசர அவசரமாகச் சொருகிக் கொள்கிருள். அடுப்பிலே தாளிதக் குழம்பு வெந்து கொண்டிருக்கிறது. இதற்கிடையில் சாப்பிட ஆயத்தமாய் கணவனும் வந்து இருந்து விட்டான். ஒரே அவசரம் பெண்ணுக்கு. புகை கண்ணிற் படவே கண்ணீர் சொரிகிறது. இந்த நிலைமையிற் தான் கணவனுக்கு உணவு பரிமாறுகிருள். தயிர்க்குழம்பினைச் சேர்த்து உண்ணும் போது அவனுக்கு ஒரே உவகை. இதனல் இனிது இனிது என்று சொல்லிச் சொல்லி உண்கிருன். அவளும் மெல்லிய புன்முறுவலோடு நாணி நிற்கிருள். பாருங்கள் இல்லற இன்பத்தின் மாண்பை. இத்தோடு மாத்திரம் சங்க காலப் பெண்கள் நின்று விடவில்லை. விருந்தோம்பலிலும் அவர்கள் சிறந்து விளங்கினர். விருந்து வந்திருக்கிறது என்று அறிந்தவுடன் மகிழ்வது அவர்கள் வழக்கமாகும். விருந்து வருவதாகக் கரைந்த காக்கைக்கே மகிழ்ச்சியால் உணவு ஊட்டுவார்களாம் அக்காலப் பெண்கள். இப்படியான சிறந்த பண்புகள் கனிந்த மகளிர் விளங்கிய காலம் சங்க காலம். அக்காலப் பெண்களின் வாழ்க்கை வரலாறுகள், பாடல்கள் முதலியவற்றை நாம் அந்தக் கால நிலைக்கு இக்காலப் பெண்மை உயரவேண்டும்.

"நாகரீகத்திலும் கல்வி மேம்பாட்டிலும் நாம் உயர்ந்து விட்டோம்" என்று இக்காலப் பெண் சமுதாயம் பெருமைப் படலாம். ஆனல் சங்க காலப் பெண்மைக்கு நாம் இணையாக முடியாது என்பதிற் சந்தேகமில்லை. எனவே வருங்காலமும் பெண்மையைப் போற்றக் கூடிய முறையில் சங்க காலப் பெண்மையைப் பின்பற்றிப் பெணினம் நடந்து கொள்ளல் அவசியமாகும்.


# உமர் பிறதர்ஸ்

44, பெரியகடை யாழ்ப்பாணம்

டெலிபோன் 671 தந்தி பேர்ல்ஸ்

எல்லாவிதமான சாய்ப்புச் சாமான்களும் பள்ளிக்கூட
உபகரணங்களும் மற்றும் பொருட்களும்
நிதானமான விலைக்கு விற்கப்படும்

# OMER BROTHERS

44, GRAND BAZAAR, JAFFNA

*Telephone: 671* *Telegrams: "PEARLS"*

DEALERS IN:

**Stationery, Sundries Etc.,**

OUR AIM IS TO SATISFY THE CUSTOMER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல பீடி இறக்குமதியாளர்

# வை. எம். கே. மக்கள் பீடி

மொத்தமாகவும் சில்லறையாகவும்

## கபே, நவஜீவனில்

பெற்றுக்கொள்ளலாம்.

132, காங்கேசன்துறை வீதி, : : யாழ்ப்பாணம்.

உங்கள்

# அச்சு வேலைகள்

சிறப்பாகவும் திருப்திகரமாகவும்
செலவு குறைவாகவும்

இருக்க வேண்டுமா?

## எம்மிடம் வருக!

பாடப்புத்தகங்கள் உபகரணங்கள் காகிதவகைகள் முதலானவைகள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

ஸ்ரீ காந்தா அச்சகம், புத்தகசாலை,
213, காங்கேசன்துறை வீதி, : யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி. தம்பிப்பிள்ளை அன் சன்

நகை வியாபாரம்

191, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்

தற்காலத்திற்கேற்ற

தங்க நகைகள்

எங்களிடம் உத்தரவாதத்துடன் பெறலாம்

ஓடர் நகைகள்

குறித்த காலத்தில்

செய்து தருவோம்

**S. THAMBIPILLAI & SON**

MANUFACTURING JEWELLERS

191, K. K. S. Road, JAFFNA.

Fashionable Jawels Are Made to Order at MODERATE CHARGES

V. P. P. ORDERS

*Will Promptly Executed*



# FANCY HOUSE

FOR

**All Fancy Goods**

**&**

**Threads**


**68, Grand Bazaar, :: JAFFNA**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலத்தில் சங்கத்தில் தொண்டாற்றிய பெரியார்கள்



திரு. அ. பொன்னுத்துரை



திரு. சா. கு. பத்தி நாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தின் தலைசிறந்த தமிழ்ப் பேச்சாளர்களுள் ஒருவர் மதிப்பிற்குரிய **ம. பொ. சி.** அவர்கள். தமிழரசுக் கழகத்தின் தலைவர். சில ஆண்டு கட்குமுன் **'உமா'** பொங்கல் மலரில் வெளியான இக் கட்டுரையை அனுமதியுடன் வெளியிடுகின்றோம்.

# இளங்கோவின் கடவுட்கொள்கை

ம. பொ. சிவஞானம்

சிலப்பதிகார ஆசிரியர், சேர நாட்டின் இளவரசராவார். அதனாற்றான் **"இளங்கோ"** என்ற பட்டப்பெயரே இயற்பெயராக வழங்கலாயிற்று.

இளங்கோவின் சமயம் யாது? இதைப்பற்றி அறிஞர் பலரும் பல விதமான முரண்பட்ட கருத்துக்களை மக்களிடையே பரவ விட்டிருக்கின்றனர். சிலப்பதிகாரத்தில் வரும் சில செய்திகளைக் கொண்டு, "இவரது சமயம் சைவமென்று தோற்றுகிறது" என்று சிலப்பதிகாரப் பதிப்பாசிரியரான டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் கூறியிருக்கின்றார். அவரேவேறுசில சான்றுகளைக் காட்டி, "இவரது சமயம் சைவமென்று ஐயுறுவதற்கும் இடமுண்டு' என்று தமது சந்தேகத்தையும் ஒளிவு மறைவின்றி வெளியிட்டிருக்கிறார்.

சிலப்பதிகார உரையாசிரியர்களுள் ஒருவரான நாவலர் வேங்கடசாமி நாட்டார்.

'செங்குட்டுவன் சிவபிரானை யன்றிப் பிறிதொரு தெய்வத்தையும் முடியால் வணங்காத சிவபக்தி மாண்புடையானென்பது பெறப்படுதலின், அவனது தம்பியாகிய இவரது சமயமும் சைவமே யாதல் வேண்டும்' என்று அறுதியிட்டு உறுதிகூறி முடிக்கின்றார்.

இன்னும் சில புலவர்கள் இளங்கோவடிகள் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதைத் தக்க நூற்சான்றுகளோடு உறுதிப்படுத்துகின்றனர்.

ஆய்ச்சியர் குரவையில், திருமாலைப் பற்றிய பாடல்களைப் படிப்போர் நாவினிக்க, கேட்போர் செவியினிக்கப் பாடியிருத்தலின் இளங்கோவடிகள் வைணவராகவே இருந்திருக்கக்கூடும் என்றும் வற்புறுத்துகின்றனர்.

இவர்கள் கூற்றுக்கள் அனைத்தையும் கூர்ந்து நோக்குமிடத்து, இளங்கோவடிகள் குறிப்பிட்ட எந்தவொரு சமயத்தையும் சாராத சமரச சன்மார்க்க நெறியினராக வாழ்ந்திருக்கக் கூடும் என்று துணிவதற்கும் இடமிருக்கிறது.

இளங்கோவடிகளின் சொந்த சமயம் எதுவாயினும், அவர் இயற்றிய 'சிலப்பதிகாரம்' சர்வ சமயத்தினரும் போற்றத்தக்க சமூகக் காப்பியமாக விளங்குகின்றதென்பதில் ஐயமில்லை. இளங்கோவடிகள், சமயவாதிகளால் நம்பப்பட்டு வரும் பல்வேறு தெய்வங்களில் குறிப்பிட்ட எந்த ஒன்றையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது வழிபடு தெய்வமாகக் கொண்டதாகத் தெரியவில்லை. சிலப்பதிகாரக் காப்பியம் முழுவதையும் ஆராய்ந்து பார்த்தால், இறுதியாகவுள்ள 'வரந்தரு காதை' யில் தான் தனது தெய்வ நம்பிக்கையை வெளியிடுகின்றார். மற்ற காதைகளில்சந்தர்ப்பத்திற்கேற்ப, பாத்திரங்களின் மூலமே கடவுள் நம்பிக்கையை வலியுறுத்துகின்றார்.

வரந்தரு காதையிலும்; "தெய்வம் தெளிமின்; தெளிந்தோர் பேணுமின்" என்ற இரண்டே வாசகங்களில் தமது தெய்வ நம்பிக்கையை உலகறிய ஓதுகின்றார்.

இளங்கோவுக்கு முற்காலத்தவராகக் கருதப்படும் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தை முதலாகக் கொண்டே திருக்குறளை இயற்றியருளினார். ஆம்; பத்துக் குறட் பாக்களால் கடவுள் உண்மையையும், அவரை வழிபடுதலால் ஏற்படும் நன்மையையும், வழிபடாதார் அடையக்கூடிய தீமையையும் தெளிவாகத் தெரிவிக்கின்றார்.

இளங்கோவுக்குப் பின் தோன்றிய திருத்தக்க தேவரும், "மூவா முதலா" என்று துவங்கி, கடவுள் வழிபாட்டை நிகழ்த்திய பின்னரே "சீவக சிந்தாமணி" என்ற காப்பியத்தை இயற்றி முடித்திருக்கிறார்.

சிந்தாமணிக்குப் பின் தோன்றிய கம்பராமாயணத்திலும் "உலகம் யாவையும்" என்று தொடங்கும் முதற் பாடலில், இறைவழிபாடு நிகழ்த்திய பின்னரே, தமது மாபெருங் காப்பியத்தைச் செய்து முடிக்கிறார் கவியரசர் கம்பர்.

தமக்கு முன்னும் பின்னும் தோன்றிய புலவர்களோடு மாறுபட்டவர் போல கடவுள் வாழ்த்தே இல்லையென்ற நிலையில் திங்களையும் ஞாயிற்றையும் மழையையும் போற்றிய வண்ணம் காப்பியம் செய்யத்துவக்கியிருக்கிறார் இளங்கோ. இது புலவர் உலகத்தில் நாம் காணும் ஒரு புதுமையான நிகழ்ச்சியாகத் தோன்றும்.

இளங்கோ வடிகள் காலத்திலேயே வாழ்ந்தவராக, அவரது நெருங்கிய நண்பராகக் கருதப்படும் கூலவாணிகன் சாத்தனாரோ, 'இறைவழிபாடு' எதுவுமின்றி, எடுத்த எடுப்பிலேயே கதையை ஆரம்பிக்கும் புதுமையை அவர் இயற்றியுள்ள 'மணிமேகலை' யில் காண்கின்றோம்.

பௌத்த மதத்தினரான சாத்தனார் மதப்பிரச்சாரத்திற்கென்றே இயற்றப்பட்ட "மணிமேகலை" யைக் கடவுள் வாழ்த்து இன்றியே துவக்கியிருப்பது தற்காலத்து மக்களுக்கு வியப்பாகத்தான் இருக்கும்.

ஆசிரியர் இளங்கோவடிகள் கடவுள் வழிபாட்டை முற்றிலும் புறக்கணிக்கவில்லை. புது மாதிரியான வகையில் அறிஞர் உலகம் ஏற்றுக்கொள்ளத் தக்க முறையில் கடவுள் வழிபாட்டைக் கடைப்பிடித்திருக்கிறார்.

சிலப்பதிகாரம் 'மங்கலவாழ்த்துக் காதை'யில் முதல் ஒன்பது வரிகளை ஆராயுமிடத்து, இளங்கோவடிகள் கடவுள் சக்திகளை வாழ்த்தி வணங்கியிருப்பது புலனாகும்.

சிலப்பதிகார காலத்தில், கண்ணால் காணமுடியாத கடவுளின் பிரதிநிதியாகவே மண்ணாளும் மன்னன் மதிக்கப்பட்டான். அதன் காரணமாகவே "இறை" என்ற தூய தமிழ்ச் சொல், மன்னனையும் தெய்வத்தையும் குறிக்கும் பொதுச்சொல்லாக வழங்குவதாயிற்று. திருவள்ளுவரும்,

**முறை செய்து காப்பாற்றும்**
**மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறட்பாவில் செங்கோல் மன்னனையும் தெய்வத்தையும் ஒன்று படுத்திக் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

வள்ளுவர் வகுத்த வழிப்படி, இளங்கோ வடிகளும் கடவுளையும் மன்னனையும் பிரிக்கமுடியாத சக்திகளாகப் பிணைத்து வைத்துப் போற்றியிருக்கிறார்.

திங்கள், ஞாயிறு, மழை ஆகிய மூன்றும் தெய்வீக சக்திகளாகும். கடவுள் என்ற ஒன்று உண்டு என்பதற்கு அந்தச் சக்திகள் சான்றாகவிளங்குகின்றன. கடவுள் நாம ரூப பேதங்களற்றவர். ஆனால், அவரால் படைக்கப்பட்டு அவராலேயே இயக்குவிக்கப் படுகின்ற இயற்கைச் சக்திகளுக்கு நாம, ரூப, தன்மை, பேதங்களுண்டு. அதற்கு திங்கள், ஞாயிறு, மழை ஆகிய மூன்றும் சான்றுகளாகும்.

ஆகவே, வெறும் 'நம்பிக்கை' அளவில், இருக்கின்ற-சமயவாதிகளால் கற்பிக்கப்பட்ட நாம ரூப பேதங்களின் மூலம் கடவுளை வழிபட விரும்பாத இளங்கோவடிகள், அந்தக் கடவுளால் படைக்கப்பட்ட கண்களுக்குக் காட்சியளிக்கின்ற இயற்கைச்சக்திகளைப் போற்றிப் புகழ்ந்து காப்பியம் எழுதுவாராயினார்.

அப்படியே, மன்னனை நேரடியாக வழிபடாமல், அவனுடைய சக்திகளாக விளங்கும் வெண்குடை, ஆக்ஞா சக்கரம், வள்ளண்மை ஆகிய மூன்றையும் போற்றினார்.

நாம்; கடவுளின் பெருமைக்குச் சான்றாக விளங்கும் திங்கள், ஞாயிறு, மழை ஆகியவற்றோடு செங்கோல் மன்னனுடைய சிறப்புக்குச் சான்றாக விளங்கும் வெண்குடை, சக்கரம், தண்ணளி ஆகிய மூன்றையும் முறையே உவமித்துப் போற்றினார் இளங்கோவடிகள்.

இதனால், இளங்கோவடிகள் கடவுளையும் மன்னனையும் ஒருசேர வாழ்த்தி வணங்கியிருப்பது புலனாகும். ஆம்; வணங்கியமுறை புதியது; துறை பழையது தான்.

பெருங் காப்பியங்களில் கடவுளை அல்லது மண்ணாளும் காவலனை காப்பியத் தலைவனாகக் கொள்வது வழக்கம். அதையொட்டியே கம்பரும் இராமாயணத் தலைவனாகிய இராமனை திருமாலாகவும், சீதையைத் திருமகளாகவும் கற்பனை செய்தார்.

இளங்கோவடிகள், சிலப்பதிகாரத் தலைவியும், தலைவனுமாகிய கண்ணகி--கோவலன் தம்பதிகளை தேவலோகத்தை விட்டிறங்கி பூலோகத்தில் அவதரித்த தெய்வீகப் பாத்திரங்களாகக் கற்பனை செய்யவில்லை. செல்வச் சிறப்புடைய வணிகர் குடியில் பிறந்தவர்கள் என்றே கூறுகின்றார். சிலப்பதிகாரம் சரித்திரச் சார்புடைய தென்பதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆயினும், கண்ணகி- கோவலன் தம்பதிகளை தெய்வீகச் சார்பிலிருந்து முற்றிலும் விலகியவர்களாக வைத்து கதை நடத்தவும் இளங்கோ விரும்பவில்லை போலும்! ஆகவே, தமிழ்த் தெய்வங்களான முருகப்பெருமானோடு கோவலனையும். வள்ளியம்மையோடு கண்ணகியையும் ஒப்பிட்டுப் பெருமைப் படுத்துகின்றார் இளங்கோவடிகள்.

'மங்கல வாழ்த்துக்கள் காதை'யில் கோவலனைக் **'கண்டேத்தும் செவ்வேள்'** என்று புகார் நகரத்துப் பெண்கள் போற்றிப் புகழ்ந்ததாகக் கூறுகின்றார். குன்றக் குரவையில், **'எம் குலத்து வள்ளி போல்வீர்'** என்று குன்றக் குறவர்கள் கண்ணகியைப் பாராட்டியதாகத் தகவல் தருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை கூறியவற்றால் இளங்கோவடிகள் சமய பேதங் கடந்த சமரச வாதி என்பதும், கண்ணால்காணக் கூடிய இயற்கைச் சக்திகளின் மூலமே கடவுளை வழிபட்டவர் என்பதும், தெய்வத்திற்குக் கற்பிக்கப்பட்ட நாம ரூப பேதங்களைத் தாம் பாராட்டாதவராயினும், மக்கள் நலனை முன்னிட்டு ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை ஆகியவற்றை இயற்றினார் என்பதும் புலனாகும் மற்றும், காப்பிய மரபையொட்டி சிலப்பதிகாரத் தலைவியையும் தலைவனையும் தெய்வ அவதாரங்களாகக் கூறாவிடினும், முருகன்-வள்ளி என்ற தெய்வங்களுக்கு நிகரானவர்களாகக் கூறியதன் மூலம், காப்பிய மரபையும் கடைப்பிடித்தார் என்பதையும் தெளிவாக உணரலானோம்.




# விவேகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்

சொந்தக்காரர்
**ஆ. மயில்வாகனம்**

இல: 22, பெரியகடை,
**யாழ்ப்பாணம்.**

பெனாறிஸ், மைசூர், பெங்களூர், ஜோஜெற் காஞ்சிபுரம் பட்டுச்சேலைகளும், பட்டுவேட்டி சால்வைகளும், கைத்தறி நெசவுத்துணிகளும் இங்கிலிஷ் பப்பிளின் ஸிம்றிக்ஸ், சேட்டிங் இன்னும் ஏராளமான ஜவுளித் தினிசுகளும் மற்றும் சாய்புச்சாமான்களும் விலைசகாயமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**இமயத்தின் எல்லைகண்ட தமிழ் என்றென்றும் வாழ்க.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலத்தில் சங்கத்தில் தொண்டாற்றிய பெரியார்கள்




திரு. வே. சங்கரப்பிள்ளை



திரு. பொ. கனகரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த காலத்தில் சங்கத்தில் தொண்டாற்றிய பெரியார்கள்



திரு. அ. கார்த்திகேசு



திரு. த. துரைரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார் தி. ஜ. ர. அவர்கள். தமிழ்நாட்டின் *Readers' Digest* ஆன "மஞ்சரி'யின் ஆசிரிய பீடத்தில் அமர்ந்து அறிவுப்பணி புரிகின்றார். 'கலாவல்லியில்' வெளியான இக்கட்டுரை அனுமதி பெற்றது.**

# பாஷையின் இயல்பு

*தி. ஜ. ர.*

பிரிட்டனில் எத்தனை பாஷைகள் இருக்கின்றன?

"கேட்க வேண்டுமா? ஒன்றே ஒன்று தான். ஆங்கிலம்" என்றே நம்மில் பெரும் பாலோர் சொல்லுவோம்.

உண்மையில் அங்கே ஆறு பாஷைகள் இருக்கின்றனவாம். வெவ்வேறான ஆறு பாஷைகள். ஒரே பாஷையின் சிதைவுகள் — 'டையலெக்ட்ஸ் — அல்ல; உண்மையிலேயே வேறுபட்ட பாஷைகள்; வெல்ஸ், கேலிக், மங்க்ஸ், கார்னிஷ், நார்மன் ப்ரெஞ்ச், ஆங்கிலம் — இப்படி ஆறு பாஷைகள்.

ஒரு காலத்தில், இன்றைய பிரெஞ்சின் மூலமான நார்மன் பிரெஞ்சு பாஷைதான் பிரிட்டனின் துரைத்தன பாஷையாக இருந்ததாம். அதையே இன்னும் சிலர் பிரிட்டனில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று ஆங்கிலம் துரைத்தன பாஷையாக இருந்தாலும், மற்ற ஐந்து பாஷைகளையுமே பேசுவோர் அங்கங்கே இருத்கத்தான் இருக்கிறார்கள். அந்த அந்த பாஷைகளை வளர்க்கவும் அவற்றில் கவிதை இலக்கியம் முதலியவற்றைப் படைக்கவும், அவற்றுக்குப் பரிசுகள் வழங்கவும் முயற்சிகள் நடந்து கொண்டேயிருக்கின்றன. கேலிக், பிரெஞ்ச் இரண்டிலும் ஒழுங்காக பி. பி. ஸி. ஒலிபரப்புக்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

இது மட்டும் அல்ல. ஆங்கில பாஷையையே வெவ்வேறு விதமாய்ப் பேசுகிறார்கள். நார்தம்பர்லாண்டில் உள்ள ஒரு தொளிலாளியும் டேவன்ஷயரில் உள்ள ஒரு தொழிலாளியும் ஒரே பாஷைதான் பேசுவார்கள். ஆனால் ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியாதாம். உச்சரிப்பு மட்டும் அல்ல, வார்த்தைகளே மாறியிருக்குமாம்.

"உலகம் முழுவதற்கும் இன்று ஒரே பாஷையை ஏற்படுத்தி வெற்றி காண்பதாக வைத்துக் கொள்ளுங்கள். பத்தே வருஷத்தில் அந்த ஒரே பாஷை பல விதமாய் மாறி விடுவதைக் காண்பீர்கள். இது மனித இயல்பு. விதம் விதமாய் மாறும் ஓர் ஆச்சரிய இயல்பு மனிதனிடம் இருப்பதாய்த் தோன்றுகிறது" என்று 'இங்கிலீஷ் டைஜெஸ்ட்' என்ற பத்திரிகையின் ஏப்ரல் இதழில் ஒரு குறிப்புச் சொல்கிறது.

பாரதத்தில் ஒரு காலத்தில் எப்படிச் சமஸ்கிருதம் உயர்தரக் கல்விக்கான பொதுப் பாஷையாக இருந்ததோ அதே போல, ஐரோப்பா எங்கும் லட்டீன் பொதுப் பாஷையாக இருந்த காலம் உண்டு. இன்று லட்டீன் ஒரு மூலைக்குப் போய்விட்டது. பொதுவாக அதை 'இறந்த' பாஷை என்கிறார்கள். ஆயினும், அதை இன்னும் ஐரோப்பியர் போற்றிக் கற்கிறார்கள். லட்டீன் பல ஐரோப்பிய பாஷைகளுக்கும் சொற்கள் உதவிப் பேருதவி புரிந்திருக்கிறது; இன்னமும் உதவிக்கொண்டிருக்கிறது.

லட்டீனுக்குப் பிறகு பிரெஞ்சு பாஷையே கிழக்கே ருஷ்யா முதல் மேற்கே இங்கிலாந்து வரைக்கும் உயர்தரக் கல்வி பாஷையாக வழங்கியது. ருஷ்யப் பிரபுக்களின் பிரெஞ்சு மோகத்தை, டால்ஸ்டாயின் நாவல்கள் கேலி செய்வதைக் காணலாம். பிரிட்டனில் நியூட்டன் தமது 'பிரின்ஸிப்பியா' என்ற அபூர்வ விஞ்ஞான நூலைப் பிரெஞ்சு பாசையிலேயே எழுதினர். இன்றோ அங்கங்கே அந்த அந்த பாசை வளர்ந்தோங்கிவிட்டது.

இங்கே இன்னொரு வரலாற்றையும் குறிப்பிடவேண்டும். "இது கட்டுக்கதை அல்ல; உண்மை" என்கிறார் இதைச் சொல்கிறவர். எம். ஆர். ஏ. தலைவர்களுள் ஒருவரான பீட்டர் ஹொவார்டு என்பவர்தான். சமீபத்தில் பெர்லின் ரேடியோவில் இந்த விபரத்தை அவர் ஒலிபரப்பினர்.

"என் பழைய நண்பர் ஒருவரைப் பற்றி எனக்கு எப்போதும் ஞாபகம். அவரைப் பற்றிய உண்மை வரலாறு இது. அவர் ரூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர். சுரங்கத் தொழிலாளி. இருபத்தாறு வருசகாலம் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியில் அவர் சேர்ந்திருந்தார். பெரிய லட்சியவாதி. உலகம் முழுவதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமைப்படுத்திவிட வேண்டும் என்று ஆசை கொண்டார். உலகத்திலுள்ள அத்தனை ஜனங்களும் மட்டில் ஒரே பாஷை பேசுவார்களானல் உலகமே ஒற்றுமைப்பட்டுவிடும் என்று அவர் எண்ணினர். இதனல் அவர் நவீன உலகப் பொதுப் பாஷயான எஸ்பெராண்டோ என்பதைக் கற்றுக் கொள்ளத் தொடங்கினர்,

"வெகு நாள் வரைக்கும் அதை அவர் கற்றுக் கொண்டு வந்தார். அப்புறம் ஒரு நாள் அவருக்குத் திடீரென்று ஒரு யோசனை எழுந்தது. 'ஆமாம், ஜெர்மன் பாஷை பேசுகிறேன்; என் பெண்டாட்டியும் ஜெர்மன் பாஷை பேசுகிருள். இப்படியிருந்தும், நானும் அவளும் பல வருஷங்களாகக் கடுவன் பூனைகள் மாதிரி ஒருவருக்கொருவர் எந்நேரமும் சண்டையிட்டுக்கொண்டேயிருக்கிறேமே, ஏன்? ஒற்றுமைக்குப் பொதுப் பாஷை அல்ல; வேறு ஏதோ தேவையாக இருக்கிறது' என்று எண்ணினர்.

"முதலில் வீட்டிலே ஒற்றுமை ஏற்படுத்திக்கொள்ள முயன்ருர். அதற்கு அவருடைய பழைய ஜெர்மன் பாஷையே மிக்க உபயோகமாயிருந்தது. அக்கம் பக்கத்தில் உள்ளவரோடு அவர் அன்பாய்ப் பழகத் தொடங்கினர். தம் வீட்டிலே சமாதானம் தோன்றி விட்டதால், உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் ஒரு சக்தியாகி விட்டார்,

இவற்றையெல்லாம் நன்ருகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்,

எந்த ஒரு பாசையும் நிரந்தரமாய்க் கல்விப் பாசையாக இருந்து வரமுடியாது. சிலகாலம் வேண்டுமானல் இருந்து வரலாம். எந்த அந்நிய பாசையும் ஒரு மக்களிடையே நிரந்தரமாய்த் துரைத்தன பாசையாக இருந்து வர முடியாது; தமிழனுக்கு ஹிந்தி ஓர் அந்நிய பாசை தான். எந்த ஒரு பாசையும் மக்களையெல்லாம் ஒற்றுமைப்படுத்திவிட முடியாது; மக்களின் மனமும் குணமும் உழைப்புமே ஒற்றுமையை உண்டாக்கும்.

ஒரே பாசைகூட என்றென்றும் ஒரே நிலையில் இருந்து வராது. பாசை என்பது ஒரே ஒருவனுடைய; ஒரே கூட்டத்தினுடைய— ஒரே ஓர் இனத்தினுடைய— தனிச் சொத்தல்ல. பேசுகிறவனுக்கெல்லாம் சொந்தம் பாசை; பேசுகிறவருக்கும் கற்கிறவருக்கும் கருத்தைச் சொரியும் கருவியாகக் கொண்டவர்களுக்கும் இந்த அனைவருக்கும் பொது உடைமை பாசை. பாஷையை யாரும் முளை போட்டுக் கட்டிவைக்க முடியாது.

நாம் அகநானூற்றுக் காலத்திலே வாழவில்லை; புறநானூற்றுக் காலத்திலே வாழவில்லை, பத்துப் பாட்டுக் காலத்திலே வாழவில்லை. பஞ்சகாவியங்களின் காலத்திலே வாழவில்லை. கம்பராமாயண காலத்திலே வாழவில்லை. 'தினமணி', 'சுதேசமித்திரன்' காலத்திலே வாழ்கிறேம். அணுகுண்டுக் காலத்திலே வாழ்கிறேம். ஐ. நா. வின் காலத்திலே வாழ்கிறேம். ரெயில், பஸ், கார், மின்சாரம், ஸினிமா, ரேடியோ இவை அனைத்தும் மூலை முடுக்கெல்லாம் தோன்றிவிட்ட காலத்திலே வாழ்கிறேம் இவற்றையும் தமிழரெல்லாம் சிந்திக்கவேண்டும்.

அரசியலும் பொருளாதாரமும் சமய சமூக இயக்கங்களும் பாசையைப் பாதிக்கின்றன. ரெயிலும் பஸ்ஸும் விமானமும் மின்சாரமும் ரேடியோவும் பாசையைப் பாதிக்கின்றன. ஊருக்கு ஊர் பரவிக் கிடக்கும் மக்களின் பிரதேசச் சூழ்நிலைகள் பாசையைப் பாதிக்கின்றன.

விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் கூடச் சில 'சொற்கள்' தெரியும் — பிராணிகளின் உணர்ச்சியைத் தெரிவிக்கும் 'சொற்கள்'. ஆனல், அதைத் திட்டமான பொருளில் 'பாசை' என்று சொல்ல முடியாது. சமூக சம்பிரதாயமான ஒலிக் குறிப்புகளின் மூலம் உள்ளக் கருத்தை வெளியிடுவதே பாஷை. அந்தச் சம்பிரதாயம், விரிவடைந்து கொண்டே போகும் — வாழ்க்கை விரிய விரிய அது விரிவடைந்துகொண்டு போகும். புதுப்புது அநுபவங்களை ஒட்டிய புதுப் புதுக் கருத்துக்களை வெளியிட வெளியிடப் பாசையும் புது மெருகு பெற்றுப் புது வளர்ச்சி பெறும். அதை யாரும் தடுக்க முடியாது. வெள்ளத்துக்கு அணைபோடுவது போல அற்ப இடுக்கண்களை அதற்குச் சிலர் விளைவிக்கலாம். ஆனல், அவற்றையெல்லாம் மீறி அது வளர்வது நிச்சயம். ஒரு பாஷை அல்ல; பாரதத்தின் பதினலு பாசைகளுந்தான் வளரும். மக்கள் வளர வளரப் பாசையும் வளரும். பாசை வளர வளர மக்களும் வளர்வார்கள். இந்தப் பரஸ்பர வளர்ச்சிக்கு இடையூறு செய்பவர்கள், பாசையின் அன்பர்கள் அல்ல; பகைவர்கள். காலத்துக்கேற்ற போக்குக்களையெல்லாம் ஒட்டிப் பாசைக்கும் கல்வி ஒளியின் பரப்புக்கும் சமூக வளர்ச்சிக்கும் உதவுவதே அறிவுடைமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOR JEWELS & BRILLIANT

FOR SOVEREIGN JEWELS AND BRILLIANTS

*ORDERS ARE PROMPTLY EXECUTED*

TELE { phone: Nos. 303 & 235
grams; HADJISONS, JAFFNA

**Hadji V. M. M.**

## ABOOSALIH & SONS

SOVEREIGN JEWELLERS

*57, Kannathiddy,* JAFFNA.

**வைரங்களுக்கும் தங்கப்பவுண் நகைகளுக்கும்**

## ஹாஜி வி. எம். எம்.

## அபுஸாலிஹ் அன் சன்ஸ்

**தங்கப்பவுண் நகை வியாபாரிகள்**

ரெலிபோன் நம்பர்கள்: 303 அன் 235
தந்தி விலாசம்: ஹாஜிசன்ஸ், யாழ்ப்பாணம்.

**57, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



உயர்ந்த ரகம் நிதான விலை

# அப்பையா அன் கோ

சகலவிதமான

பஞ்சுறிஸ் மணிப்புரி கூறைத்தினிசுகள், சேலம், மைசூர் பெங்களூர், காஞ்சீபுரம் பட்டுவகைகள், பருத்திப்பிடவைத்தினுசுகள், கைத்தறி நெசவுத்துணிகள், கம்பளிச்சாமான்கள், சுத்தக் கதர்த் துணிகள், முதலிய பிடவைத்தினிசுகளும் சேட்ஸ் வகைகளும் D. M. M. பாரிஜாத ஊதுபத்திகள், சூட்கேஸ் கோவில்பட்டுக் குடைகளும் விலைசகாயமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

போன். 506 தந்தி "வணக்கம்"

பங்காளர் { ஆ. அப்பையா
செ. காசிப்பிள்ளை

82, காங்கேசன்துறை றோட் : : யாழ்ப்பாணம்.

# கலைச் செல்வி

ஈழநாட்டின் தலைசிறந்த தமிழ் இலக்கிய மாத இதழ்.

பாரதிக்குப்பின் (விமர்சனக்கட்டுரை): கனக செந்திநாதன்.
அண்ணாமலை நகரில் (பிரயாணக்கட்டுரை): வித்துவான் வேலன்.
உனக்காகக் கண்ணே (தொடர்கதை): சிற்பி.

ஆகிய தொடர் அம்சங்களுடன்
சுவையான சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலியவை வெளியாகின்றன.
மாணவர்-குழந்தைகள் திட்டத்தில் மாணவர்கள் சேரலாம்.

**தனிப்பிரதி: 25 சதம்.**
ஆண்டுச்சந்தா (மலருட்பட) 4 ரூபா

கலைச் செல்வி
கந்தரோடை : : சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி-வடக்குப் பகுதியிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளும் ஆசிரியர்களும்

அளவெட்டி சதானந்த வித்தியாசாலை.

1. திரு. அ. பொன்னுத்துரை
2. ,, வ. நல்லதம்பி
3. ,, கு. வ. கந்தையா
4. ,, வ. தம்பிப்பிள்ளை
5. ,, ச. சச்சிதானந்தசிவம்
6. ,, வெ. சம்பந்தர்
7. ,, மு. சங்கரப்பிள்ளை
8. ,, நா. இளையதம்பி
9. திருமதி ஆ. சிவதேவன்
10. செல்வி அ. தங்கம்மா
11. ,, பொ. மகேஸ்வரி
12. ,, சி. மனோன்மனி
13. திருமதி ச. பவளம்மா

அளவெட்டி அருணசலம் வித்தியாசாலை

1. திரு. க. கந்தையா
2. ,, சி. கதிரவேலு
3. ,, வை. சோமசுந்தரம்
4. திருமதி அ. சேதுப்பிள்ளை
5. ,, வீ. சி தங்கம்
6. திரு சி. விஜசித்தம்பி
7. திருமதி உ. நாகரத்தினம்
8. திரு. ச. இராசநாயகம்
9. ,, சி. கந்தையா
10. திருமதி ஞா. சம்புலிங்கம்

அளவெட்டி ஞானோதய வித்தியாசாலை

1. திரு. வை. நடராசா
2. ,, அ. வீ. சின்னத்தம்பி
3. ,, அ. பொ. அ. அருணசலம்
4. ,, ந. வல்லிபுரம்
5. ,, செ. தெக்ஷணமூர்த்தி
6. ,, த. சிவலிங்கம்
7. திருமதி அ. வள்ளியம்மை
8. ,, சி. விசாலாட்சி
9. ,, வை. பொன்னம்மா
10. செல்வி ச. புஸ்பவதி

அளவெட்டி சென் மேரி பாடசாலை

1. திரு. வை. சா. முத்துக்குமாரு
2. திருமதி அ. மனுவேற்பிள்ளை
3. செல்வி ஞா. அமிர்தநாயகம்

அளவெட்டி தெற்கு R. C. பாடசாலை

1. திரு. P. ஆசீர்வாதம்
5. திருமதி M. பத்திநாதர்
3. திரு. M. F. லோப்பையா
4. ,, E. R. ஆசீர்வாதம்

அளவெட்டி வடக்கு அ. மி. பாடசாலை

1. திரு. ஆ. சின்னத்தம்பி
2. திருமதி பூ. தங்கராசா
3. ,, பா. கனகரத்தினம்
4. திரு. சீ. ரு. துரையையா
5. செல்வி ஜெ. கார்த்திகேசு

இளவாலை மடம் தமிழ்ப்பாடசாலை

1. சிஸ்ரர் மேரி விகோறி
2. ,, மேரி பொவின்
3. ,, மேரி ஹோரர்ட்டன்ஸ்
4. ,, மேரி ஒவ் சென்போல்
5. ,, மேரி ரேஸ்
6. ,, மேரி தெக்ளா.
7. திருமதி அன்னமறியா சமரக்கோன்
8. ,, அன்னம்மா இம்மானுவேல்
9. ,, அன்னப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
10. ,, ஸ்ரெலா ஜோன்பிள்ளை
11. ,, லூட்ஸ்ரத்தினம் சின்னையா
12. ,, மேரிதிரேஸா இராசநாயகம்
13. செல்வி நாகேஸ்வரி தம்பையா
14. ,, மேரிநாயகம் கொன்ஸ்ரன்ரைன்
15. ,, றீற்ரு கிறகோரி
16. ,, பரிபூரணம் அருளம்பலம்
17. ,, ஸ்ரெலா மர்சிலின்
18. ,, மேரியோசேப்பின் ஜெயமணி பீற்றர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்கண்டான் வித்தியாசாலை இளவாலை

1. திரு. ச. சுப்பையா
2. ,, ச. நாகநாதர்
3. ,, சு. வல்லிபுரம்
4. ,, வ. செல்லையா
5. ,, ஆ. முத்துக்குமாரு
6. ,, மு. வேலாயுதபிள்ளை
7. ,, க. செல்வத்துரை
8. ,, த. செல்லப்பா
9. ,, க. பாலசிங்கம்
10. திருமதி த. மகேஸ்வரி
11. ,, மா. நாகம்மா
12. செல்வி க. கோகுலாம்பாள்

## இளவாலை றோ. க. த. ஆ பாடசாலை

1. திரு. ச. ஞானப்பிரகாசம்
2. திருமதி தி. அடைக்கலமுத்து
3. திரு. ம. சே. பேர்ணண்டோ
4. ,, அ. யோசேவ்
5. ,, தா. அருளானந்தம்

## உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை

1. பிரம்ம ஸ்ரீ தி. சுப்பிரமணிய ஐயர்
2. ,, க. சின்னத்தம்பி
3. திருமதி அ. சின்னத்தம்பி
4. ,, தி. மயில்வாகனம்
5. திரு. வே. மயில்வாகனம்
6. செல்வி செ. இராசமுத்து
7. திரு. மூ. நடராசா
8. திருமதி ந. செல்லத்துரை
9. ,, பே. ம. அரியரத்தினம்
10. திரு. மா. கணேசமூர்த்தி
11. ,, வை. யோகீஸ்வரன்
12. ,, சி. சிவபாலசிங்கம்
13. ,, சி. நேசமலர்

## உடுவில் அ. மி. த. க. பாடசாலை

1. K. I. தேவதாசன்
2. திருமதி P. நடராசா
3. செல்வி T. வயிரவி
4. திருமதி S. சவிரிமுத்து
5. செல்வி M. பீதாம்பரம்
6. ,, A. மைக்கேல்
7. திருமதி S. அப்புத்துரை
8. செல்வி M. வேலுப்பிள்ளை
9. ,, R. அபிமன்னசிங்கம்

## உடுவில் மான்ஸ் த. க. பாடசாலை

1. திரு. க. வைத்திலிங்கம்.
2. ,, ச. செல்வத்துரை
3. திருமதி ந. மகேஸ்வரி
4. ,, செ. சின்னம்மா

## உடுவில் பரிசுத்த செபமாலை நாயகி பாடசாலை

1. திரு. சா. கு. பத்திநாதன்
2. திருவாட்டி. பாக்கியம் செக்கேஸ்பிள்ளை
3. திரு. நீ. கொன்ரன்ரையின்

## மல்வத்தை றோ. க. பாடசாலை

ஆசிரியர்கள் :—

1. திரு. பா. வெ. யோசேப்பு
2. திருமதி செ. அ. பத்திநாதன்
3 ,, சீ. பீற்றர்
4 திரு. ஆ. இம்மனுவேல்

## ஏழாலைவடக்கு விக்னேஸ்வர வித்தியாசாலை

1. திரு. சீ. தம்பிப்பிள்ளை
2. ,, செ. துரைசிங்கம்
3. ,, வ. முத்துக்குமாரு
4. திருமதி ப. தம்பிப்பிள்ளை
5. திரு. க. சொக்கலிங்கம்.
6. திருமதி க. வயித்திலிங்கம்
7. திரு. ஆ. நவரத்தினம்
8. திருமதி அ. மார்க்கண்டு
9. ,, அ. பொன்னுச்சாமி
10. திரு. செ. சதாசிவம்
11. ,, க. பரமானந்தம்
12. ,, ஆ. கந்தையா
13. திருமதி ப. குமாரசாமி
14. செல்வி த. பொன்னையா
15. திருமதி இ. இராசரத்தினம்
16. ,, அ. தில்லைநாதன்

## ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை

1. திரு. க. சுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ,, மு. பாலசுப்பிரமணியம்
3. ,, நா. வேலுப்பிள்ளை
4. ,, க. செல்வத்துரை
5. ,, ஞா. சதாசிவம்
6. ,, வை. உமையாத்தை
7. ,, ச. மெஞ்ஞான பூரணம்
8. ,, தி. சிவயோகமலர்
9. ,, செ. வேலுப்பிள்ளை
10. ,, மு. செகதாம்பிகை

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்

1. திரு. மு. வைரவநாதன்
2. ,, தா. நடேசு
3. ,, ச. இராமலிங்கம்
4. ,, பே. இ. சண்முகநாதன்
5. திருமதி க. நவமலர்
6. ,, நா. பாலசிங்கம்
7. ,, சி. இன்பநாயகம்

ஏழாலை வடக்கு அ. மி. பாடசாலை

1. திரு. மு. செல்லையா
2. ,, வி. முருகேசு
3. ,, க. அப்புத்துரை
4. திருமதி அ. செல்லையா
5. ,, பு. சின்னையா
6. ,, ப. இராசையா

ஏழாலை றே. க. பாடசாலை

1. திரு. சீ. ஜெறமியாஸ்
2. ,, யோ. ஆரோக்கியம்
3. ,, சீ. இம்மனுவேல்
4. செல்வி க. எலிசபேத் அன்னரெத்தினம்
5. செல்வி பே. நவமணி

ஏழாலை தெற்கு அ. மி. பாடசாலை

1. திரு. த. துரைரத்தினம்
2. திருமதி அ. துரைரத்தினம்
3. திரு. ந. தம்பு
4. ,, S. இரத்தினம்
5. திருமதி ஞா. குணநாயகம்
6. ,, ம. தேவசகாயம்
7. ,, நவரத்தினம்
8. செல்வி G. சதாசிவம்
9. ,, அ. சீனி

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

1. பிரம்மஸ்ரீ சு. சிவசுப்பிரமணிய ஐயர்
2. திரு. வே. அப்புத்துரை
3. ,, இ. திருநாவுக்கரசு
4. திருமதி. இ. தம்பாபிள்ளை
5. ,, இ. சின்னப்பா
6. திரு ஆ. கனகரத்தினம்
7. ,, ஐ. இராசரத்தினம்
8. ,, சு. சின்னத்துரை
9. ,, த. வல்லிபுரம்
10. ,, வி. வைத்தியநாதன்
11. திருமதி ப. சண்முகநாதன்
12. ,, பா. சீவரத்தினம் (பதில்)
13. செல்வி ஆ. பூமணி ,,
14. திரு மு. அருளையா ,,
15. ,, க. புவனேந்திரநாதன் ,,

காங்கேசன்துறை றே. க. பாடசாலை

1. திரு. வ. சிங்கராசா
2. திருமதி A. பெனடிக்ற்
3. ,, கி. அ. அகஸ்ரீன்
4. திரு. வை. சரவணமுத்து
5. ,, நீ. அந்தோனிப்பிள்ளை
6. ,, ச. சின்னப்பு
7. திருமதி ஏ. மேரியோசேப்பு
8. திரு. ஆ. பிலுப்பையா
9. ,, வ. இராசையா

நகுலேஸ்வர வித்தியாலயம் கீரிமலை

1. திரு. வ. கந்தையா
2. ,, செ. நடேசு
3. செல்வி வ. தனபாக்கியம்
4. திருமதி அ. சீதாலட்சுமியம்மா
5. திரு. சீ. கனகசபை
6. ,, ஆ. வேலுப்பிள்ளை
7. ,, கா. சரவணமுத்து

குரும்பசிட்டி த. க. பாடசாலை

1. திரு. சீ. கணபதிப்பிள்ளை
2. ,, சீ. வைத்திலிங்கம்
3. ,, மு. இராமலிங்கம்
4. ,, த. இராசரத்தினம்
5. ,, நா. சிவசாமி
6. ,, அ. அருமைநாயகம்
7. திருமதி சி. மங்களேஸ்வரி
8. ,, க. தனேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொல்லங்கலட்டி தமிழ்க் கலவன் சைவ வித்தியாசாலை

1. பிரமஸ்ரீ ப. சிவானந்தையர்
2. திரு. சி. சின்னத்துரை
3. ,, க. சுப்பிரமணியம்
4. ,, பொ. நாகரத்தினம்
5. ,, ச. செல்லப்பா
6. திருமதி க. பறுபதம்
7. செல்வி வே. மஞ்ஞெண்மணி
8. ,, சி. பரமேஸ்வரி
9. ,, மா. இராசமணி
10. திருமதி க. அன்னம்மா
11. செல்வி ச. செல்லமுத்து

## சங்கானை மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை

1. திரு. சி. கார்த்திகேயர்
2. ,, க. சிற்றம்பலம்
3. ,, ந. திருநாவுக்கரசு
4. ,, மா. சின்னத்தம்பி
5. திருமதி க. தங்கரத்தினம்
6. செல்வி மா. பரஞ்சோதி
7. ,, மா. தம்பையா

## சிறுவிளான் கனகசபை வித்தியாசாலை

1. திரு. ச. அமிர்தலிங்கம்
2. ,, செ. இராசரத்தினம்
3. திருமதி நா. இ. கீர்த்திசிங்கம்
4. செல்வி ஆ. யசோதாதேவி
5. ,, ஆ. செல்லப்பிள்ளை
6. ,, வை. நாகம்மா
7. ,, ச. வீரசிங்கம் (பதில்)

## சில்லாலை ரே. க. பெண் பாடசாலை

1. சிஸ். மேரி பப்ரிஸ்ற்
2. மேரி மரியாம்பிள்ளை நல்லையா
3. மாகிறேற்றம்மா ஜேம்ஸ்
4. மேரி செசிலியா இராயப்பு
5. மேரி தெரேஸ் மனுவேற்பிள்ளை
6. சிஸ். டி. நசரேத்
7. ,, யூக்கறிஸ்ரா
8. ,, பெர்ப் பெத்துவா
9. மேரி யூஜின் ஞானப்பிரகாசம்
10. சிவபாக்கியம் பாலசிங்கம்
11. பெர்ணதேத் அருளானந்தம்

## சில்லாலை றே. க. ஆண்பாடசாலை

1. திரு. வ. சாமிநாதர்
2. ,, மு. சுப்பிரமணியம்
3. ,, ப. சுவாம்பிள்ளை
4. ,, அ. வஸ்தியாம்பிள்ளை
5. ,, நீ. சுவாம்பிள்ளை
6. ,, லோ. யோ. பெனடிக்ற்
7. ,, வி. றேசமுத்து

## சுன்ஞகம். மயிலணி சைவ வித்தியாசாலை

1. திரு. மா. குமாரஸ்வாமி
2. ,, க. இளையதம்பி
3. திருமதி ஆ. ஆசீர்வாதம்
4. திரு. ம. முத்துத்தம்பி
5. ,, நா. பொன்னம்பலம்
6. ,, வே. சின்னையா
7. திருமதி. சி. சின்னையா
8. திரு. ச. விநாயகரத்தினம்
9. செல்வி, சி. செந்தாமரைச்செல்வி
10. திரு, த. இராசையா
11. ,, செ. இரத்தினசாமி
12. செல்வி மு. சிவசோதி
13. ,, சு. சரோஜனிதேவி பதில்
14. திரு. சு. தம்பையா ,,
15. திருமதி ச. இலட்சுமி ,,
16. திரு. ச. கந்தசாமி ,,
17. செல்வி சி. இராமலிங்கம் ,,

## சுன்ஞகம் திருஞான சம்பந்த வித்தியாசாலை

1 திரு ஆ. தம்பிப்பிள்ளை
2 ,, சி. வல்லிபுரம்
3 திருமதி த. மயில்வாகனம்
4 திரு நா. இளையப்பா
5 ,, த. நடராசா
6 ,, க. வேலுப்பிள்ளை
7 ,, சி. தம்பித்துரை
8 ,, கா. கனகசபை
9 திருமதி இ. சிவானந்தன்
10 ,, த. இராசையா
11 திரு சு. வேலுப்பிள்ளை
12 திருமதி செ. செல்வத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 FEB 2019 2024
13 FEB 2019



2024
15 MAR 20
2024

## சுன்ணுகம் நாகேஸ்வரி வித்தியாசாலை

1 திரு க. நாகலிங்கம்
2 ,, சி. வேலுப்பிள்ளை
3 ,, சி. சின்னையா
4 செல்வி மு. இராசாத்திப்பிள்ளை
5 திரு எ. செல்லத்துரை
6 திரு ச. தம்பிராசா
7 திருமதி ஏ. கனகம்மா

## சுன்ணுகம் ஸ்ரே. க. பாடசாலை

1 திரு நீ. இராஜேந்திரம்
2 செல்வி அ. ம. பாவிலுப்பிள்ளை
3 ,, அ. செல்லப்பா

## தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை

1 திரு செ. சிவசுப்பிரமணியம்
2 ,, சி. செல்வத்துரை
3 ,, நா. ஆறுமுகம்
4 ,, தி. சுந்தரமூர்த்தி ஐயர்
5 ,, பொ. கனகரத்தினம்
6 ,, ச. பொ. கந்தையா
7 திருமதி வ. சின்னத்துரை
8 ,, பா. வைத்திலிங்கம்
9 ,, த. அ. கனகசிங்கம்
10 ,, கா. முருகையா
11 செல்வி க. மரகதவல்லி

## நுணசை அ. மி. த. க. பாடசாலை

1 திரு யோ. ஜே. இரத்தினராசா
2 செல்வி டெ. ப. சீவரத்தினம்
3 திரு V. சிவராசா

## தையிட்டி கணேச வித்தியாசாலை

1. திரு க. கயிலாயபிள்ளை
2 ,, பொ. தங்கவேலு
3 செல்வி க. வாலாம்பிகை

## பன்னுகம் வடக்கு அ. மி. பாடசாலை

1 திரு அ. கார்த்திகேசு
2 சி. செல்லத்துரை
3 திருமதி க. வல்லிபுரம்
4 திரு ந. செல்வரத்தினம்
5 திருமதி அ. செல்லத்துரை
6 திரு ந. செல்வரத்தினம்
7 ,, சி. கந்தையா
8 திருமதி இ. இரத்தினராசா
9 ,, பா. ஞானரத்தினம்
10 திருமதி கு. பொன்னுத்துரை
11 திரு சு. விசுவலிங்கம்
12 செல்வி ம. நல்லதம்பி (பதில்)

## பன்னுலை சேர் கனகசபை வித்தியாசாலை

1 திரு கா. கதிர்காமத்தம்பி
2 ,, வி. சங்கரப்பிள்ளை
3 ,, ஆ. காசிநாதர்
4 ,, இ. நமசிவாயம்
5 ,, கா. சுப்பிரமணியம்
6 ,, ச. சண்முகநாதன்
7 ,, சி. சுப்பிரமணியம்
8 திருமதி க. செல்லாச்சி
9 செல்வி ம. சரஸ்வதியம்மா
10 ,, வை. செகதீஸ்வரியம்மா
11 திருமதி த. குமாரசுந்தரம்
12 ,, செ. சிவபாக்கியம்
13 செல்வி வே. கமலாதேவி (பதில்)

## பண்டத்தரிப்பு ஜசிந்தா பாடசாலை

1 சிஸ்ரர் மேரி அகஸ்ரீன்
2 ,, மேரி விசிற்றேசன்
3 ,, மேரி லெயோலா
4 ,, மேரி யோசெவ்வின்
5 திருமதி மேபிள் விருன்ஸிஸ்
6 ,, பியாற்றிசிஸ் பாலரத்தினம்
7 ,, ஜெயராணி அருளப்பா
8 செல்வி ஜேர்மேனம்மா வஸ்தியாம்பிள்ளை
9 ,, மேரிலூட்ஸ் சூசைப்பிள்ளை
10 ,, இமெல்டா கபிரியேற்பிள்ளை
11 திரு அந்தோனிப்பிள்ளை மாசில்லாமணி

## பிராம்பத்தை அ. மி. பாடசாலை

1 திரு சி. சிவக்கொழுந்து
2 செ. இரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 செல்வி R. B. சிவரத்தினம்
4 திரு நா. செல்லையா
5 ,, தி. சிவப்பிரகாசம்

சரஸ்வதி வித்தியாசாலை பேரயிட்டி

1 திரு ந. சிவகுரு
2 திரு ச. சிவசங்கரன்
3 திருமதி ச. சிதம்பரம்

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை.

1. திரு. க. நாகரத்தினம்
2. ,, சி. பொன்னையா
3. ,, கா. நமசிவாயம்
4. ,, க. சுப்பிரமணியம்
5. ,, சு. பற்குணம்
6. ,, சோ. சோமாஸ்கந்த ஐயர்
7. ,, வீ. தம்பிமுத்து
8. திருமதி. த. விஸ்வலிங்கம்
9. ,, ப. தட்சணாமூர்த்தி
10. செல்வி ந. தங்கலட்சுமி
11. ,, இ. ஆறுப்பிள்ளை
12. ,, சே. சுபத்திராதேவி

மல்லாகம் அ. மி. பாடசாலை

1 திரு J. தேவசகாயம்
2 ,, S. பொன்னுத்துரை
3 ,, P. விஸ்வலிங்கம்
4 திருமதி M. S. கந்தையா
5 ,, G. T. சின்னத்தம்பி
6 ,, R. S. செல்வரத்தினம்
7 செல்வி T சபாரத்தினம்
8 திரு A. D. நமசிவாயம்
9 ,, T. துரைசிங்கம்
10 ,, S. செல்லகண்டு
11 செல்வி P. கந்தையா
12 ,, M. இராசரத்தினம்

மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலை

1. திரு. வே. வ. இராமலிங்கம்
2. ,, சி. சிவசுப்பிரமணியம்
3. ,, க. கதிர்காமர்
4. ,, பொ. இராசரத்தினம்
5. ,, சி, இராமுப்பிள்ளை
6. திருமதி சி. கணபதிப்பிள்ளை
7. ,, சி. செல்லம்மா
8. ,, நா. இராமலிங்கம்
9. ,, நா. இராசம்மா
10. ,, ம. கதிர்காமநாதன்

மயிலிட்டி றே. க. த. க. பாடசாலை

1 ......
2 திருமதி K. T. ஞானப்பிரகாசம்
3 திரு A. அந்தோனிமுத்து
4 ,, L. மரிசலீன்
5 திருமதி L. திருச்செல்வம்
6 செல்வி G. தமியாம்பிள்ளை
7 திருமதி B. மரியாம்பிள்ளை
8 செல்வி B. அந்தோனிப்பிள்ளை
9 திருமதி D. மாட்டீன்
10 ,, F. டானியேல்
11 செல்வி P. சுப்பர்
12 ,, A. லுக்கேசுப்பிள்ளை

மாவிட்டபுரப் வடக்கு அ. மி பாடசாலை

1 திரு சி. அருமைநாயகம்
2 ,, த. குமாரசிங்கம்
3 ,, செ. இராசையா
4 ,, இ. சின்னத்துரை
5 திருமதி அ. சுவாமிநாதன்
6 ,, ஞா இராசரத்தினம்
7 திரு இ இரத்தினசிங்கம்
8 செல்வி சு. தம்பிமுத்து
9 திரு B அமிர்தநாயகம்
10 திருமதி சி. கார்த்திகேசு
11 செல்வி ஜே. நல்லதம்பி

மாரீசன்கூடல் றோ. க. பாடசாலை

1 திரு M. R. அல்பேட்
2 ,, S. பொன்னையா
3 ,, A. கந்தசாமி
4 திருமதி T S. தெரேசம்மா
5 செல்வி T. கந்தையா
6 திரு S. மரியாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org